ஸாங்க்யதந்த்ரஸித்தமான ப்ரதாநகாரணவாதமானது ஸமீசீநயுக்திஸித்தமா; உத ந, என்று ஸம்ஶயம் । ஸமீசீநயுக்திஸித்தமென்று பூர்வபக்ஷம் । குத: ஸத்த்வரஜஸ்தமோமயமான ஜகத்துக்கு ஸத்த்வரஜஸ்தமஸ்ஸுக்களுடைய ஸாம்யரூபமான ப்ரதாநமே காரணமாகை யுக்தம் । இந்த பக்ஷத்தை நிரஸிக்கிறார் ।

ரசநாநுபபத்தேஶ்ச நாநுமாநம் ப்ரவ்ருத்தேஶ்ச ॥

அநுமாநம் ப்ரதாநம், ஜகத்காரணமன்று । குத:, ரசநாநுபபத்தே: ப்ராஜ்ஞனான பரமேஶ்வரனாலே அநதிஷ்டிதமாய் அசேதநமான ப்ரதாநத்துக்கு விசித்ரமான ஜகத்தினுடைய ரசநம் கூடாமையாலே, ப்ரவ்ருத்தேஶ்ச, ரசநாதிநிர்மாண

த்துக்கு ஹேதுக்களான த்ரவ்யாதிகளான சப்தங்கள் ஸமா நாதிகரண்யத்தாலே வ்ருத்தி நிமித்தங்களாய்க்கொண்டே ஸமாநாதிகரண்யாதிகளில் ப்ரவ்ருத்திக்கையாலே ஒரு த்ரவ்யத்தினுடைய குணங்களாக ப்ரஸித்தங்களான சௌக்ல்யாதிகுணங்களுக்குப்போலே த்ரவ்யவாசகங்களான ஸகலசப்தங்களுக்கு ப்ரதாநத்வம் கூடாதென்னு ஸகாரத்தாலே ஸமுச்சிதம் ॥

ஸி ப்ரயோகவ்யவஸ்தாத ॥ உ ॥

ப்ரயோகமானது வ்யாக்யாநவிஷயமாய்க்கொண்டே உபயோக வரிணதிக்கிறப்போலேயும் ஐகமானது வ்யாக்யாநவிஷயமாய்க்கொண்டு நாஸிகாஸம்மதாதி விவிக்த ரஸமாக வரிணதிக்கிறப்போலேயும் கேவலாநவ்யாநமும் ஜகதாகாரமாக வரிணதிக்கை உபபந்நமென்கிறது । இந்த மதத்தைப் பரிக்ஷிக்கிறார் । ததாஸி । அந்த ப்ரயோகத்திலேயும் அந்த ஐகத்திலேயும் வ்யாக்யாவிஷயம் பொருந்தாதிருந்து உதாஹரணத்தியாலே விசேஷமாகையாலே அதுவும் பக்ஷத்தில் சேர்ந்ததுதான் என்னும் கருத்து

ஸி. வ்யதிரேகாநவஸ்திதேரநபேக்ஷத்வாத் ॥ ௩ ॥

வ்யதிரேகேண அநவஸ்திதே: ஸமுதாயத்திலிருக்கிறதாயும் ப்ரதிஸமவாயமான வ்யக்தியாலேயாவதால் உபலக்ஷிதமாயுமுள்ள அவஸ்திதிக்கு அபாவம் ப்ரஸங்கிக்கையாலென்னபடி । அத்தால் வ்யாக்யாநவிஷயத்வ்யாநம் காரணமன்னு । அநபேக்ஷத்வாத் ப்ரயாநத்துக்கு அபேக்ஷயில்லாமையாலே, ஸதா ஜகத்ஸ்ருஷ்டி ப்ரஸங்கமும்வரும் । ப்ரஜ்ஞாபரிணா மத்தைஒப்புக்கொண்டாலோவென்னில், ப்ரஜ்ஞனுடைய ஸங்கல்பாநுகுணமாக ஸமுதாயத்வவ்யவஸ்தை கூடுமென்னு கருத்து ।

ஸி. அந்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத் ॥ ௪ ॥

த்ருணாதிவத் ந என்பதாதிகளாலே ஹேதுமான த்ருணாதிகள் க்ஷீராகாரமாக வரிணதிக்கிறப்போலே கேவலப்ரதாநமும் காரணமென்னு சொல்லவொண்ணாது । குத: அந்யத்ராபாவாச்ச ।

வ்ருஷபமஹிஷ்யாதிகளாலே பக்ஷிக்கப்பட்ட த்ருணாதிகளிலே க்ஷீரபரிணாமம் காணாமையாலே தேந்வாதிபக்ஷித த்ருணாதிகளிலேயும் ப்ராஜ்ஞாதிஷ்டாநம் ஸித்தமென்னு கருத்து ॥

ஸி. புருஷாஶ்மவதிதி சேத்ததாபி ॥௫॥

ப்ரதாநம் ப்ராஜ்ஞாநதிஷ்டிதமாயிருந்தாலும் அந்த ப்ரதாநத்தை ஜீவனானவன் ஸ்வஸந்நிதாநத்தாலே ஜகத்ஸ்ருஷ்டியில் ப்ரவ்ருத்திப்பிக்கிறான். எதுபோலவென்றால், புருஷாஶ்மவத், புருஷவத், அஶ்மவத் என்னபடி, கமநஶக்தியில்லாத த்ருக்ஶக்தியுக்தனான பங்குவான புருஷன் கமநஶக்தியுக்தனான அந்தனை ஸ்வஸந்நிதாநத்தாலே ப்ரவ்ருத்திப்பிக்கிறாப்போலவும் அயஸ்காந்தக்கல்லானது தன்னுடைய ஸந்நிதாநத்தாலே இரும்பை ப்ரவ்ருத்திப்பிக்கிறாப்போலவும் ப்ரதாநம் ஜகத்ப்ரவ்ருத்தியை பண்ணலாம் இதிசேத், இந்த ஶங்கையை பரிஹரிக்கிறார். ததாபி, அப்படியிருந்தாலும் ஜகத்ப்ரவ்ருத்தி கூடாது. பங்குவுக்கு மார்கப்ரதர்ஶநவ்யாபாரமும் அந்தனுக்கு அந்த உபதேஶத்தை க்ரஹிக்கையாகிற சேதநத்வமுமிருக்கிறது. அயஸ்காந்தமணிக்கும் காதாசித்கமான ஸந்நிதாநமிருக்கிறது. இவ்விடத்தில் சேதநனுடைய ஸந்நிதாநம் தவிர வேறு விஶேஷம் காணவில்லை. சேதநஸந்நிதி நித்யமாயிருக்கையாலே நித்யஸர்கமும் அபவர்காபாவமும் ப்ரஸங்கிக்கும் ॥

ஸி. அங்கித்வாநுபபத்தேஶ்ச ॥௬॥

குணங்களுக்கு உத்கர்ஷநிகர்ஷநிபந்தநமான அங்காங்கிபாவக்ரமத்தாலே ஜகத்ப்ரவ்ருத்தியானது ஒன்றாலொப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ப்ரளயதஶையிலோவென்றால் ஸாம்யாவஸ்தங்களான ஸத்த்வரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு அந்யோந்யாதிக்யந்யூநத்வாபாவமான அங்காங்கிபாவாஸம்பவமாகையாலே ஜகத்ஸ்ருஷ்டி கூடாது. அந்த தஶையிலும் வைஷம்யமங்கீகரித்தால் விஶேஷமில்லாததாலே ஸதா ஸ்ருஷ்டியானது ப்ரஸங்கிக்கும். ஆகையால் ப்ராஜ்ஞாநதிஷ்டிதமான ப்ரதாநம் காரணமன்று ॥

ஸி. அந்யதாநுஷ்டித வ்யாஸக்திர்யோகாத் ॥௭॥

உக்தவ்யதிரேக வேறு வ்யதிரேக வ்யாநத்தை அநுஷ்டித்தாலும் வ்யாநத்துக்கு ஆஸக்தியில்லாததாலே ஸர்வநாநுவ்ருத்த்யாதிதோஷங்கள் நிவ்ருத்தங்கள் ॥

ஸி. அநுஷ்டாந வைஷேஷ்ய வ்யர்த்தவாத் ॥௮॥

கேவல வ்யாநத்தை அங்கீகரித்தாலும் அர்த்தவாத ப்ரயோஜனமில்லாமையாலே வ்யாநத்தை அநுஷ்டிக்கவேண்டாம் ஏனென்னால் வருஷ்டனுடைய ஹோமாவமர்த்தமாக வ்யாநம் வ்யாவ்ருத்திக்காதென்று ஒன்னுடைய கருத்து அது கூடாது, வேதந்ய ஸாத்விகனாய் நிவ்ருத்தனான வருஷ்டனுக்கு அவேதநீயஸ்ஸ்வாஸத்தாலே வ்யக்திரூபம் ஆரூடமான ஹோமமும் வ்யக்திவிவேகமான அவயவமும் ஸம்ஹவியாது ॥

ஸி. விவக்ஷிதோயாத்வாஸம்ஜஸம் ॥௯॥

வாஸவிராதஹாமத்தாலேயும் இந்த ஸாம்ப்ரதாய ஸம்ஜஸம், தயாதி வ்யக்தியானது வருஷ்டனுடைய ஹோமாவயவங்களுக்குக்காக வ்யாவ்ருத்திக்கிறதென்று ஸாம்ப்ரர்கள் சொல்லுகிறார்கள், அவேதனீயான வ்யக்திதானே வருஷ்டஹிஷ்டமான வேதந்யத்தை தன்னிடத்திலேயும் தன்னுடைய அவயவத்தை வருஷ்டனிடத்திலேயும் அநுஸந்தித்து வாஸத்தை அடைகிறது மோக்ஷஸாதநத்தையும் அநுஷ்டிக்கிறதென்று சொல்லுகிறார்கள் அவேதநமான வ்யாநத்துக்கு வேதநீயமான அந்யாஸம் எப்படிக்கூடும் இப்படி விராஸவசநத்தாலே வ்யாநகாரணவாதம் அஸத்ஸாவஸம்ஜஸம் ॥

ஸாஸ்யோர்விஸ்வரவநா நுவ்ருத்திகரணாஸங்யோவிரூபோய வரிஷாஸ்ரீ கிஞ்சித்வ்யதே ॥

ஶ்ரீபாஷ்யார்த்த ஸாரதீபிகாயாம்

ஶாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் அநுமாநத்துக்கு ஈஶ்வர ஸாதகத்வமில்லையென்று சொல்லப்பட்டது. ரசநாநுபபத்தேஶ்ச வென்கிற அதிகரணத்தில் அசேதநங்களுக்கு சேதநாதிஷ்டிதத்வ ஸாபேக்ஷத்வமென்கிற வ்யாப்தியால் சேதநவிஶேஷத்வேந ஈஶ்வரன் ஸாதிக்கப்பட்டான். அத: இந்த இரண்டதிகரணத்துக்கும் விரோதம் ப்ரஸக்தமாமென்கிற ஆஶங்கைக்கு உத்தரம் என்னவென்னில் ஶாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் ஈஶ்வரன் அநுமாநத்தாலே ஸாதிக்கைக்கு ஶக்யனில்லையென்னு சொல்லப்பட்டான், ரசநாநுபபத்த்யதிகரணத்திலேயென்றால் அந்த ஈஶ்வரன் தானே அநுமாநத்தாலே பாதிக்க ஶக்யனில்லையென்னு சொல்லப்பட்டான் ஆகையால் இரண்டதிகரணங்களுக்கும் பரஸ்பரவிரோதமில்லை। இதமுக்தம் பவதி எந்தவஸ்துவானது எந்த ப்ரமாணத்தாலே ஸாதிக்க யோக்யமோ அந்த வஸ்துதானே அந்த ப்ரமாணத்தாலே பாதிக்கைக்கும் ஶக்யம். யதா ப்ரத்யக்ஷ ஸித்தமான கடாதியானது அந்த ப்ரத்யக்ஷத்தாலே பாதிக்கப்படுகிறதே தவிர ப்ரத்யக்ஷாவிஷயமான பரமாண்வத்ருஷ்டாதிகள் பாதிக்கப்படவில்லையோ அப்படிப்போலவே அநுமாநத்துக்கு விஷயமல்லாத ஈஶ்வரன் அந்த அநுமாநத்தாலே ஸாதிக்கவாகட்டும் பாதிக்கவாகட்டும் ஶக்யனன்றென்று ஸூத்ரகாரரபிப்ராயத்துக்கு ப்ரமாணமாக ஶ்ருதப்ரகாஶிகோக்தி ப்ரவ்ருத்தே ॥

நஹ்யப்ரவேதநாநாம் ஸ்வஸாத்யஸிதவியோ ஜாதுசித் ஸாதநத்வம் ஸாதாநாம் ஸர்வஸம்ஹே வியாதநு ப்ரத்யக்ஷாநாம் கிம் கிம் புந: ஸ்ருஷ்டிகார: । ப்ரத்யக்ஷாதி தத்த்வ ப்ரஸாதநாம் தத்வஸித்த ஸ்வபக்ஷ ப்ராமாண்யம் நாவக்ஷ்யாதாந்த ஶக்யஸ்வதாஸ்ய நி யுக்தஸ்யாதிக ப்ரஸித்தம் ॥

கிம் புந: கிமபி ப்ராயவாநிதப்ரயுக்: ।

வி. தத்த்வதீபேவ்யவஸ்தா ஸ்வபரிணோதாஹ்ருதௌ ॥கO॥.

அநுமாநப்ரமாணவிஷயம் ப்ரத்யக்ஷத்துக்குப்போலே ப்ர

ரோணாவுக்கும் தாமு ருமாகையாலே நிர்ஸ்வர ஸாංவ ரூாஹிதே மான வடியா நகாரணகவ நிராஸத்துக்குப்பிற்பாடு காணாதாஹி தமான வாரோணாகாரணகவத்தை நிரஸிக்கிருரென்னு ஸஂக தி । இதில் ஸெஸ்வரவாංவ ரூஞெவென்னல் நிராகரிக்கத்தக் கவனன்னு । அப்படி யோமதமும் கதருஹவிரோயமில்லாத்தா லே நிராகரணவு ஸஂமமில்லை । வைஙநு வாரோணாகாரண வாதியாயிருந்தாலும் வாஶாவதன் வடியா நகாரணவாதியாயிருந் தாலும்இவர்கள்வெதவாஹ ருர்களாகையாலே ஸாංவ ரூவெஶெ ஷிகர்களுக்குஉதாரம நிரஸிக்கத்தக்கவர்கள் । காணாதநு சொ ன்ன வரரோணாகாரணவாதம், ஸீவீ நமா ! கஸீவீ நமா வெ ன்னு ஸஂஶயம் । ஸீவீ நமென்னு வடிவடிவக்ஷு । காதஃ த ஹாவு ஹரு த ருவயவங்களுடைய ஸஂயொமத்தாலே வடாதிகளா ன கவயவிகளுண்டாகக்காண்கையாலே கவயவங்களுடைய கஶு கவஹாகவங்களாலே ஸஷிவ த்துக்கும் வவிதத்துக்கும் வெஷரூஂ காண்கையாலே அந்த கவயவாவகவத்துக்கு கவயி யான வரரோணாவே காரணம்பென்கிறபக்ஷத்தை நிரஸிக்கி ருர் ।

உஹஹீவடிவதாஹ ஸ்வபரிமஂஙஶாஹ ரூரீடு ॥

இங்குவாகாரம வாகடிக்டு । கநாக்தஸோவாயகம கஸமஂ ஜஸமென்னு கூட்டிக்கொள்ளவேணும் । தமா வ ஹ ஸ்வபரிம ஙஶாஹ ரூாஂ உஹஹீவடிவக் கந ருச, திஹ ருவமதஸஂஜஸ மென்னு கவபம, ஹ ஸ்வபரிமஂஙஶாஹ ரூாஂ, அ ருணாகவரரோ ணாக்களாலே உஹஹீவடிவக் த ருணாகஂபோல அ ருணாகத்தா ல் த ருணாகொகவதியென்ன வாரோணாக்களாலே அ ருணா கொகவதியென்ன இந்த இரண்டுகளும் எப்படி கஸமஂஜஸ மோ அப்படியே அவர்களாலொப்புக்கொண்ட விஷயம் ஸவடிமு ம் கநவஸ்தாதி தொஷத்தாலே கஸமஂஜஸமென்னு கருத்து । எப்படியென்னல் தஹாவு ஹ ருதிகளான கவயவங்கள் நாலு திக்கிலும் நாலுவாஶஂம் மேலும் கீழும் இரண்டு ஆக ஆறுவா ரடிக்தோடே சேர்த்து வரஸஂரஸாயாகங்களாய்க் கொண்டு

அதிசயபரிமாணவத்தான கார்யத்ரவ்யங்களாகக் காண்கையாலே அப்படிப்போல் பரமாணுக்களும் ஷட்பார்ச்வங்களோடே பரஸ்பரம் ஸம்யுக்தங்களாய்க்கொண்டு த்வ்யணுகாதிகார்யத்ரவ்யங்களென்று சொல்லவேணும் அந்தபார்ச்வங்கள் ஸாவயவத்வத்துக்கே கூடுகையாலே பரமாணுக்களும் ஸாவயவங்களாக ப்ரஸங்கிக்கும் அதையொப்புக்கொண்டால் அநவஸ்தையாலே அவிசிஷ்டம் ஸித்தியாதென்னபடி ।

ஸூ. உபயதாபி ந கர்மாதஸ்ததபாவ: ॥ ௧௧ ॥

அத்ருஷ்டவிசேஷஜநிதக்ருதாஹ । உபயதாபி × பாவ: ।

அத்ருஷ்டகாரணமாயும் பரமாணுநிஷ்டமாயுமுள்ள ஆத்யகர்ம அத்ருஷ்டகாரிதமென்று ஒப்புக்கொள்ளுகிறாய், அந்த அத்ருஷ்டம், அணுகதமா, அல்லது க்ஷேத்ரஜ்ஞகதமா யென்கிற விகல்பத்தில் உபயதாபி ந கர்ம, இரண்டு ப்ரகாரத்தாலும் பரமாணுஸம்யோகஹேதுவான கர்ம இல்லை । அதெப்படியென்றால் ஜீவகர்மாநுஷ்டாநஜந்யமாகையாலே பரமாணுவில் அத்ருஷ்டம் கிடையாது । ஒப்புக்கொண்டால் நித்யஸ்ருஷ்டி ப்ரஸங்கிக்கும் அதற்காக ஆத்மநிஷ்டமாகச்சொன்னால் வ்யதிகரணமாகையால் பரமாணுவில் கர்மாரம்பகமாக ஸம்பவிக்கமாட்டாதென்னபடி । அத்ருஷ்டவதாத்மஸம்யோகத்தால் பரமாணுவில் கர்மோத்பத்தி சொல்லில் அந்த ஸம்யோகம் நித்யமாகையாலும் அத்ருஷ்டவ்யாபாரம் நித்யமாகையாலும் நித்யஸர்க்கப்ரஸங்கம்வரும் । ததபாவ:, கர்மாபாவாத் கர்மமில்லாததாலே கார்யமான பரமாணுஸம்யோகமுமில்லை । அஸமஞ்ஜஸமென்று கருத்து ।

ஸூ. ஸமவாயாப்யுபகமாச்ச ஸாம்யாதநவஸ்திதே: ॥ ௧௨ ॥

ஸமவாயத்தை அங்கீகரிக்கையாலும் இந்த காணாதமதம் அஸமஞ்ஜஸம், குத: ஸாம்யாத், கோத்வாதிஜாதிக்கும் வ்யக்திக்கும் சுக்லாதிகுணங்களுக்கும் த்ரவ்யத்துக்கும் அப்ருதக்ஸித்தியோ

த்வாத் ஸமவாயஸம்பந்தோங்கீகரிக்கப்பட்டது । அப்படிப்போல் அந்த ஸமவாயத்துக்கும் ஜாத்யாதிகளுக்கும் ஸ்வாஶ்ரயஸம்பந்தஸாபேக்ஷத்வம் ஸமமாயிருக்கையாலென்னபடி । அநவஸ்தே: ஸமவாயத்துக்கும் ஆஶ்ரயங்களுக்குமுள்ள ஸ்வாஶ்ரயஸம்பந்தஸித்திநிர்வாஹகமாக ஸம்பந்தாந்தரம் ஒப்புக்கொள்ளில் அநவஸ்தை வரும் । அதற்காக அந்த ஸமவாயத்துக்கே ஸம்பந்தாந்தராங்கீகாரமில்லாமல் ஸ்வாஶ்ரயஸம்பந்தஸித்திநிர்வாஹகத்வம் சொன்னால் அப்படி ஜாதிகுணாதிகளுக்கும் அங்கீகரிக்கை யுக்தம் ஸமவாயமொப்புக்கொள்ளுகை நிஷ்ப்ரயோஜநமாகையாலே அஸமஞ்ஜஸமென்னு கருத்து ॥

ஸூ. நித்யமேவ ச பாவாத் ॥௧௩॥

ஸமவாயத்துக்கும் நித்யத்வம் ஒப்புக்கொள்ளுகையாலென்றபடி । அத்தால் ஸம்பந்தி நித்யத்வமில்லாமல் ஸம்பந்தநித்யத்வம் கூடாத்தாலே ஸம்பந்திகளான அவயவாவயவிகளென்ன ஜாதிவ்யக்திகளென்ன இதுகளுக்கும் நித்யத்வபாவத்தாலும் கார்யகாரணபாவமே ஸித்திக்கமாட்டாதென்னு கருத்து ।

ஸூ. ரூபாதிமத்த்வாச்ச விபர்யயோ தர்ஶநாத் ॥௧௪॥

பரமாணுக்களுக்கு ரூபாதிமத்த்வம் அங்கீகரிக்கையாலும் விபர்யய: நித்யத்வநிரவயவத்வங்களுக்கு விபர்யயம் வரத்தெரியும் । தர்ஶநாத் ரூபாதிமத்துக்களான கடாதிகளுக்கு அநித்யத்வமும் ஸாவயவத்வமும் காண்கையாலே தர்ஶநாநுகுணமாக கல்பிக்கிறபடியாலேயும் பரமாணுக்களுக்கு உக்தப்ரகாரம் நித்யத்வமும் நிரவயவத்வமும் ஸித்தியாதென்னு கருத்து ॥

ஸூ. உபயதா ச தோஷாத் ॥௧௫॥

பரமாணுக்களுக்கு அநித்யத்வாதிகள் வருமென்கிற பயத்தாலே ரூபாதிஶூந்யத்வமொப்புக்கொண்டால் கார்யகுணத்துக்கு காரணகுணம் ஹேதுவென்கிற நியமம் ஸித்தியாது அது ஸித்திக்கைக்காக பரமாணுக்களுக்கு ரூபாதிகளை அங்கீ

க்ஷரித்தால் அநித்யத்வாதி ப்ரஸக்திவரும், அத: ப்ரத்யக்ஷ ப்ராப்த்தாலும் தோஷம்வருகையாலே அஸமஞ்ஜஸமேவ காணாதமதம் ॥

ஸூ. அபரிக்ரஹாச்சாத்யந்தமநபேக்ஷா ॥கஎ॥

காபிலமதத்திலே ச்ருதிந்யாயவிரோதமிருந்தாலும் ஸத்கார்யவாதிகளான வைதிகர்களாலே பரிக்ரஹிக்கப்பட்டது, காணாதமதத்திலோவென்னில் ஒரு அம்சத்திலும் வைதிகபரிக்ரஹமில்லாத்தாலே அநாப்தத்தியாலேயும் நிச்ரேயஸார்த்திகளாலே அத்யந்தாநபேக்ஷை பண்ணவேணும் ॥

ஸூ. ஸமுதாய உபயஹேதுகேபி ததப்ராப்தி: ॥கஅ॥

வைநாசிகபரமாணுக்களை ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் இருவரும் ஸமாநமாகையாலே காணாதநிராஸாநந்தரம் பௌத்தமதத்தை நிரஸிக்கிறாரென்னு ஸங்கதி । ஸுகதனென்னும்பேருடைய புத்தனுடைய சிஷ்யர்கள் வைநாசிகர்கள் । அவர்களுக்கு வைபாஷிகர்களென்னும் ஸௌத்ராந்திகர்களென்னும் யோகாசாரர்களென்னும் மாத்யமிகர்களென்றும்பெயர் । அதில் வைபாஷிகர்கள் பாஹ்யபதார்த்தங்கள் ப்ரத்யக்ஷஸித்தங்களென்று சொல்லுகிறார்கள் । ஸௌத்ராந்திகர்கள் அந்த பதார்த்தங்கள் ஜ்ஞாநத்தாலே அநுமேயமென்கிறார்கள் । யோகாசாரர்கள் பாஹ்யங்களான பதார்த்தங்களில்லை । ஜ்ஞாநமாத்ரமே ஸத்யமென்கிறார்கள் இந்த மூன்று பேர்களும் ஸர்வபதார்த்தங்கள் க்ஷணிகங்களென்கிறார்கள் மாத்யமிகர்கள் ஸர்வபதார்த்தங்களும் சூந்யமென்று சொல்லுகிறார்கள் அதில் வைபாஷிகரும் ஸௌத்ராந்திகரும் சொல்லுகிற பாஹ்யார்த்தவிஷயமானது நன்றாக உபபாதிக்க சக்யமா அத்தை உபபாதிக்கக்கூடாதா, வென்னு ஸம்சயம், உபபாதிக்கக்கூடுமென்று பூர்வபக்ஷம்; ததாஹி, ப்ருதிவீஜலதேஜோ வாயுக்களுடைய பரமாணுக்கள் நாலுகளும் ரூபரஸாதிஸ்வபாவவிசிஷ்டங்களாய்க்கொண்டு ப்ருதிவ்யாதிரூபங்களாகக்கூடுகிறதுகள் । அதில்நின்றும் சரீரேந்த்ரியவிஷய ஸங்காதங்கள்

உண்டாகிறதுகள் அதில் ஸந்தானமான விஜ்ஞானஸந்தானமே ஆத்மாவாக இருக்கிறது। இதுகள் க்ஷணிகங்களாயிருந்தாலும் ப்ரவாஹஸந்ததியாலே லோகவ்யவஹாரம் ஸர்வமும் கூடும் । என்று சொல்லுகிறார்கள் । இந்த பக்ஷத்தை நிரஸிக்கிறார் !

ஸூ. ஸமுதாய உபயஹேதுகேऽபி ததப்ராப்தி: ॥ ௧௭ ॥

உபயஹேதுகேऽபி ஸமுதாயே ததப்ராப்தி: ஸமுதாயாப்ராப்தி: । பரமாணுக்களாலே ப்ருதிவ்யாதி ஸமுதாயமுண்டாகிறது । ப்ருதிவ்யாதி ஸமுதாயத்தாலே ஶரீரேந்த்ரிய விஷயஸமுதாயமுண்டாகிறது என்கிற இரண்டு ஸமுதாயத்திலேயும் ததப்ராப்தி: ஜகத்ஸமுதாயோத்பத்தி கூடாது । குத: க்ஷணிகங்களான பரமாண்வாதிகள் பரஸ்பரம் சேருகிறவேளையிலேதானே நஶித்துப்போகையாலே ப்ருதிவ்யாதி ஸமுதாயத்தை எப்படி உண்டாக்கும். அஸ்திரங்களிலே ஸ்திரஸம்பந்தியாலே ஸமுதாயோத்பத்தி கூடுமென்னில் அது ஶுக்தியில் ரஜதஸம்பந்தியாலே ரஜதோத்பத்தி கூடாதாப்போலே கூடாது ஆகையாலே அந்த மதமஸமஞ்ஜஸம் ॥

ஸூ. இதரேதரப்ரத்யயத்வாதுபபந்நமிதி சேந்ந ஸங்காதபாவாநிமித்தத்வாத் ॥ ௧௮ ॥

ஸகலவஸ்துக்களும் க்ஷணிகங்களாயிருந்தாலும் அஸ்திரங்களிலே ஸ்திரஸம்பந்திரூபமான அவித்யையாலே ராகத்வேஷாதிகளுண்டாகிறதுகள். அதில்நின்றும் ப்ருதிவ்யாதிகள் அதில் நின்றும் அவித்யை, இப்படி இதரேதரம் ஒன்றுக்கொன்று ஹேதுக்களாயிருக்கையாலே ஸமுதாயோபபத்திரிதி சேத் । ந ! ஸங்காதபாவாநிமித்தத்வாத் । ஸங்காதபாவத்தைக்குறித்து அவித்யை நிமித்தமாகமாட்டாமையால் அஸ்திரத்தை ஸ்திரமாக விஷயீகரிக்கிற அவித்யையானது ஸ்வத: ஸ்திரமான கார்யத்தை எப்படி உண்டாக்கும். இந்த அவித்யையை உடைய ஆத்மா அப்போதே நஶிக்கையாலே யாருக்கு ராகத்வேஷாதிகளை உண்டாக்குகிறது. ஆகையாலே இந்த மதமஸமஞ்ஜஸம்

ஸூ. உத்தரோத்பாதே ச பூர்வநிரோதாத் ॥௧௯॥

உத்தரமான கடக்ஷணமுண்டாகிற ஸமயத்திலே பூர்வ கடக்ஷணம் நஶித்துப்போகையாலே அஸத்தாமே உத்தரகடக்ஷணத்துக்கு ஹேதுவென்னு சொல்லவேண்டுகையாலே ப்ராகபாவத்துக்கு யான விஶேஷமில்லாத்தாலே கடக்ஷணத்தால் கடமுண்டாக ப்ரஸங்கிக்கும். ஒருகடக்ஷணமே ஸமஸ்தஜகத்துக்கும் ஹேதுவாக ப்ரஸங்கிக்குமென்னு கருத்து। இங்கு க்ஷணிகமென்கிற வ்யவஸ்தியாலே க்ஷணஶப்தம் கடாதிகளைச்சொல்லுகிறது ॥

ஸூ. அஸதி ப்ரதிஜ்ஞோபரோதோ யௌகபத்யமந்யதா ॥௨௦॥

அஸதி ஹேதுவில்லாமலிருக்க கார்யமுண்டாகில் ப்ரதிஜ்ஞோபரோத: அதிபதிஸஹகார்யாதிகள் விஜ்ஞாநோத்பத்தி ஹேதுவென்னு சொல்லுகிற உங்களுடைய ப்ரதிஜ்ஞைக்கு உபரோதம் வரும். அந்யதா இந்த தோஷத்தை பரிஹரிக்கைக்காக பூர்வகடக்ஷணமிருந்துகொண்டே உத்தரகடக்ஷணத்தை உண்டாக்குகிறதென்னு சொல்லில் யௌகபத்யம் இரண்டு கடக்ஷணமும் ஏகதா தோன்ற ப்ரஸங்கிக்கும் அப்படித்தோன்றவில்லை ॥

ஸூ ப்ரதிஸங்க்யாப்ரதிஸங்க்யாநிரோதா
ப்ராப்திரவிச்சேதாத் ॥ ௨௧ ॥

பௌத்தாபிவாதத்துக்கநுஸாரம் தோன்றுகிற ஸ்தூலமான கடவிநாஶம் ப்ரதிஸங்க்யாநிரோதமென்னு சொல்லப்படுகிறது. கடாதிகளுக்கு ப்ரதிக்ஷணம் உபலப்திக்கு அநர்ஹமாய் ஸூக்ஷ்மமாக உண்டாகிற விநாஶம் அப்ரதிஸங்க்யாநிரோதமென்னு சொல்லப்படுகிறது। ஆக இப்படி ப்ரதிஸங்க்யாநிரோதா ப்ரதிஸங்க்யாநிரோதரூபமான நிரந்வயவிநாஶத்துக்கும் அப்ராப்தி:। ப்ராப்தியில்லை குத: அவிச்சேதாத் உத்பத்திவிநாஶரூபத்வயவிஶிஷ்டங்களான ஸந்தத்யாதிரூபங்களுக்கு விச்சேதமில்லாமையாலென்னபடி। யதாஹி ப்ரதீபஸந்தாநத்துக்கு ப்ரத்யக்ஷ

ப்ராக்ஸ்வாத்ம்யவிஶேஷயோஸ்ஸாப்தி: । ஸ்வாத்மஸ்வாத்ம்யவிஶேஷத்தை அடைகையே ஸத்விநாஶமென்று ப்ரத்யக்ஷமாகத்தோற்றுகையாலே கீழ்ச்சொன்ன இரண்டுவிநாஶங்களும் நிரந்வயவிநாஶமென்று சொல்லக்கூடாது । விநாஶமானது ஒரு ஸவிஶேஷயிலே அந்வயியாமலிருக்கிறதென்கிற நிரந்வயவிநாஶம் கூடாதென்னபடி । தீபநாஶமும்கூட தீபத்தின் ஸூக்ஷ்மாவஸ்தாப்ராப்தியென்று கருத்து ॥

வி. உபயதாவதோஷா: ॥ உஉ ॥

உத்பந்நமான த்ரவ்யத்துக்கு அத்வம்ஸம் சொன்னாலும் த்வம்ஸத்தில் நின்றும் உத்பத்தி சொன்னாலும் ஜகத்துக்கு த்வம்ஸதாதவஸ்த்தியே தோஷமென்னபடி ॥

வி. ஆகாஶாவிஶேஷ: ॥ உங ॥

ஆகாஶத்திலேயும் த்வம்ஸஸாபேக்ஷத்வம் சொல்லக்கூடாது । அவிஶேஷாத் ப்ருதிவ்யாதிகளுக்குப்போலே ஆகாஶத்துக்கும் ஸாவயவத்வ அநித்யத்வங்கள் த்ரவ்யமாகையாலே விஶேஷமில்லை । என்னபடி அதி ஶ்ரோத்ரம்பவதி என்று ஶ்ரோத்ரவதநத்துக்கு ஶூந்யமாகவே ஆகாஶம் தோன்றுகிறபடியால் ப்ராயமில்லை ॥

வி. ஸநாஸ்ப்ருஷ்டிஶ்ச ॥ உச ॥

ஸோயம் கட: என்கிற ப்ரத்யபிஜ்ஞையாலேயும் கடாதிகளுக்கு க்ஷணிகத்வம் கூடாது । ப்ரத்யபிஜ்ஞையாவது அதீதகாலத்திலும் வர்த்தமானகாலத்திலுமிருக்கிற ஏகவஸ்துவிஷயகமான ஒரு ப்ரத்யக்ஷஜ்ஞாநம் ஸோऽயமித்யாகாரகம் । அதில் தத் என்கிற அம்ஶம் ஸ்மரணமென்றும் இதமம்ஶம் ப்ரஹணமென்றும் சொல்லவொண்ணாது । கிந்து ஏகமென்று ஸாம்ப்ரதாயிகாரண்யத்தால் ப்ரஹணவ்யவஹாரத்தை ஸ்மரணாஸ்ஸ ப்ரத்யக்ஷரூபவந்தான் । ஆனால் அதுக்கு ஸாமீப்யமென்னில் ஸம்ப்ரதாநாவத்தாலுண்டான ஸம்ஸ்காரஸஹிதமான இந்த்ரியஸம்யோகம் தத்ஸதிஷ்டனை ஸாக்ஷிக்கு இந்த ப்ரத்யபிஜ்ஞை உண்டா

கிறது । வடாதிவிஷயங்களும் ஜ்ஞாதாவும் க்ஷணிகமானால் இந்த ப்ரத்யபிஜ்ஞை உண்டாகமாட்டாதென்று கருத்து ॥

ஸூ. நாஸதோ த்ருஷ்டத்வாத் ॥௨௬॥

அஸத: நஷ்டமாயிருக்கிற வடாதிகளுடைய வடத்வாதிரூபமானது வடாதிஜ்ஞானத்தில் ஸங்க்ரமிக்கிறதென்று சொல்லவொண்ணாது । குத: அத்ருஷ்டத்வாத் ம்ருத்பிண்டம் நசித்தபின்பு அந்த ம்ருத்பிண்டமான ரூபம் வேறொன்றிலே ஸங்க்ரமிக்கை ஓரிடத்திலும் காணாமையாலேயென்னபடி । நீலோ வீகலித்யாதியான விஜ்ஞானாகாரஜ்ஞானத்தைக்கண்டு அந்த ஜ்ஞானத்துக்கு முன்னிருந்ததாயும் அந்த நீலாதிஜ்ஞானத்திலே ஸந்நிஷ்டமான நீலத்வாத்யாகாரத்தை ஸமர்ப்பித்து பின்பு நசித்துப்போனதாயுமுள்ள நீலவடாத்யர்த்தம் அநுமிக்கப்படுகிறதென்று சொன்ன ஸௌத்ராந்திகமதமஸங்கதமென்று கருத்து ॥

ஸூ. உதாஸீநாநாமபி சைவம் ஸித்தி: ॥௨௭॥

வைபாஷிகளுக்கும் ஸௌத்ராந்திகளுக்கும் ஸாதாரணமான தோஷம் இந்த ஸூத்ரத்தில் சொல்லப்படுகிறது । ஏவம் இப்படி ஸமுதாயங்களுக்கும் க்ஷணிகத்வம் அங்கீகரித்தால் உதாஸீநாநாமபி ஸித்தி: ஸ்யாத் । நிஷ்க்ரியர்களான ஸமுபேக்ஷகர்களுக்கும் ஐஹிகாமுஷ்மிகஸமுதாயம் ஸித்திக்க ப்ரஸங்கிக்கும் । ப்ரயத்நாதிகளை அநுஷ்டிக்க வேண்டும் க்ஷணிகனாய் நசித்துப்போகையாலே அந்த ப்ரயத்நமும் வேறொரு புருஷர் அநுபவிக்க ப்ரஸங்கிக்கும் । ஆகையாலே வைபாஷிகஸௌத்ராந்திகமதமஸங்கதமென்று ஸித்தம்

ஸூ. நாபாவ உபலப்தே: ॥௨௮॥

இப்படி பாஹ்யார்த்தாஸ்தித்வவாதிகளை நிரஸித்து விஜ்ஞானமாத்ராஸ்தித்வவாதியான யோகாசாரனை நிரஸிக்கிறாரென்று ஸங்கதி ॥

யோகாசாரனுடைய ஜ்ஞானமாத்ரஸத்பாவவாதம் ஸமீசீநமோ அன்று, ஸமீசீநமென்று பூர்வபக்ஷம், குத: கதம் வட:

ரூபம் பட: என்று படாதிஜ்ஞாநங்களுக்கும் பொதுவாகவே படாதிரூபமான ஆகாரம் தோற்றுகிறது । பாஹ்யார்த்தாஸ்தித்வவாதியாலும் படாதிகளிலிருக்கிற படத்வாதிகளை படாதிஜ்ஞாநங்களுக்கு ஆகாரமாக ஒப்புக்கொண்டு படாதிஜ்ஞாநவ்யாவ்ருத்தி சொல்லவேணும் । ஆகையால் படத்வாத்யாகாரமானது ஜ்ஞாநத்தினுடையதே தவிர பாஹ்யார்த்தமான படாதிகளுடையதன்று அப்படிப்பட்ட ஆகாரத்தோடே பாஹ்யார்த்தத்வஸித்தி படாதிகளுக்கும் ஸூத்ரகாரர் இந்த பக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

நாபாவ உபலப்தே: ॥

அபாவ: ந ஜ்ஞாநவ்யதிரிக்த பதார்த்தாபாவமில்லையென்னவொண்ணாது । குத: உபலப்தே: । படமஹம் ஜாநாமி என்று படஜ்ஞாநத்துக்கு படம் விஷயமாகவும் ஆத்மா ஜ்ஞாதாவாயும் தோன்றுகையாலே விஷயங்களையும் ஜ்ஞாதாவையும் இல்லையென்றால் ஜ்ஞாநமும் ஸித்திக்கமாட்டாது ॥

ஸூ. வைதர்ம்யாச்ச ந ஸ்வப்நாதிவத் ॥ ௨௮॥

ஸ்வப்நாதிவத் ந ஸ்வப்நத்திலுண்டாகிற ஜ்ஞாநம் நிர்விஷயமானாப்போலேயே யென்றால் ஜாக்ரத்ஜ்ஞாநமும் நிர்விஷயமென்னவொண்ணாது । குத: வைதர்ம்யாத் ஸ்வப்நஜ்ஞாநத்தைக்காட்டிலும் ஜாக்ரத்ஜ்ஞாநத்துக்கு வைலக்ஷண்யத்தாலென்னபடி. ததாஹி ஸ்வப்நஜ்ஞாநத்துக்கு நித்ராதிதோஷம் காரணம் । ஸ்வப்நோத்தரதசையில் இல்லையென்கிற பாதகப்ரத்யயமும் இருக்கிறது । ஜாக்ரத்ஜ்ஞாநத்துக்கு இரண்டுமில்லை । இப்படி நிர்தோஷமாய் நிர்பாதமான படாதிஜ்ஞாநத்தை நிர்விஷயமென்கை அயுக்தம் । சகாரத்தாலே ஸ்வப்நாதிஜ்ஞாநமும் யதார்த்தவிஷயங்களென்று ஸூசிதம் ॥

ஸூ. ந பாவோ அநுபலப்தே: ॥ ௨௯॥

பாவ: ந, அர்த்தவைசித்ர்யம் விநா ஜ்ஞாநத்துக்கு வைசித்ர்யமுமில்லை குத: அநுபலப்தே: ॥

[illegible] உபலப்தி யில்லாத்தாலேன்னபடி । அபாதித ப்ரதீதிவிஷயமான ஜ்ஞேயத்தை கழிக்கில் ஜ்ஞாநத்தையும் கழிக்க ப்ரஸங்கிக்குமென்னு கருத்து ।

ஸூ. ஸர்வதாநுபபத்தேஶ்ச ॥ ௩௦ ॥

ஸௌகதமதத்துக்கு அபிமதமான ஸர்வஶூந்யத்வத்தை நிரஸிக்கிறாரென்னு ஸங்கதி ॥

ப்ரத்யக்ஷ ஸொன்ன ஸர்வஶூந்யவாதம் ஸம்பவிக்குமா கூடாதா வென்னுஸம்ஶயம், ஸம்பவிக்குமென்னு பூர்வபக்ஷம் । அத: ப்ரத்யக்ஷாதிகளை உபஜீவியாமல் பதார்த்தங்களை உண்டாக்கவொண்ணாது, உபஜீவிக்கில் ஶூந்யவாதம் ஸித்தம் । ஆகையா ஸ்வபாவத்தாலே உண்டான பதார்த்தங்கள் அபாவாத்மகங்களென்னு சொல்லுகையாகுமென்கிற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

ஸர்வதாநுபபத்தேஶ்ச ॥

ஸர்வஶூந்யவாதியானவன் ஸர்வம் ஸத்தென்னு ப்ரதிஜ்ஞை பண்ணி அஸத்தத்தை ஸாதிக்கிறானாகில் அஸத்தென்னு ப்ரதிஜ்ஞை பண்ணியாகில் ப்ரகாராந்தரத்தாலேயா । ஸர்வதாபி அவன்சொன்ன ஸர்வஶூந்யத்வம் ஸித்தியாது அத: அநுபபத்தே:, ஸர்வஶூந்யத்துக்கு அநுபபத்தியாலே । ஶாஸ்த்ராஶாஸ்த்ரஸங்கங்களுக்கும் ஸத்ப்ரவ்ருத்தியுடைய அவஸ்தாவிஶேஷங்களை விஷயங்களென்னு ப்ரதிஜ்ஞை உபபாதிக்கப்பட்டது । ப்ரத்யக்ஷவ்ருத்துக்கு ப்ரத்யபிஜ்ஞாரூபாவஸ்தையே ஸர்வாஸ்தி வாதிக்கு விஷயம் । பிம்பஸ்வாவஸ்தையானது அஸத்ப்ரஹவிஷ்ருதி என்கிற வாதிக்கு விஷயம் ஸ்வாபவஸ்தையானது, அஸத்யஸ்வஸ்தம் என்கிற வாதிக்கு விஷயம் । அத: ஸகலஸகலப்ரவிருத்தமான ஸர்வாத்யப்ரகார ப்ரமாணத்தாலே ஸாதித ஸர்வஶூந்யம் ஸித்திக்கமாட்டாது ।

ஸூ. நைகஸ்மிந்நஸம்பவாத் ॥ ௩௧ ॥

ஸத்துக்கு அஸத்த்வாதியை நிரஸித்து ஸத்த்வத்தை

யும் கஸத்வத்தையும் சேர்த்துச்சொல்லுகிற வைஶேஷிகத்தை நிரஸிக்கிறாரென்று ஸங்கதிः ॥

வைஶேஷிகம் யாதோ உத அன்ய என்றுஸம்ஶயம் । யாதமென்று பூர்வபக்ஷம் । ஜீவனென்றும் சஜீவனென்றும் சொல்லப்பட்ட க்ஷேத்ரஜ்ஞத்தும் ஸதாயுமஸதாயும் நித்யமாயுமநித்யமாயும் ஸிஙமாயுமஸிஙமாயும் தோன்றுகிறது । த்வ்யவராவம் ஸிரமாயுமேகமாயுமிருக்கும் பட்டாக்கவாமகவராவபதாயங்களான கவசேஷங்களாலே சுநேகமாயுமஸத்தாயும் கஸிரமாயுமிருக்கும் । த்ரவ்யம் பட்: । த்ரவ்யம் கவாம: । உத்பாதிவத்தியாலென்கிற பக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

வைநகஸிஙஸம்ஸாரக ॥

ரு । வைஶேஷிகம் யாதமன்று । காத: ஸாக்ஷிஸம்ஸாரக ஒரு த்ரவ்யத்தில் ஸாக்ஷேவேளையிலே பரஸ்பரவிரோதங்கள் ஸம்ஸவியாமையாலே ஒரு வஸ்துவுக்கு சுஶ்ஷேஷிக்கங்கள் விரோதங்களானப்போலே நித்யாநித்யாதிகளும் விரோதங்கள் ஒரு பூர்வவீத்வ்யத்துக்கும் பட்பாராவாதிவேஷங்களும் பூர்வவீத் தேசவேஷத்தாலே அல்லது ஒரு தேசத்திலே வேஷாவேஷாஶ்யமில்லை । ஆகையாலே ஒரு வஸ்து தானே ஐகாந்திகமாக இருக்குமென்று சொன்னது அயுக்தம் ॥

ஸி. ஸவஷாதா காத்ஸ்ந்யம் ॥கூஉ॥

ஸவம் இப்படி ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் ஆத்மாவுக்கு காத்ஸ்ந்யம் ப்ரஸஙிக்குமென்று ஈயம் । அதெப்படியென்றால், ஆத்மா ஶரீரபரிமாணனாயிருக்கிறானென்று வைஶேஷிகம் । ஸவம் கஷ்டம் கஜஶரீரத்திலிருக்கிற ஆத்மாவுக்கு ஶிஶுஶரீரத்தில் ப்ரவேசிக்கும்போது ஆத்மாவுக்கு காத்ஸ்ந்யம் கவச்சேதம் ப்ரஸஙிக்கும் ॥

ஸி. நவ பயாயாதவ்யவிரோயோவிகாராதிஷ்ய: ॥கூக॥

ஆத்மாவுக்கு சுஷ்காவஸாராவமான பர்யாயத்தாலேயும் அவிரோயோ ந । கீழ்சொன்னவிரோதமில்லையென்கொண்ணுது

அத: விகாராதிரூப: படாதிகளுக்குப்போலே ஆத்மாவுக்கும் உத்பத்த்யாதிரூபவிகாரதோஷம் ப்ரஸங்கிக்கையாலே ஸ்வரூபோத்பத்தி ஸ்வீகரித்தாலும் ஆத்மாவுக்கு தோஷபரிஹாரம் வாராதென்னபடி ॥

ஸூ. அந்த்யாவஸ்திதேஶ்சோபயநித்யத்வாதவிஶேஷ: ॥௧௪॥

அந்த்யாவஸ்திதே: ஜீவனுக்கு யாதொரு மோக்ஷதசாபாவியான அந்த்யபரிமாணமுண்டோ அந்த பரிமாணம் பிற்பாடு அநாதியாக அவஸ்திதமாகையாலென்னபடி. உபயநித்யத்வாத் ஆத்மஸ்வரூபமும் அந்த்யபரிமாணமும் நித்யமாகையாலென்னபடி | அவிஶேஷ: அந்த்யதசைக்கு முன்னுள்ள தசைகளிலும் அந்த்யதசையிற்போல் இந்த ஆத்மஸ்வரூப பரிமாணங்களிருக்கவேண்டியதாகையால் ஆத்மாவுக்கு தேஹபரிமாணஸ்வரூப விசேஷமில்லையென்னபடி | ஆகையால் ஜைநமதம் அஸமஞ்ஜஸமென்னுகருத்து |

ஸூ. பத்யுரஸாமஞ்ஜஸ்யாத் ॥௧௫॥

பாசுபதமதத்தில் ப்ரக்ருதிகாரணத்வாதிகளை ஒப்புக்கொண்டிருந்தாலும் காரணாதஸாங்க்யாதிஷ்டாத்ருத்வ ஸ்வீயபக்ஷ விரோத: என்கிறபடியே வேதபாஹ்யர்களுடன் சேர்ந்திருப்பதால் ஜைநமத நிராஸாநந்தரம் பாசுபதமதத்தை நிரஸிக்கிறாரென்று ஸங்கதி | பசுபதிபண்ணின மதம் தத்தத்பக்ஷங்களால் அநாதரணீயமா அன்றா என்று ஸம்சயம் | அநாதரணீயமென்று ஸித்தாந்தம் | அத: அஸமஞ்ஜஸ ப்ரக்ரியை சொன்னதாகையாலே இந்த மதத்தை நிரஸிக்கிறார் |

பத்யுரஸாமஞ்ஜஸ்யாத் ॥

வைசேஷிகஸ்ஸம்ஸ்வாத், என்கிற ஸூத்ரத்திலே இருக்கிற நகாரத்தை கூட்டிக்கொள்ளவேணும் | பத்யு: | பசுபதி மதமநாதரணீயமன்று | அத: அஸாமஞ்ஜஸ்யாத் | வேதாந்தவிருத்தமான பரமேச்வராபிமத ப்ரதிபாதனமும் ப்ரக்ருதிநிமித்த காரணமாயும் ஸர்வகர்த்ருத்வாதிகளான வேதவிருத்த

ஹாரங்களையும் ப்ரதிபாதிக்கையாலும் பஶுபதிமதமிப்படி அஸாமஞ்ஜஸ்யமாகையாலே அநாதரணீயம் ।

ஸூ. அதிஷ்டாநாநுபபத்தேஶ்ச ||௩௬||

அநுமாநஸித்தனான பஶுபதியான ஈஶ்வரன் ப்ரதாநத்தை அதிஷ்டிக்கிறானென்று சொல்லுகையாலே ஸஶரீரனான குலாலாதிகளுக்கே ம்ருத்பிண்டாத்யதிஷ்டாநம் காண்கையாலே அஶரீரனான பஶுபதிக்கு ப்ரதாநாதிஷ்டாநம் அநுபபந்நம் । அதற்காக பஶுபதிக்கு ஶரீரமங்கீகரித்தால் ஸாவயவமான ஶரீரத்துக்கு ஜநகாபேக்ஷையாலே அநவஸ்தையும் வரும்

ஸூ. கரணவச்சேந்ந போகாதிப்ய: ||௩௭||

க்ஷேத்ரஜ்ஞன் அஶரீரனாய்க்கொண்டு ஸகரணகளேபரங்களை அதிஷ்டிக்கிறாப்போலே பஶுபதியும் அஶரீரனாய் அதிஷ்டிக்கிறான் । இதிசேந்ந । போகாதிப்ய: । அப்படியே க்ஷேத்ரஜ்ஞனுக்குப் போலே பஶுபதிக்கும் புண்யபாபமூல ஸுகது:க்க போகாதிகள் ப்ரஸங்கிக்கும் ।

ஸூ. அந்தவத்த்வமஸர்வஜ்ஞதா வா ||௩௮||

ஸாஶரீரத்வேச பஶுபதிக்கு புண்யாபுண்யங்களுண்டாகில் அந்தவத்த்வமும் ஸ்ருஷ்டிஸம்ஹாராஸ்வாதந்த்ர்யமும் அஸர்வஜ்ஞத்வமும் ப்ரஸங்கிக்கும் ஆகையாலே பஶுபதிமதமஸம்மதம் ||

பகவத்ப்ரோக்தமான ஶ்ரீபாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்திலேயும் காபிலாதிமதத்தில்போல் அப்ராமாண்யத்தை ஶங்கித்து நிரஸிக்கிறாரென்று ஸங்கதி ||

ஸூ. உத்பத்த்யஸம்பவாத் ||௩௯||

ஸாங்க்யாதிதந்த்ரம்போலே பாஞ்சராத்ரமும் அப்ரமாணம் । உத ந இதி ஸம்ஶய: । அப்ரமாணமென்று பூர்வபக்ஷம் । குத: வாஸுதேவாத் ஸங்கர்ஷணோ நாம ஜீவோ ஜாயதே என்று ஶ்ருதிவிருத்தமான ஜீவோத்பத்தியை பாஞ்சராத்ரத்திலே சொல்லுகையாலே உதாஹ்ருதம் வேதவிருத்தமாக

ஸம்ஜ்ஞோ அஹங்கார: என்று வேதாநாதரவசநத்தாலேயுமென்கிற பக்ஷத்தை ஸூத்ரகாரர் இரண்டு ஸூத்ரங்களாலே க்ஷேபணாக்ஷமாய் அருளிச்செய்கிறார் ॥

உத்பத்த்யஸம்பவாத் ॥

ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் என்று ஶ்ருதியிலே ஜீவனுக்கு உத்பத்திநிஷேதத்தாலே ஜீவனுக்கு உத்பத்த்யஸம்பவாத் பாஞ்சராத்ரத்திலே ஜீவனுக்கு உத்பத்திசொல்லுகையாலே வேதவிருத்தமான பாஞ்சராத்ரம் அப்ரமாணம் ॥

ஸூ. ந ச கர்த்து: கரணம் ॥௪௦॥

ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்நஸம்ஜ்ஞம் மந உத்பத்யதே என்று கரணமான மநஸ்ஸுக்கு ஸங்கர்ஷணஸம்ஜ்ஞனாய் கர்த்தாவான ஜீவனிடத்தில்நின்றும் உத்பத்திசொல்லுகையாலே அது ஶ்ருதிவிருத்தமாகையாலே பாஞ்சராத்ரம் அப்ரமாணம் । கர்த்து: கரணஞ்ச । கர்த்தாவான ஜீவனிடத்தில்நின்றும் மநஸ்ஸு உண்டாகவில்லை । கிந்து ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மநஸ்ஸர்வேந்த்ரியாணி ச என்று மநஸ்ஸுக்கு ப்ரஹ்மத்தில்நின்றும் உத்பத்தியை ஶ்ருதிசொல்லுகிறது என்கிற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

ஸூ. விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத: ॥௪௧॥

வாஶப்தத்தாலே பூர்வபக்ஷம் வ்யாவர்த்திக்கப்படுகிறது. விஜ்ஞாநஞ்ச தத் ஆதிஶ்ச விஜ்ஞாநாதிஎன்று விக்ரஹம் அத்தால் விஜ்ஞாநாதிஶப்தம் ஜ்ஞாநஸ்வரூபஜகத்காரணபரவாஸுதேவனைச்சொல்லுகிறது । விஜ்ஞாநாதியினுடையபாவம் விஜ்ஞாநாதிபாவம் ததவதாரரூபத்வம் । ததா ச ஸங்கர்ஷணப்ரத்யும்நாநிருத்தர்களுக்கு விஜ்ஞாநஸ்வரூபமாய் ஜகதேககாரணபரப்ரஹ்மபூதமான வாஸுதேவனுடைய அவதாரரூபத்வம் ஸித்தமானவளவிலே । ததப்ரதிஷேத: । தஸ்ய ப்ராமாண்யஸ்யாப்ரதிஷேத: । க்ருத்ஸ்நமான பாஞ்சராத்ரஶாஸ்த்ரமும் ப்ரமாணமென்னபடி । அஜாயமாநோ பஹுதா விஜாயத இதி ஶ்ருதிஸித்தமான பரமபுருஷனுடைய ஸ்வேச்சாவதாரமன்றோ, வாஸு

ஷேவாஸுஸங்கர்ஷணோ நாம ஜீவோஜாயதே ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்நஸஞ்ஜ்ஞம் மநோஜாயதே இத்யாதிகளாலே சொல்லப்படுகிற து । நதாவ ஜீவோத்பத்த்யாதிகள் । இவ்விடத்தில் ஜீவாதிசப்தங்கள் விசேஷ்யமாயும் ஸங்கர்ஷணாதிசப்தங்கள் விசேஷணமாயுமிருக்குமென்னு பூர்வபக்ஷிக்கு மதம், ஸித்தாந்தத்தில் ஜீவாதிஷ்டாதாவான ஸங்கர்ஷணனென்னும் மநோதிஷ்டாதாவான ப்ரத்யும்நனென்னும் அர்த்தம் । ஸங்கர்ஷணாதிபதங்கள்விசேஷ்யங்கள் ஜீவாதிபதங்கள் விசேஷணங்களென்னு கருத்து । பரதத்த்வைகவேத்யமான வாஸுதேவாதிபதநம் ந்யாயாந்தரத்தாலே, ப்ராப்தம் ப்ராமாண்யம் தே ஸந்தி வாரோத்யாஜ்ஞாஸித்தம் என்னு அநுவதித்தோதத்தை நிறுத்தது உதிதஹோமத்தை ப்ரசம்ஸிக்க வாருப்போலே ஸ்ரீ பாஞ்சராத்ர ப்ரசம்ஸார்த்தமென்னபடி யெங்கனேயென்னில் வேதாந்தோதிதமான பரதேவதா வாஸுதேவத்தையும் ததுபாஸநத்தையும் ஸ்ரீ பாஞ்சராத்ரத்திலே ப்ரதிபாதிக்கையாலே க்ருத்ஸ்நமான பாஞ்சராத்ரமும் ப்ரமாணமென்னு ஸித்தம் ।

ஸி. விப்ரதிஷேதாச்ச ॥ ௪௫ ॥

இந்த பாஞ்சராத்ரத்திலேயும் ஜீவோத்பத்தியை விசேஷித்து ப்ரதிஷேதிக்கையாலே இந்த பாஞ்சராத்ரம் வேதத்துக்கு அவிருத்தம் । ததாஹி । அசேதநா பரார்த்தா ச நித்யா ஸததவிக்ரியா । த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே । வ்யாப்திரூபேண ஸம்பந்த: தஸ்யாச்ச புருஷஸ்ய ஸ: ஸஹ்யநாதிரநந்தச்ச பரமார்த்தேந நிச்சித: என்னு பாஞ்சராத்ரத்திலே ஜீவனுக்கு உத்பத்தி ப்ரதிஷேதிக்கப் பட்டதன்றோ । ஆகையாலே ச்ருதிவிரோதகந்தம் கூடவில்லை யென்னுதிருவுள்ளம் । கீழ் சொன்ன பூர்வபக்ஷிகளாலே ஒப்புக்கொள்ளப்பட்ட சக்திவ்யாபாரஹேதுவைசாத்யாதம் அவா யேஷாம் க்லோஷணவாத்ஸல்யப்ரதிபத்தே ।

ஸாக்ஷாத்பகவச்சாஸ்த்ரேணகம் பரஸ்பரவிஷயம் வாஸ நோவேதாந்தம் யேஷாம் நவ ஸாமம் நிஜமதிஸர்வயோஷிது

த்ரயோபஸம்ஹிதஷ்டும், விசித்ரஸர்வஶக்திஸௌலப்ய ப்ராதான்ய ஶக்தம் ஸகலாபேக்ஷிதஸ்வரூபம் பாரணம் ஶாஸ்த்ர ப்ராமேயதனு ஶக்தாஶ்ரயஶக்தி ஶரணாகதியே கூஷ்டதாம் ஜுஷ்டதாம் வ: ॥

ஸாங்கம் த்ரயமென்ன பரந்யாஸதிஸாத்ரயமென்ன இந்த இரண்டும் பாரந்யாஸ தத்வங்களில் ஶக்திபக் காரங்கள் பக்ஷமென்ன கூர்ம் கவிதாத்ரய்த்தி இதுகள் ஸம்யதபக்ஷத்தில் விஷய வாஸனோபாதிமே பௌமவெஸகவெஸிதத்தில் நிஶ்ரஜ்ஞான ஸஜ்ஞானோபாதிமே ஶக்தியென்று பஜ்ஞாகாரதம் । நிஜஶக்தி ஸாவங்களுக்கு நித்யஸம்ஹிதஷ்டுஜஶக்தியென்று நப்ராபெயக தெஶிததம் । ஶித்தத்தால் ஸாக்ஷ்யஸௌலப்ராதான்யஶக்தியென்று ஹாடிததம் । பாஷாணகல்பகா ஶக்தியென்று காரணாததம் । நித்யம் உஜ்ஜ்வலம் பாரணமென்ன ஸகலபோகமோக்ஷக ப்ரத்தஸா பாரணஶரீரம் பெஶமென்ன இதுமுதலானதுகள் ஶக்தியென்னுவெஜநதம் । ஶாஸ்த்ரப்ரமேதம் ஶக்தியென்று ஶாஸ்த்ரிகதம் । உகாரத்தாலே கேவலதாநதாநஹவம் ஶக்தியென்கிற ஸாம வ்யதம் । உபாயநிவ்ருத்தி: ஶக்தியென்கிற யாதவஹாஸ்யதம் । தெஶவிபேதமென்ன ஸகலவ பாவதி ஸம்போகமென்ன இதுகள் ஶக்தியென்று பாவ்யாகதம் । இதுகள் ஸமாஶ்ரிக்கப்படுகிற துகள் இந்த பஞ்சகாரஶக்திபெ சொல்லப்பட்ட உங்களுக்கு ஶ்ருதியானது உபகாரத்தின்பொருட்டு ஹவிக்கட்டுமென்று உபாயம்ஹவபநிது । இப்படி கீழ்சொன்ன ஶக்திபேதங்களுக்கு ஶ்ருதிஸூத்ரஸிதநாஶநம் முதலானதுகளே பாயகமென்று கருத்து ॥

இந்த பாதத்தில் அதிகரணாஷ்டகத்தில் சொன்ன அர்த்தத்தை ஒருஶ்லோகத்தாலே ஸங்க்ரஹிக்கிறார் ஸ்ரீதேஶிகர் ।

பாதெஸ்மிந்நுக்தவிமெஸ்யை: கணஹாநதெகை: ஸுப்ரஸ ஶெஹாஷிகாதெத்ரை: யோநவாராஹியாபெநை: ஸாமதஶேர ஹம்ஶ்ருதிப்ரவாதவஸெகை: ' கஹாஸ்வஸ்ஸிஹாஹஸமெகை: ப ஶாவதிஸஸ்யஸாயிஸிஶோவரோயம் க்ஷிபாபயோ வஸ்வா ஸ்ரும் ஶ்ருதிவயஶவேதஸ் வஸ்மஶோநயதஶீ ॥

ரசநாநுபபத்த்யதிகரணத்தில் காபிலக்ருதவிரோதத்தையும் மஹத்தீர்க்கவத்வா என்கிற அதிகரணத்தில் காணாதக்ருதவிரோதத்தையும் ஸமுதாய உபயஹேதுகே என்கிற அதிகரணத்தில் வைபாஷிகாதிக்ருதவிரோதத்தையும் நாபாவ உபலப்தே: என்கிற அதிகரணத்தில் யோகாசாரக்ருதவிரோதத்தையும் ஸர்வதாநுபபத்த்யதிகரணத்தில் மாத்யமிகஶூந்யவாதாஸக்தியையும் ஏகஸ்மிந்நஸம்பவாதென்கிற அதிகரணத்தில் ஜைநக்ருதவிரோதத்தையும் பத்யுரஸாமஞ்ஜஸ்யாத் என்கிற அதிகரணத்தில் பாஶுபததந்த்ராதிகளாலே விரோதத்தையும் ப்ரதிக்ஷேபித்து, அதோ அதின்பிற்பாடு உத்பத்த்யஸம்பவாத் என்கிற பாஞ்சராத்ராதிகரணத்தில் பாஞ்சராத்ரத்தை ஶ்ருதிமயம் ஶ்ருதிமூலமாநாஸீயாக அவதிஷ்டாபித்தார் ஸூத்ரகாரரான வேதவ்யாஸபகவானென்னபடி । வக்தா நாராயண: ஸ்வயம் யென்கிறவசநம் மோக்ஷதர்மமும், ஶ்ரீ பாரதத்தில் ஆநுஶாஸநிகத்தில் ஜ்ஞாநகாண்டத்தில் க்ருத்ஸ்நஸ்ய பாஞ்சராத்ரத்துக்கும் வேதாநுகுண்யத்தாலே ப்ராமாண்யத்தை ஸ்தாபித்தருளின க்ருஷ்ணத்வைபாயநர்தாமே வேதாந்தஸூத்ரத்தில் பாஞ்சராத்ரதந்த்ரத்துக்கு ப்ராமாண்யம் சொல்லுகிறாரென்கை அஸம்மதம் ஸர்வவைதிகாநாம் । ஆகையாலே ஶ்ரீபாஞ்சராத்ரத்தில் ஶ்ருதிவிரோதத்தை அங்கீகரித்து அவிரோதாம்ஶத்திலே ப்ராமாண்யத்தை இந்த அதிகரணத்திலே ஸ்தாபநம் பண்ணுகிறாரென்று ஶங்கரர் சொன்னயோஜனை நிரஸ்தமாய்த்தென்று யெம்பெருமானார் திருவுள்ளமென்று தேஶிகர் கருத்து ।

ஶ்ரீ ப்ரஹ்மஸூத்ரார்த்தமணிப்ரவாளதீபிகாயாம்

த்விதீயாத்யாயே த்விதீய: பாத: ॥

ஶ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ: ப்ரீயதாம் ॥

ஶ்ரீ: ||

ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ||

ஶ்ரீமதே நிக³மாந்தமஹாதே³ஶிகாய நம: ||

ஶ்ரீமதே வேங்கடவரதா³ர்யமஹாதே³ஶிகாய நம: ||

ஶ்ரீபா⁴ஷ்யார்த²மணிப்ரவாளதீ³பிகாயாம்

த்³விதீயாத்⁴யாயே த்ருதீய: பாத³: ||

ஸூ. நவியத³ஶ்ருதே: ||க||

ஸாம்க்²யாதி³வேத³பா³ஹ்யதந்த்ரங்களுக்கு ந்யாயாபா⁴ஸமூலத்வத்தாலும் விப்ரதிஷேத⁴த்தாலும் அஸாமஞ்ஜஸ்யம் சொல்லப்பட்டது । இந்த பாத³த்தில் ஸ்வபக்ஷத்துக்கு தோ³ஷக³ந்த⁴மும் கூடவில்லையென்கிறத்தை ப்ரகாஶிக்கைக்காக ப்³ரஹ்மகார்யமாக ஒப்புக்கொண்ட வியதா³தி³ப்ரபஞ்சத்துக்கு கார்யத்வப்ரகாரமானது ஶோதி⁴க்கப்படுகிறதென்று பாத³ஸங்க³தி । பூர்வபாதா³ரம்ப⁴த்தில் அதிகஸங்க³தி சொல்லியாய்விட்டது ।

ஶ்ரீபாஞ்சராத்ராதி⁴கரணத்தில் ஜீவோத்பத்திவாத³மானது ஜீவாதி³ஶப்³த³ ஸங்கர்ஷணாதி³பரமாகையாலே ஔபசாரிகமென்று சொல்லப்பட்டது । அப்படியாகில் அந்த ந்யாயத்தாலே தானே வியது³த்பத்திவாத³மும் ஔபசாரிகமாகட்டுமென்கிற ஶங்கையாலே ஸங்க³தி: ।

வியத்து உண்டாகிறதா இல்லையாவென்று ஸம்ஶயம் உண்டாகவில்லை । என்று பூர்வபக்ஷம் ||

நவியத் । ஆகாஶமானது உண்டாகவில்லை । குத: அஶ்ருதே:, ஶ்ருதி: ஶ்ரவணம் ஆத்மாவைப்போலே நிரவயவமான வியத்துக்கு உத்பத்திஶ்ரவணம் ஸம்ப⁴வியாமையாலென்னபடி । இந்தபக்ஷத்தை நிரஸிக்கிறார் । இது பூர்வபக்ஷஸூத்ரம் ||

ஸூ. அஸ்தி து ॥ ௨ ॥

துஶப்த: பக்ஷம் வ்யாவர்த்தயதி । அஸ்தி । வியத்துக்கு உத்பத்தியுண்டு ; "ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" யென்று உத்பத்திஶ்ரவணத்தாலே ப்ரமாணாந்தரத்தால் ப்ராப்தமான வியதநுத்பத்தியை ஶ்ருதியாலே ப்ரதிஷேதிக்கையாலே வஹ்நிரநுஷ்ண இத்யாதி வாக்யத்துக்குப்போலே அயோக்யதையில்லையென்று கருத்து ।

ஸூ. கௌண்யஸம்பவாச்சப்தாச்ச ॥ ௩ ॥

இன்னமும் பூர்வபக்ஷத்தை உபந்யஸிக்கிறார் । கௌணீ "ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" யென்கிற ஶ்ருதியானது கௌணீ அர்த்தவ்ருத்தியென்னபடி । ஸம்பூதாவஸ்தமான தன்னிடத்தில் நின்றும் ஸம்பூதாவஸ்தமான தானுண்டாகிறதென்கிற அர்த்தவ்ருத்தமான அர்த்தத்தை சொல்லுகிறது । குத: அஸம்பவாத் । தத்தேஜோऽஸ்ருஜதயென்று ஜகத்ஸ்ருஷ்டிக்குமுன்பு தேஜஸ்ஸு உண்டாகிறதென்று சொல்லுகையாலே வியத்துக்கு உத்பத்யஸம்பவியாமையாலென்னபடி । ஶப்தாச்ச । வாயுஶ்சாந்தரிக்ஷஞ்சைததம்ருதமிதி ஆகாஶத்துக்கு அம்ருதத்வஶப்தத்தாலேயும் வியதநுத்பத்தியானது கௌணீ ।

ஸூ. ஸ்யாச்சைகஸ்ய ப்ரஹ்மஶப்தவத் ॥ ௪ ॥

ஏகஸ்ய ஸ்யாச்ச யென்று அந்வயம், "ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத: ஆகாஶாத்வாயு: வாயோரக்நி:" இத்யாதிஷு அநுஷக்தமாய் ஏகமான ஸம்பூதஶப்தத்துக்கு "ஆகாஶஸ்ஸம்பூத:" என்கிறவிடத்திலே கௌணத்வமும் "ஆகாஶாத்வாயுஸ்ஸம்பூத:, வாயோரக்நிஸ்ஸம்பூத:" இத்யாதிகளிலே அநுஷங்கிக்கப்பட்ட ஸம்பூதஶப்தத்துக்கு முக்யத்வமும் ஸ்யாத் கூடும் । ப்ரஹ்மஶப்தவத் । "தபஸா சீயதே ப்ரஹ்ம ததோऽந்நமபிஜாயதே", "தஸ்மாதேதத் ப்ரஹ்ம" யென்கிற ஶ்ருதியிலிருக்கும் ப்ரஹ்மஶப்தத்துக்கு ப்ரதாநத்தில் கௌணார்த்தகத்வமும் பரப்ரஹ்மத்தில் முக்யார்த்தகத்வமும்போலே இங்கும் கூடும் । இது பூர்வபக்ஷ ஸூத்ரம் ॥

இந்த ஶங்கையை நிரஸிக்கிறார் ।

ஸூ. ப்ரதிஜ்ஞாஹாநிரவ்யதிரேகாத் ॥ ௫ ॥

யேநாஶ்ருதம் ஶ்ருதமென்னுஞ்சொன்ன ப்ரஹ்மவிஜ்ஞாநத்தாலே ஆகாஶாதிஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞைக்கு ஹாநி: । வ்யதிரேகாபாவமானது அவ்யதிரேகாத் ஆகாஶத்துக்கும் ப்ரஹ்மத்தில்நின்றுமுத்பத்தியாலே ப்ரஹ்மகார்யமான ஜகத்திலே அந்தர்பூதமாகையாலே உபபந்நமாம் ।

ஸூ. ஶப்தேப்ய: ॥ ௬ ॥

ஐததாத்ம்யமிதம் ஸர்வமித்யாதி ஶ்ருதிகளிலே ப்ரஹ்மத்துக்கு ஸ்ருஷ்டிக்குமுன்பு ஏகத்வாவதாரணத்தையும் ஸர்வாத்மகத்வாதிகளையும் சொல்லுகிற ஶப்தங்களாலேயும் வியத்துக்கு உத்பத்தி தோணுகிறது । தத்தேஜோऽஸ்ருஜத என்கிற வாக்யத்திலே ஆகாஶத்துக்கு உத்பத்தி சொல்லாமையானது ஶ்ருத்யந்தரஸித்தமான வியதுத்பத்தியை நிவாரிக்கமாட்டாதென்னு கருத்து ॥

ஸூ. யாவத்விகாரந்து விபாகோ லோகவத் ॥ ௭ ॥

யத்யபி ச்சாந்தோக்யத்திலே தத்தேஜோऽஸ்ருஜத என்னு தேஜஸ்ஸுக்கு ஸ்ருஷ்டி சொன்னாப்போலே ஆகாஶத்துக்கு கண்டோக்த்யா உத்பத்திசொல்லப்படவில்லை । ததாபி அந்த ச்சாந்தோக்யத்திலேதானே ஐததாத்ம்யமிதம் ஸர்வமென்னு யாவத்விகாரம் யாவத்துக்கும் ஆகாஶாதிமுதலான க்ருத்ஸ்நஜகத்துக்கும் ப்ரஹ்மவிகாரத்வரூபமான ப்ரஹ்மகார்யத்வம் சொல்லுகையாலே விபாக: । உத்பத்தி: । ஆகாஶத்துக்கும் உத்பத்திசொல்லப்பட்டதென்னபடி । லோகவத் । யதா லோகத்திலே ஏதே ஸர்வே தேவதத்தபுத்ரா: என்னு எல்லாருக்கும் தேவதத்தபுத்ரத்வத்தைச் சொல்லி அநந்தரம் சிலர்களுக்கு தேவதத்தனிடத்தில்நின்றும் உத்பத்தியைச்சொன்னால் அதுஎல்லாருக்கும் தேவதத்தனிடத்தில்நின்றும் உத்பத்திக்கு ப்ரதர்ஶநார்த்தமென்னு தோற்றுகிறதோ அப்படி இங்கும் தேஜஸ்ஸுக்கு உத்பத்திசொன்னது ஶ்ருத்யந்தரஸித்தமான ஆகாஶோத்பத்திக்கும் ப்ரதர்ஶநார்த்தமென்னு அபிப்ராய: ॥

ஸூ. ஏதேந மாதரிஶ்வா வ்யாக்யாத: ॥ ௮ ॥

ஏதேந ஸூத்ரத்துக்கு சொன்ன ந்யாயத்தாலேதானே மாதரிஶ்வா வாயுவும் வ்யாக்யாத: । ப்ரஹ்மகார்யமென்னு சொல்லப்பட்டது । தேஜோऽதஸ்ததா ஹ்யாஹ என்கிற மேல் ஸூத்ரத்திலே அத: ஶப்தத்தாலே வாயுவை பராமர்ஶிக்கைக்காக ஏதேந மாதரிஶ்வா வ்யாக்யாத: என்னு ப்ருதக்ஸூத்ரம் பண்ணினாரென்னு கருத்து ॥

ஸூ. அஸம்பவஸ்து ஸதோऽநுபபத்தே: ॥௯॥

து ஶப்த: ஶங்காவ்யாவ்ருத்த்யர்த்த: । ஸத: அஸம்பவ: । ஸச்சப்தவாச்யமான பரப்ரஹ்மத்துக்கே அஸம்பவ: । இத்தால் ப்ரஹ்மவ்யதிரிக்தமான ஒருவஸ்துவுக்காவது அநுத்பத்தியில்லையாதென்னுயித்து, அநுபபத்தே: । ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞைக்கு அநுபபத்தி வாருமைக்காக ப்ரஹ்மவ்யதிரிக்தமான ஆகாஶாதிக்ருத்ஸ்நஜகத்துக்கு உத்பத்தி ஸித்தித்தது ॥

ஸூ. தேஜோऽதஸ்ததா ஹ்யாஹ ॥௧௦॥

தேஜ:ப்ரப்ருதிகளுக்கும் வாய்வாதிஶரீரகமான ப்ரஹ்மத்தில் நின்னு உத்பத்தியென்னு இந்த அதிகரணத்தில் ஸாதிக்கிறாரென்னு ஸங்கதி । நாலு ஸூத்ரங்களாலே பூர்வபக்ஷத்தை உபந்யஸிக்கிறார்

ப்ரஹ்மஸ்ருஷ்டங்களான தேஜோஜலாந்நாதிகார்யங்கள் கேவலவாய்வாதிகளில் நின்னுமுண்டாகிறதா । உத வாய்வாதிஶரீரகபரமாத்மாவிடத்தில் நின்னுமா । இப்படி ஆகாஶாதிகார்யமாத்ரம் கேவலாகாஶத்தில் நின்னும் வாயு உண்டாகிறதா । உதாகாஶஶரீரகபரமாத்மாவிடத்தில் நின்னுமாவென்னு ஸம்ஶயம் । கேவலவாய்வாதிகளிடத்தில் நின்னுமே தத்தத்கார்யங்கள் உண்டாகிறதென்னு பூர்வபக்ஷம் । ஆகாஶாத்வாயு: । வாயோரக்நி: । என்னு கேவலாகாஶாதிகளே காரணங்களென்னு சொல்லுகையாலே என்கிற பக்ஷத்தை உபந்யஸிக்கிறார் ।

தேஜோऽதஸ்ததா ஹ்யாஹ ॥

அத: கேவலவாயுவில்நின்றும் தேஜ: தேஜஸ்ஸு உண்டாகிறது। ததா ஹ்யாஹ அப்படியன்றோ சொல்லுகிறது வாயோரக்நி: என்று ॥

ஸூ. ஆப: ॥௧௧॥

அத: ததா ஹ்யாஹ என்று கூட்டிக்கொள்ளவேணும்। அத: கேவலமான இந்த தேஜஸ்ஸில் நின்றும் ஆப: ஜலமுண்டாகிறது கள்। ததா ஹ்யாஹ। ததபோऽஸ்ருஜத என்னன்றோ ச்ருதி சொல்லுகிறது ॥

ஸூ. ப்ருதிவீ ॥௧௨॥

இப்படி ப்ருதிவியும் கேவலமான அப்புக்களில்நின்றுமுண்டாகிறது. தா அந்நமஸ்ருஜந்த என்னன்றோ ச்ருதிசொல்லுகிறது॥

தா அந்நமஸ்ருஜந்த என்கிற விடத்திலே அந்நசப்தத்தாலே ப்ருதிவியானது எப்படிசொல்லப்படுகிறதென்றால்அதுக்குத்தரம்

ஸூ. அதிகாரரூபசப்தாந்தரேப்ய: ॥௧௩॥

தா அந்நமஸ்ருஜந்த என்கிறவிடத்திலே அந்நசப்தத்தாலே ப்ருதிவீ சொல்லப்படுகிறது। குத: அதிகாரத்தாலே। மஹாபூதங்களுடைய ஸ்ருஷ்டிப்ரகரணமாகையாலே। ரூபாச்ச। யத்க்ருஷ்ணம் தத் அந்நஸ்ய என்று மேல்வாக்யத்திலே ப்ருதிவியினுடைய ரூபமான க்ருஷ்ணரூபத்தை அந்நத்துக்கு சொல்லுகையாலேயும்। சப்தாந்தராச்ச। இந்த அர்த்தத்துக்கு ஸமாநப்ரகரணமான தைத்திரீயகத்திலே அத்ப்ய: ப்ருதிவீ, என்று அப்புக்களில்நின்றும் ப்ருதிவீ உண்டாகிறதென்று சொல்லுகிற சப்தாந்தரத்தாலேயும் அந்நசப்தத்துக்கு ப்ருதிவீ அர்த்த: ॥

இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

ஸூ. ததபித்யாநாதேவ து தல்லிங்காத் ஸ: ॥௧௪॥

துசப்தம் பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது। கேவலங்களான மஹதஹங்காராகாசவாயுதேஜோऽப்ப்ரப்ருதிகள் தங்களுடைய காரியங்களுக்கு உபாதாநங்களன்று। கிந்து ஸர்வ।

தேஜ:ப்ரப்⁴ருதிஶரீரகனான பரமாத்மாவே ஸ்ருஷ்ட்யாதிகளுக்குக் காரணம் என்கிறது: தல்லிங்காத் தத³பி⁴த்⁴யாநாத் । அந்த பரமாத்மாவே காரணமென்கைக்கு லிங்கமான அந்த பரமாத்மாவினுடைய அபி⁴த்⁴யாநரூபமான ஸங்கல்பத்தாலே । தத³ைக்ஷத ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி, தத்தேஜோऽஸ்ருஜத, தத்தேஜ ஐக்ஷத, தா ஆப ஐக்ஷந்த, ப³ஹ்வ்ய: ஸ்யாம, ப்ரஜாயேமஹீத்யாதிகளிலே ப³ஹுப⁴வநஸங்கல்பரூபமான அபி⁴த்⁴யாநம் பரமாத்மலிங்கமென்னன்றோ சொல்லப்படுகிறது । இங்கு தேஜ:ப்ரப்⁴ருதிஶப்³த³ங்கள் தேஜ:ப்ரப்⁴ருதிஶரீரகபரப்³ரஹ்மபரங்களென்னு நாமரூப வ்யாகரணஶ்ருதியாலே ஸித்³த⁴ம் । கேவலாசேதநங்களுக்கு இப்படிப்பட்ட ஸங்கல்பம் கூடாதென்னு கருத்து ॥

ஸூ. விபர்யயேண து க்ரமோऽத உபபத்³யதே ச ॥ ௧௪ ॥

தாஶப்³த³: ஶங்காவ்யாவ்ருத்த்யர்த²: । விபர்யயேண க்ரமஸ்ஸ்ருஜதி அத உபபத்³யதே என்னு அந்வயிப்பது, ஆகாஶாத்³வாயு: வாயோரக்³நிரித்யாதிகளில் சொன்ன பரம்பரயமான ஸ்ருஷ்டிக்ரமத்தைக்காட்டிலும் ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்³ரியாணி ச । இத்யாதிஶ்ருதியில்சொன்ன ப்³ரஹ்மத்திலின்னுமே ஸமஸ்தமுண்டாகிறது என்கிற இந்த விபர்யயக்ரமமும் அதஏவ உபபத்³யதே தத்தச்ச²ரீரகபரமாத்மஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்டியென்னுசொன்னால்தான் உபபந்நமாகக்கூடும் ॥

ஸூ. அந்தரா விஜ்ஞாநமநஸீ க்ரமேண தல்லிங்கா³தி³தி சேந்நா விஶேஷாத் ॥ ௧௫ ॥

விஜ்ஞாநம் மநஶ்ச விஜ்ஞாநமநஸீ விஜ்ஞாநஶப்³த³த்துக்கு விஜ்ஞாநகாரணங்களானஇந்த்³ரியங்களர்த²ம் । ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்³ரியாணி ச । ஸம்பராயாஜ்ஜ்யோதிராப: ப்ருதி²வீத்யாதிஶ்ருதியிலே ஏதஸ்மாதி³திபத³ம் ப்³ரஹ்மபரமன்னு தந்நாத்³பரம் ததா² அந்தரா ஆகாஶத்துக்கும் தந்நாத³ புருஷத்துக்கும் நடுவிலே இந்த்³ரியங்களும் மநஸ்ஸும் ப்ராணனும் க்ரமேண உண்டாகிறதுகளென்னு இந்த க்ரமஸ்ருஷ்டிவிவக்ஷி

தம் । அத: தஸ்மாத் ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே ஜ்யோதிஷ்யாப: ஜ்யோ வாயௌ வாயுராகாஶே ப்ரலீயதே ஆகாஶஞ்சேந்த்ரியாணி தந்மாத்ரேஷு தந்மாத்ராணி பூதாதௌ லீயந்தே என்று சொன்ன ப்ரலயக்ரமப்ரத்யபிஜ்ஞாநபூர்வமான ஸம்ஶத்தாலே உக்தமெ । ஏதஸ்மாஜ்ஜாயதே இத்யாதிஶ்ருதியில் ஶ்ருத்யுக்த ஸித்தமான க்ரமஸ்ருஷ்டிவிவக்ஷிதமென்று சொன்னதுகூடாது । அத: அவிஶேஷாத் । பூதங்களுக்கும் தந்மாத்ரங்களுக்கும் அக்ஷரத்திலே விஜ்ஞாநங்களும் ப்ரத்யேகம் க்ரமமாக உண்டாகிறதென்னும் தேவமநுஷ்யாதிஶப்தங்கள் தத்வஸ்ரஷ்டப்ரஹ்மபரங்களென்றுப்போலே இந்த்ரியப்ரதேஶ ॥ ஶப்தங்களும் தத்வஸ்ரஷ்டப்ரஹ்மபரங்களாகையாலே ஸர்வத்துக்கும் ப்ரஹ்மத்தில்நின்றுமே ஸ்ருஷ்டியென்கிற அர்த்தம் ஸித்திக்கையாலே ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண: என்கிறதுக்கும் ஏதஸ்மாஜ்ஜாயதே இத்யாதிகளுக்கும் விஶேஷமில்லாமையாலே ஸாக்ஷாத்ப்ரஹ்மத்தில் நின்றும் ஸர்வமுண்டாகிறதென்கிற ஸாக்ஷாத்ஸ்ருஷ்டிக்கே இந்த வாக்யம் ஸாதகமென்று கருத்து ॥

லோகத்திலே கேவலதேஹாதிவாசகங்களாக ப்ரஸித்தமான தேவமநுஷ்யாதி பதங்களுக்கு ப்ரஹ்மபர்யந்தத்வம் சொன்னது அமுக்யமாக ப்ரஸஜிக்குமென்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத் தத்வ்யபதேஶோ பாக்தஸ்தத்பாவபாவித்வாத் ॥கஎ॥

து ஶப்த: ஶங்காம் வ்யாவர்தயதி । சராசரவ்யபாஶ்ரய: ஜங்கமஸ்தாவரவஸ்துக்களைச்சொல்லுகிற தத்வ்யபதேஶ: அந்த ஜங்கமஸ்தாவரவாசகஶப்தமானது ப்ரஹ்மணி முக்ய: । அந்த ஜகத்துக்கு ஆத்மபூதனான ப்ரஹ்மத்திலே முக்யப்ரயோகம் । அத: தத்பாவபாவித்வாத், தத்பாவ: ப்ரஹ்மாநுப்ரவேஶ: । பாவித்வாத், பவிக்கையால் ப்ரஹ்மாநுப்ரவேஶமுண்டாக பவிக்கையாலென்னபடி அத்தால் அந்த தேவமநுஷ்யாதிஶப்தங்களுடைய ப்ரஹ்ம

பர்யந்தவாசகத்வத்திலே ப்ரஹ்மத்தினுடைய ஸர்வாந்தர்யாமித்வாதிகமே ஹேதுவென்றாயித்து । அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி । தத³நுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத் என்கிற ஶ்ருதிகளில் லோகத்தில் புத்ராதிநாமரூப வ்யாகர்த்தாக்களான பித்ராதிகள்போலன்றிக்கே க்ரியமாணங்களான நாமரூபங்கள் ஸ்வப்ரயுக்தங்களானவைக்காக அநுப்ரவிஶ்ய என்று அநுப்ரவேஶம் ஶ்ருதமாகையாலே ஸர்வஶப்தங்களும் அந்தர்யாமியான விஶேஷ்யபர்யந்தபோதகங்களாகையாலே ப்ரஹ்மபோதகங்களென்று கருத்து ॥

ஸூ. நாத்மா ஶ்ருதேர்நித்யத்வாச்ச தாப்ய: ॥௧௮॥

இப்படி வியத்துக்கு ஸ்வரூபாந்யதாபாவரூபமான கார்யத்வம் கூடுகையாலே ப்ரஹ்மகார்யத்வத்தைச்சொல்லி ஜீவனுக்கு வியத்துக்குப்போலே ஸ்வரூபாந்யதாபாவரூபமான உத்பத்தி இல்லாவிட்டாலும் ஸ்வபாவாந்யதாபாவரூபமான கார்யத்வம் கூடுகையாலே ப்ரஹ்மகார்யத்வம் கூடுமென்று இந்த அதிகரணத்திலே ஸாதிக்கிறாரென்று ஸங்கதி ॥

ஜீவாத்மா உத்பத்யதே நவேதி ஸம்ஶய: । உத்பத்யத இதி பூர்வபக்ஷ: । குத: । தோயேந ஜீவாந்வ்யஸஸர்ஜ பூம்யாம், ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத இத்யாதிஶ்ருதியில் ஜீவர்களுக்கு உத்பத்தி சொல்லுகையாலென்னபடி । ஆனால் நித்யோ நித்யாநாமென்று ஜீவனுக்கு நித்யத்வம் சொன்னது வாயுஶ்சாந்தரிக்ஷம் ஏதத³ம்ருதமென்று அந்தரிக்ஷாதிகளுக்கு அம்ருதத்வம் சொன்னதுபோலே சிரகாலஸ்தாயித்வாபிப்ராயம் । ஆத்மாவுக்கு உத்பத்தி ஒப்புக்கொள்ளாவிட்டால் ப்ரஹ்மகார்யத்வம் கூடாத்தாலே ஏகவிஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞாநப்ரதிஜ்ஞை ஸித்தியாதென்கிற பக்ஷத்தை நிரஸிக்கிறார்.

ஸூ. நாத்மா ஶ்ருதே: ॥

நாத்மா । ஆத்மா நோத்பத்யதே । குத: ஶ்ருதே: । ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் இத்யாதிஶ்ருதிகளிலே ஜீவனுக்கு

உத்பத்தியை நிஷேதிக்கையாலே । தாப்ய: நித்யத்வாச்ச । அஜோ நித்ய:, நித்யோ நித்யாநாமென்னு இந்த ஶ்ருதிகளிலே ஆத்மாவுக்கு நித்யத்வம் சொல்லுகையாலென்னபடி । ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டி சொன்னது ஸாவதா:ஸ்வபோத்க்ஷ்யத்துக்கு அநுகுணமான ஜ்ஞாநவிகாஸஜ்ஞாநஸங்கோசரூபமான ஸ்வபாவாந்யதாபாவத்வகார்யத்வாபிப்ராயத்தாலே । அத: ஸம்ரூபாவஸ்தாந்தராபத்திரூபமான உத்பத்தி கூடுகையாலே ஜீவனுக்கு ப்ரஹ்மகார்யத்வவிரோதமில்லாமையாலே ஸங்குசிதஜ்ஞாநஸமஷ்டிவிஜ்ஞாநப்ரஜைக்கு அநுபபத்தி இல்லை ஸ்ருஷ்டிக்கு முன்பு ஸதேவ ஏகமேவாத்விதீயமென்னு ப்ரஹ்மத்துக்கு ஏகத்வம் சொன்னது தேவாதிநாமரூபவிபாகமில்லாத ஸூக்ஷ்மஜீவஶரீரகத்வாபிப்ராயத்தாலே ॥

அத்ராயம் விஶேஷ: । இந்த விஷயத்தில் ஸகலத்ரவ்யங்களுடைய ஸ்வரூபம் நித்யமாயிருந்தபோதிலும் அநித்யங்களான அவஸ்தைகளையிட்டு அநித்யமென்னு சொல்லுகிறது. இப்படி அநித்யங்களான ஶைஶவாத்யவஸ்தாரூபமாக த்ரவ்யங்கள் அநித்யங்களானாலும் அவயவி ஒப்புக்கொள்ளாததினால் ஸ்வரூபதோ நித்யத்வம் ஸித்தமாய்த்து । அப்படியே த்ரவ்யாந்தர்கதமான ஆத்மாவுக்கும் ஸ்வரூபதோ நித்யத்வம் ஸித்தமாயிருக்க நாத்மாஶ்ருதேரித்யதிகரணத்தாலே ஸூத்ரகாரர் திரும்பவும் ஆத்மாவுக்கு நித்யத்வத்தை எதற்காக சொல்லுகிறாரெனில் அது யுக்தந்தான் ஆனாலும் இந்த விஷயத்தில் கொஞ்சம் வைஷம்யமிருக்கிறது । ஆகாஶாத்யவஸ்யமான த்ரிகுணா விஶுத்த்ரவ்யத்துக்கு நாஶோத்பாதநத்துக்கு நிதாநமான அவஸ்தைகள் ஸ்வரூபாந்யதாபாவங்களானாப்போலே ஆத்மஸ்வரூபம் நிர்விகாரமாகையாலே ஜ்ஞாநஸங்கோசாவஸ்தை என்ன தேவமநுஷ்யாத்யவஸ்தை என்ன இந்த அவஸ்தைகள் ஆத்மஸ்வரூபாந்யதாபாவங்களில்லையென்னு ஹேதும் சொல்லுகைக்காக। இத்தால் த்ரிகுணத்ரவ்யத்துக்கு ஸ்வரூபவிகாரமிருக்கிறப்போலே ஜீவனுக்கு ஸ்வரூபவிகாரமில்லையென்னு உக்தமாய்த்து । தேவமநுஷ்யாத்யவஸ்தைகள் ஸ்வரூபாந்யதாபாவங்க

ளில்லையென்றால் எந்த பக்ஷங்கள் ஜ்ஞாதாவுக்கு ஸ்வாபாவிகத்வ ஸாதகங்களென்னில் உச்யதே । ஸூத்ரஸ்தம் ஜ்ஞாத்ருத்வம் இந்த இரண்டு பக்ஷங்களும் நித்யங்கள் । ஸாம்ஸாரிகதசையில் பஹுவித ஸங்கோசவிகாஸங்களிலும் ஸ்வாபாவத்தை விடுகிறதில்லை । இந்த ஸூத்ரஸ்தம் இரண்டுவிதம் । ஸ்வதஸ்ஸித்த ஸாதகம் । பரதஸ்ஸித்த ஸாதகமென்னும் । அஹமஹமென்று தனக்குத் தான் ஸாதிக்கை ஸ்வாபாவிகமாகையாலே ஸ்வதஸ்ஸித்த ஸாதகம் । ஸ்வேதரஜ்ஞம் ஸர்வஜ்ஞம் என்று விசேஷணத்தோடேகூடி அப்படி ஸாதிக்கை பக்ஷஸித்த ஜ்ஞாநத்தாலாகையால் பரதஸ்ஸித்த ஸாதகம் । இந்த இரண்டு ஸூத்ரமும் ஸித்தாந்தத்துக்கு அநுகுணம் । இப்படிப்பட்ட அபிப்ராயத்தாலே ஸூத்ரகாரர் ஜ்ஞாத்ருத்வத்தை ஸ்வருபமாக அருளிச் செய்தாரென்று கருத்து ॥

ஸூத்ரஸ்தத்தாலே ஜீவஸ்வாபாவத்தை நிரூபிக்கிறதென்று ஸங்கதி ॥

ஜீவன் வேதாந்தோக்த ஸ்வாபாவனாக ஜடஸ்வாபாவனாயிருந்து ஜ்ஞாநாகாரமான ஜ்ஞாநத்தைஉடையவனா । உத ஜ்ஞாத்ருத்வைகஸ்வாபாவனா என்று ஸம்சயம் । ஜ்ஞாநோக்த ஸ்வாபாவனென்று பூர்வபக்ஷம் । யத: விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே என்று ஜ்ஞாநஸ்வாபாவனென்று சொல்லுகையாலே ஸாங்க்யாதிகளிலே ஜ்ஞாதாவுக்கு ஜ்ஞாநம் தோணுகையாலே ஜ்ஞாநாக வேதாந்தகணனாய் பாஷாணகல்பனாயிருக்கிறானென்று த்விதீய பக்ஷம் । இந்த இரண்டு பக்ஷத்தையும் நிரஸிக்கிறார் ॥

ஸி. ஜ்ஞோऽத ஏவ ॥ ௧௯ ॥

ஜ்ஞ: அத ஏவ என்று அந்வயம் । யத: அத ஏவ ப்ரஜ்ஞாவான் ஸூத்ராநவஶ்யா ச்ருத்யாம் வச்யதி இத்யாதி ச்ருதிகளாலே பஹுகோத்யாவஸ்யனான ஜீவனும் ஜ்ஞாதாவென்று சொல்லுகையாலே ஜ்ஞாதாவானவன் ஜ்ஞனாக । ஜ்ஞாத்ருத்வஸ்வாபாவனாகவேயிருக்கிறானென்று ஸித்தாந்த: । ஜ்ஞாநோக்தாநு ஜ்ஞாதா வே

ன்று ஶ்ருதி சொன்னது நித்யமான பரமாத்மஜ்ஞாநம் ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமானமாகையாலேயும் ஆத்மஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாஶமாகையாலுமென்னபடி । ஸாக்ஷாத்க்ருதிகளிலே பரமாத்மஜ்ஞாநம் கர்மத்தாலே ஸங்குசிதமாயிருக்கிறது । ஆகையால் ஆத்மா ஜ்ஞாத்ருஸ்வரூபனென்று ஸித்தம் ।

ஜீவாத்மா விபுவாயிருக்கிறனென்று சொன்ன வைஶேஷிகாபிமதமான த்விதீயபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

ஸூ. உத்க்ராந்திகத்யாகதீநாம் ॥௨௦॥

ஶ்ருதேः என்று கூட்டிக்கொள்ளவேண்டும் । உத்க்ராந்திகத்யாகதிவிஷயையான ஶ்ருதிஸத்பாவத்தாலென்னபடி । அணுஸ்வரூபனோ ஜீவः தேந ப்ரத்யோதேந ஏஷ ஆத்மா நிஷ்க்ராமதி என்று ஜீவனுக்கு தேஹத்தில்நின்றும் உத்க்ராந்திஶ்ருதிப்ரஸித்தை । ஆத்மா விபுவானால் இதுஎப்படிக்கூடும் । யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி என்று தேஹத்தில் நின்றும் உத்க்ராந்தனான ஜீவனு ஸ்வர்க்கத்துக்குப்போகிறானென்று கதியும், தஸ்மால்லோகாத் புநரேதி அஸ்மை லோகாய கர்மணே என்று ப்ராநஶ்ருதியிலே கர்மஶேஷத்தை அநுபவிக்கைக்காக வருகிறானென்று ஆகதியும்சொல்லப்படுவதாலால் ஆத்மாவிபுவானால் கத்யாகதிகள்கூடாத்தாலேஜீவன் அணுஸ்வரூபந்தான்॥

ஸூ. ஸ்வாத்மநா சோத்தரயோः ॥௨௧॥

சஶப்தம் அவதாரணார்த்தத்தைச் சொல்லுகிறது உத்தரயோः உத்க்ராந்திக்கு மேலான ஶ்ரூயமாணமான கதி என்ன ஆகதி என்ன இந்த இரண்டுகளுக்கும் ஸ்வாத்மநா ஸ்வரூபேணவென்னவே । ஆத்மஸ்வரூபமே பரலோகத்துக்குப் போகிறது இஹலோகத்துக்கு வருகிறது என்று நிர்வாஹம்பண்ணுகிறது யோஜ்யம் । ஆத்மா விபுவென்கிறபக்ஷத்தில் ஶரீரத்தில் அவஸ்திதனான ஆத்மாவுக்கு ஶரீரவிஶ்லேஷமாத்ரத்தைக்கொண்டு உத்க்ராந்தியென்று ஶப்தப்பட்டு நிர்வஹித்தபோதிலும் இதுக்குமேலுள்ள கமநாகமநங்கள் கூடாதென்று கருத்து ॥

ஸூ. நாணுரதச்ச்ருதேரிதி சேந்நேதராதிகாராத் ॥௨௨॥

ந அணு: ஜீவந் அணுவன்று । குத: । அதச்ச்ருதே: । அணுத்வவிபரீதமஹத்வச்ருதே: ॥

யோऽயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா என்று ஜீவனுக்கு மஹத்வம் சொல்லுகையாலென்னபடி । இதி சேத் ந । இந்த சங்கையை நிவர்த்திக்கிறார் । மஹாநஜ ஆத்மாவென்று ஜீவனுக்கு மஹத்வம் சொல்லப்படவில்லை । பரமாத்மாவுக்கே மஹத்வத்தைச் சொல்லுகிறது । குத: இதராதிகாராத் । யஸ்யாநுவித்த: ப்ரதிபுத்த ஆத்மா என்று உபக்ரமத்தில் ஜீவனில்காட்டிலும் இதரனான பரமாத்மாவினுடைய அதிகாரத்தாலே ப்ரகரணம்முழுதும் பரமாத்மபரமென்னபடி । யஸ்ய பரமேச்வரஸ்ய அநுவித்த: உபாஸக: ஆத்மா ப்ரதிபுத்த: ஸம்யக்ஜ்ஞாதவாந் என்று ச்ருத்யர்த்தம் ॥

ஸூ. ஸ்வசப்தோந்மாநாப்யாம் ச ॥௨௩॥

ஏஷோऽணுராத்மா சேதஸா வேதிதவ்ய: என்று ஸாக்ஷாத் அணுசப்தவசநத்தாலேயும் உந்மாநத்தாலேயும் ஆத்மா அணுபரிமாணன் । உந்மாநமாவது, உத்த்ருத்ய மாநம், ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோऽபி த்ருஷ்ட:, வாலாக்ரசதபாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச । பாகோ ஜீவஸ்ஸ விஜ்ஞேயஸ்ஸ சாநந்த்யாய கல்பதே ॥ என்று ஊசி நெல்லினுடைய அக்ரத்தை த்ருஷ்டாந்தமாகவெடுத்து தத்துல்யபரிமாணன் ஜீவனென்று சொல்லுகை உந்மாநம் । அத: அணுரேவ ஜீவ: ॥

ஸூ. அவிரோதச்சந்தநவத் ॥௨௪॥

அணுவான ஜீவன் தேஹைகதேசத்திலேயிருக்கிலும் ஸகலதேஹவ்யாபியான ஸுகது:கங்களுடைய அநுபவத்தில் விரோதமில்லை । சந்தநவத் । சந்தநபிந்துவானது தேஹைகதேசத்திலிருந்துகொண்டு ஸகலதேஹவ்யாபியான ஆஹ்லாதத்தை உண்டாக்குகிறாப்போலே ஆத்மாவும் அநுபவிக்கலாம் ।

ஸூ. அவஸ்திதிவைஶேஷ்யாதிதிசேந்நாப்யுபகமாத்ஹ்ருதிஹி ॥௨௫॥

சந்தநபிந்துவுக்கு வக்ஷஸ்ஸ்தலத்தில் அவஸ்திதிவைஶேஷ்யத்தாலே ஆஹ்லாதஜநகத்வம் கூடும் । ஆத்மாவுக்கு அதுயில்லாதபடியால் எப்படிக்கூடுமிதிசேந்ந । அப்யுபகமாத் । ஆத்மாவுக்கும் தேஹத்திலே ஹ்ருதயஸ்தலத்தில் விஶேஷாவஸ்திதியை அங்கீகரிக்கையால் ஸகலதேஹவ்யாபிஸுகாநுபவம் கூடும். ஹ்ருதி ஹி । யோऽயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: என்கிறஶ்ருதியில் ஆத்மா ஹ்ருதயத்திலிருப்பதாக சொல்லப்படுகிறானன்றோ ॥

ஸூ. குணாத்வா லோகவத் ॥௨௬॥

வாஶப்தம் பக்ஷாந்தரத்தை வ்யவச்சேதிக்கிறது । குணாத் । அணுவான ஆத்மாவானவன் ஸ்வகுணபூதமாய் விபுவான தர்மபூதஜ்ஞாநத்தாலே ஸகலதேஹத்தையும் வ்யாபித்திருக்கிறான் । யதா லோகவத் ஏகதேஶத்திலேயிருக்கிற ஸவித்ருதீபமணிப்ரப்ருதிகளுடைய குணபூதாலோகமானது அநேகதேஶத்தை வ்யாபித்திருக்கிறாப்போலே ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாநமும் வ்யாபித்திருக்கிறதில் தடையில்லை ॥

விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே இத்யாதிஶ்ருதியிலே விஜ்ஞாநஶப்தவாச்யனாகச்சொல்லப்பட்ட ஆத்மாவுக்கு ஜ்ஞாநகுணகத்வம் கதிதம் ॥

ஸூ. வ்யதிரேகோ கந்தவத்ததா ச தர்ஶயதி ॥௨௭॥

வ்யதிரேக: । ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவில்காட்டிலும் குணமான தர்மபூதஜ்ஞாநத்துக்கு வ்யதிரேக: வேறுபாடானது அவஶ்யம் அங்கீகரிக்கவேணும் । கந்தவத் । கந்தவதீ ப்ருதிவீ என்கிற உபலம்பத்தாலே ப்ருதிவியைக்காட்டிலும் தத்குணபூதகந்தத்துக்கு வேறுபாடு ஸித்திக்கிறாப்போலே தர்மபூதஜ்ஞாநத்துக்குமென்னபடி । ததா ச தர்ஶயதி । ஜாநாத்யேவாயம் புருஷ: என்கிற ஶ்ருதியும் ஆத்மாவையும் ஜ்ஞாநத்தையும் குணியாயும் குணமாயும் வ்யபதேஶிக்கிறது ॥

ஸூ. ப்ருதகுபதேஶாத் ॥உ௮॥

ந விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோ வித்யதே என்னு ப்ருதக்பூதமான ஆத்மாவில்காட்டில் ப்ருதக்பூதமான ஜ்ஞானத்தை ப்ருதக்கரித்து ஜ்ஞானம் நித்யமென்னு வ்யபதேஶிக்கையால் ஆத்மாவுக்கு ஜ்ஞானகுணகத்வம் ஸித்தம் ॥

ஆத்மாவுக்கு ஜ்ஞானம் குணமாகில் விஜ்ஞானம் யஜ்ஞம் தநுதே என்னு ஆத்மஸ்வரூபத்தை ஜ்ஞானமென்னு சொல்லுகை எப்படி கூடும் । அத்ராஹ ॥

ஸூ. தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத் ॥உ௯॥

துஶப்த: ஶங்காவ்யாவ்ருத்த்யர்த்த: । தத்குணஸாரத்வாத் । அந்த ஜ்ஞானரூபகுணத்தை ஸாரமாக ஸ்வரூபநிரூபகமாக உடைத்தாயிருக்கையாலே । தத்வ்யபதேஶ: । ஆத்மாவை ஜ்ஞானமென்னு வ்யபதேஶிக்கிறது । ப்ராஜ்ஞவத் எப்படி ப்ரஹ்மணா விபஶ்சிதாவென்னு ப்ராஜ்ஞனுக்குச்சொல்லப்பட்ட பரப்ரஹ்மம் ஸத்யம்ஜ்ஞானமநந்தம் என்னு ஜ்ஞானஸ்வரூபனாக வ்யபதேஶிக்கப்படுகிறானோ அப்படி ஜீவனும் ॥

ஸூ. யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷஸ்தத்தர்ஶநாத் ॥௩௰॥

ஜ்ஞானம் ஆத்மாவுக்கு யாவத்ஸ்வரூபபாவியாகையாலேயும் அந்த நித்யமான தர்மபூதஜ்ஞானத்தாலே ஆத்மாவை வ்யபதேஶிக்கையில் தோஷமில்லை । தத்தர்ஶநாத் । கண்டமுண்டாதிகளான கோவ்யக்திகளுக்கு கோத்வரூபமான தர்மம் யாவத்ஸ்வரூபபாவியாகையாலே அந்த கோத்வவாசியான கௌ: என்கிற ஶப்தத்தாலே அந்த கண்டாதிவ்யக்திகளுக்கு வ்யபதேஶம் காண்கையாலே இங்கும் விஜ்ஞானம்யஜ்ஞம் தநுதே என்னு விஜ்ஞானஶப்தத்தாலே ஆத்மாவை வ்யபதேஶிக்கக்குறையில்லை । சகாரத்தாலே ஆத்மஸ்வரூபம் ஸ்வப்ரகாஶமாகையாலும் ஜ்ஞானமென்னு வ்யபதேஶிக்கலாமென்னுஸூசிதம் । ஆத்மாவுக்கு ஜ்ஞானம் நித்யமாகில் ஸுஷுப்த்யாதிகளிலே ஏன் தோன்றவில்லை என்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. பும்ஸ்த்வாதிவத்த்வஸ்ய ஸதோऽபிவ்யக்தியோகாத் ॥௩௧॥

த்ருஷ்டாந்தம் பும்ஸ்த்வத்தைச் சொல்லுகிறது । அஸ்யார்த்த: பால்யாதிகளிலேயும் வித்யமானமாய் அநபிவ்யக்தமான இந்த ஜ்ஞானத்துக்கு யௌவனாதிதசையிலே அபிவ்யக்தியோகாத் । ஜ்ஞானம் ஸ்வப்ரகாசிக்கையாலே ஜ்ஞானம் ஆத்மாவுக்கு நித்யமான படியும் பும்ஸ்த்வாதிவத் । ஶரீரத்திலே இருக்கிற பும்ஸ்த்வபாதானது பால்யத்திலே அநபிவ்யக்தமாய் யௌவனதசையில் அபிவ்யக்தமாகிறாப்போலே இங்கும் குறையில்லை । இப்படி ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வத்தையும் கர்த்ருத்வத்தையும் ஸாதித்து விபுத்வபக்ஷத்தில் தோஷத்தை அருளிச்செய்கிறார் ॥

ஸூ. நித்யோபலப்த்யநுபலப்திப்ரஸங்கோऽந்யதர நியமோ வாऽந்யதா ॥௩௨॥

அந்யதா । ஜ்ஞானமாத்ர ஸ்வரூபனாத்மா என்கிற பக்ஷத்திலும் ஸர்வகதனாத்மா என்கிற பக்ஷத்திலும் நித்யமாக உபலப்தியும் அநுபலப்தியும் ப்ரஸங்கிக்கும் । அதவா அந்யதர நியம: உபலப்திபாவது அநுபலப்திபாவது இரண்டிலே ஒன்று நியமேந ப்ரஸங்கிக்கும் । ஜ்ஞானமாத்ர ஸ்வரூபனென்கிறவாதத்திலே ஆத்மாவினுடைய உபலப்திக்கும் அநுபலப்திக்கும் ஆத்மஸ்வரூபமே ஹேதுவாகையாலே வேறு ஹேது இல்லாமையாலே ஸ்வரூபம் நித்யமாயிருக்கையாலே இரண்டும் நித்யமாக ப்ரஸங்கிக்கும் । அதா உபலப்தியும் அநுபலப்தியும் பரஸ்பரவிருத்தங்களாகையாலே ஆத்மஸ்வரூபமானது இரண்டில் ஒன்றுக்கே ஹேதுவென்று சொல்லில் அந்யதர நியமம் வரத்தெரியும் । விபுத்வபக்ஷத்திலேயும் ஜ்ஞானத்துக்கு ஹேதுவான ஆத்மமந:ஸம்யோகாதிகள் விபுக்களெல்லாருக்கும் ஸாதாரணமாயிருக்கையாலே ஒரு ஆத்மாவுக்கு ஜ்ஞானமுண்டானால் எல்லாருக்கும் உபலப்தி ப்ரஸங்கிக்கும் ஒருத்தருக்கு உபலப்தியில்லாவிடில் எல்லாருக்கும் அநுபலப்தி ப்ரஸங்கிக்கும் । ஆகையால் இந்த இரண்டுமதமும் அநுபபந்நம் ॥

ஸூ. கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத் ॥௩௩॥

இப்படி ஆத்மாவுக்கு கர்த்ருத்வோபயோகியான ஜ்ஞாத்ருத்வத்தை நிரூபித்து கர்த்ருத்வத்தை நிரூபிக்கிறாரென்னு ஸங்கதி । ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் போலே கர்த்ருத்வமுண்டா இல்லையா என்னு ஸம்ஶயம் । அஹங்காரவிமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே । என்னு சொல்லுகையாலே ஆத்மா அகர்த்தாவன்னு ப்ரக்ருதியே கர்த்ரீயென்னு பூர்வபக்ஷம் । இந்த ஸாங்க்யமதத்தை நிரஸிக்கிறார் ॥

கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத் ॥

ஆத்மாவே கர்த்தா ப்ரதானமன்னு । கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத் ஆத்மா கர்த்தாவானால்தான் । யஜேத உபாஸீத என்னு யாகோபாஸநாதிகளை விதிக்கிற ஶாஸ்த்ரத்துக்கு ப்ரயோஜநமுண்டு । ஶாஸ்த்ரமாவது ஶாஸநாத் ஶாஸ்த்ரமென்கிறபடியே கர்த்தாவுக்கு கர்த்தவ்யார்த்தத்தை போதித்து ப்ரவர்த்தகமென்னபடி இத்தால் ஜ்ஞாதாவைக்குறித்தன்றே ஸ்வர்க்ககாமஃ மோக்ஷகாமஃ என்னு விதிக்கை உபபந்நம் । அசேதநமான ப்ரதாநம் கர்த்தாவானால் விதிக்கை அநுபபந்நம் । ஆகையாலே கர்த்தாவான ஆத்மாவைக்குறித்தே ஶாஸ்த்ரம் போதிப்பிக்கிறது. அசேதநமான ப்ரதாநத்தை அன்னு ॥

ஸூ. உபாதாநாத்விஹாரோபதேஶாத் ॥௩௪॥

ஸ ஏவமேவைதான் ப்ராணான் க்ருஹீத்வா ஸ்வே ஶரீரே யதாகாமம் பரிவர்த்ததே என்னு ஆத்மாவுக்கு ப்ராணங்களுடைய உபாதாநத்தை உபதேஶிக்கையாலே யதாகாமம் பரிவர்த்ததே என்னு ஶரீரத்திலே ஆத்மாவுக்கு விஹாரத்தை உபதேஶிக்கையாலேயும் ஆத்மாவே கர்த்தா ந ப்ரதாநம் ॥

ஸூ. வ்யபதேஶாச்ச க்ரியாயாம் ந சேந்நிர்தேஶவிபர்யயஃ ॥௩௫॥

க்ரியாயாம் வ்யபதேஶாச்ச கர்த்தா । விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே । கர்மாணி தநுதேऽபி ச । என்னு வைதிகக்ரியையிலும் லௌகிகக்ரியையிலேயும் ஆத்மாவுக்கு கர்த்ருத்வத்தை வ்யபதேஶிக்கையாலும் । ந சேத் । கர்த்தா இல்லையாகில் விஜ்ஞாநம் யஜ்ஞம் தநு

தே என்கிற ச்ருதியில் விஜ்ஞாநசப்தம் ஆத்மாவைச்சொல்லவில்லை। புத்தியென்கிற அந்த:கரணமானவொருவஸ்துவைச் சொல்லுகிறது। இதி சேத் அப்படியாகில் நிர்தேசவிபர்யய: ஸ்யாத் விஜ்ஞாநேந யஜ்ஞம் தநுதே என்று கரணவிபக்தியான த்ருதீயாவிபக்தி நிர்தேசம் வரத்தெரியும்। புத்தியானது க்ரியையிலே காரணமாகையாலே।

ஸூ. உபலப்திவதநியம: ॥கசு॥

ப்ரதாநத்துக்கே கர்த்ருத்வம் ஆத்மாவுக்கு போக்த்ருத்வமென்கிற பக்ஷத்திலே உபலப்திவத் முன்புசொன்ன உபலப்தி நியமஸாம்யம்போலே போக்த்ருத்வத்துக்கு அநியமமும் ப்ரஸங்கிக்கும் ப்ரதாநம் ஸர்வஸாதாரணமாயிருக்கையாலே போக்த்ருத்வமும் ஸர்வாத்மாக்களுக்கும் ஸாதாரணமாக ப்ரஸங்கிக்கும்॥

ஸூ. சக்திவிபர்யயாத் ॥கஎ॥

ப்ரக்ருதியே கர்த்ராவாகில் கர்த்ராவுக்கே போக்த்ருத்வம் ப்ராப்தமாகையாலே ப்ரக்ருதிக்கே போக்த்ருத்வசக்தியும் ப்ரஸங்கிக்கும்। ஆகையாலே ஆத்மாவுக்கு போக்த்ருத்வசக்தியுடைய விபர்யயாபாவம் ப்ரஸங்கிக்குமென்னுகருத்து।

ஸூ. ஸமாத்யபாவாச்ச ॥கஅ॥

ப்ரக்ருதிக்கு கர்த்ருத்வமங்கீகரித்தால் மோக்ஷஸாதநஸமாதிஸமாத்யபாவம் ப்ரஸங்கிக்கும் ப்ரக்ருதியைக்காட்டிலும் அந்யோஹமஸ்மியென்கிற ஸமாதியிலே ப்ரக்ருதிக்கு கர்த்ருத்வஸம்மதமாகையாலே ப்ரதாநம் கர்த்ராவன்று।

ஸூ. யதா ச தக்ஷோபயதா ॥ககூ॥

ஆத்மா கர்த்ராவானால் ஸர்வதா ப்ரஸங்கத்தை இச்சித்தபோது வைதிகலௌகிககார்யங்களை பண்ணுகிறான் இச்சியாதபோது பண்ணவில்லையென்கிற உபயதா வ்யவஸ்தைகூடும்। யதா ச தக்ஷா தச்சனானவன் இச்சை இருந்தபோது கார்யங்களைப்பண்ணியும் இச்சை இல்லாதபோது பண்ணாமலுமிருக்கக் காணாநின்றோம்। இப்படி இச்சாமூலமான காரணாகாரணவ்யவஸ்தை கூடாதென்னு கருத்து॥

ஸூ. பராத்து தச்ச்ருதே: ॥௪௦॥

தாத்பர்யம்: ஶங்காவ்யாவர்த்தக: । பராத் । பரமாத்மந: ஸகாஶாத்து । தத் । கர்த்ருத்வம் ப்ரவர்த்ததே (?) ஜீவஸ்ய பரமாத்மாயத்தம் கர்த்ருத்வமென்னபடி । குத: ஶ்ருதே: । அந்த:ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா ய ஆத்மாநமந்தரோ யமயதி என்று பராயத்தகர்த்ருத்வத்தை ஶ்ருதி சொல்லுகையாலே என்னபடி । இப்படி ஜீவன் பராயத்தகர்த்தாவென்றால் ஸர்வேஶ்வரனே ஸர்வப்ரேரகனும் ப்ரயோஜககர்த்தாவாகையால் அவைஷம்யம் ஏககர்த்ருத்வாதியாகையாலே விதிநிஷேதவையர்த்யமவனுக்கே ப்ரஸங்கிக்குமென்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தா
வையர்த்யாதிப்ய: ॥௪௧॥

தாத்பர்யம்: ஶங்காவ்யாவ்ருத்த்யர்த்த: । ப்ரயத்நப்ரவ்ருத்தியிலே ஜீவனாலே க்ருதமான ப்ரயத்நத்தை அபேக்ஷித்து பரமேஶ்வரன் ஜீவனை ப்ரவர்த்திப்பிக்கிறான் । அத: விஹிதப்ரதிஷித்தா வையர்த்யாதிப்ய: । ஜீவனுக்கு ப்ரயத்நப்ரவ்ருத்தியிலே ஸ்வாதந்த்ர்யமில்லாவிட்டால் [illegible] [illegible] என்கிற விதிநிஷேதஶாஸ்த்ரத்துக்கு வையர்த்யம் வரும். ஜீவன் நிக்ரஹாநுக்ரஹங்களுக்கு அவிஷயமாக ப்ரஸங்கிக்கும் அதுகள் ப்ரஸங்கியாமைக்காக ஜீவக்ருதப்ரயத்நத்தை அபேக்ஷித்து பரன் ஜீவனை ப்ரவர்த்திப்பிக்கிறான் । அந்த ப்ரயத்நப்ரவ்ருத்தியிலே ஸ்வாதந்த்ர்யமும் ஈஶ்வரனால் கொடுக்கப்பட்டது । அதுவும் பரதந்த்ரவஸ்துவினுடைய ஸ்வரூபாநுரூபமென்னு கருத்து.

ப்ரயோஜகத்வ காரணாதி வைஷம்யநைர்க்ருண்ய பரிஹார: கார்ய: கிமிதி சேத் ॥

கர்த்ருத்வம் இரண்டுவிதம் ப்ரயோஜககர்த்ருத்வம் ப்ரயோஜ்யகர்த்ருத்வமென்னும். அதில் ப்ரயோஜககர்த்ருத்வம் ஈஶ்வரனுக்கும் ப்ரயோஜ்யகர்த்ருத்வம் ஜீவனுக்கும் சொல்லப்படுகிறது । இதனால் அந்த:ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா, ய

தாநஜ்ஞேநாபேதி ஐத்ராதிவ ரணத்தில் சொல்லுகிறபடியே ஸம்கோசமன்னியில் ஸர்வகாலத்திலும் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி கார்யங்களுக்கும் கர்த்ருத்வமுண்டென்னு உக்தமாய்த்து । இப்படியாகில் ஜீவனுடைய விஷம ப்ரவ்ருத்திக்கும் தந்மூலமான ஸுக து:கா நுபவத்துக்கும் காரணமாகையாலே ஸர்வேச்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யம் ப்ரஸம்ஜிக்குமென்னில் அதுவாராது । நாநாஜாதிகளான ஸஸ்யங்களுக்கு ஜலமானது ஸாதாரணகாரணமாயிருப்போலேயும் ஸஸ்யத்திலுள்ள வைஷம்யம் பீஜக்ருதமாணப்போலவும் ஜீவனுடைய விஷம ப்ரவ்ருத்திக்கும் தத்ஸமமான ஸுகதுகத்துக்கும் அவன் கருமமே ஹேதுவாகையாலே ஜலம் போல் ஸாதாரணகாரணமான ஸர்வேச்வரனுக்கும் வைஷம்ய நைர்க்ருண்யம் வாராது । தஜ்ஞ கர்மா கர்மாநுகமென்னபடி । ஸஏஷ ஸர்வப்ரவ்ருத்திஷு என்கிறபடியே ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரனுக்கு ச்ருதியில்சொல்லுகிற ஸ்வாமித்வாதிஹேதுத்தாலே ஸ்வாதந்த்ர்யாதிகள் அந்தந்த ஜீவனுடைய புண்யபாபகர்மமாகையாலே தோஷமில்லை । நந்ந ஜீவனுடைய கர்மவாஸனையே அவனுடைய இஷ்டாநிஷ்டங்களுக்கு விசேஷகாரணமென்னுக்தமாய்த்து । அப்படியாகில் ஸர்வேச்வரனுடைய க்ருபை என்னசெய்கிறதென்னில் சொல்லுகிறேன் । ஸகலகார்யங்களும் கர்மாதீநமாயிருந்தாலும் ஸாபேக்ஷத்வத்தாலே ஸந்தாபாயத்தை ஸஹித்து ஈப்ஸிதப்ரதேயான ஸௌஹார்த்தத்தை குடுக்கை க்ருபாகார்யமாகையாலே க்ருபைக்கு விசேஷ ப்ரயோஜநம் ஸித்தமாய்த்து । ஆனாலும் ஸர்வேச்வரனுக்கு ஜீவநிக்ரஹம் தோஷாவஹமன்றோவென்னில் அதாயாருக்கு தோஷாவஹமென்னு விசாரிக்கவேணும் । ஸர்வேச்வரன் ஸர்வநியந்தாவாகையாலே அவனிடத்தில் இது தோஷாவஹமன்னு । ஜீவனுக்கு இது அநிஷ்டாவஹமாயிருந்தாலும் அதனால் ஸர்வேச்வரனுக்கு ஒருகெடுதியுமில்லை அப்படி லோகத்தில் துஷ்டநிக்ரஹஸாலியாய் சிஷ்டரக்ஷகனை மஹாராஜாவை ஜநங்கள் புகழ்ந்துகொண்டு ச்லாகிக்கிறார்கள். அப்படிப்போலே க்ருபாலுவான ஸர்வேச்வரனை அவருடைய

தோஷங்களைப்போக்குகிறதற்காக ஸூத்ரயிக்கக் குறைவு இல்லை । ஆகையால் ஸநாதஹநிர்ஹமிந்த இரண்டுக்கும் விஷயபேதத்தாலே விரோதமில்லை । இப்படியே உதாஸீநத்வ ப்ரகத்வ ஸாக்ஷித்வா நாதேஜஸ்வாதிகளுங்கள் பரஸ்பரவிரோதங்களாய்த் தோன்றினாலும் இவைகளெல்லாம் ப்ரகரணத்தால் ஸம்மதங்களாகையாலே விரோதமில்லை । காதாவிஸகமான ப்ரகரணத்தைக்கொண்டு கர்மிவைக்கும் காதாவிஸகத்வா சே ஸம்கிக்கவொண்ணாது. அதெப்படியென்றால் நித்யாநித்யபேதத்தாலே காரணமிரண்டுவிதம் । அதில் ஸர்வாத்மாக்களுடைய ஸ்வரூபஸ்திதி ஸித்யாதி ஸாரகணகாரிணியான கர்மவை நித்யை । தத்தஜ்ஜாதஸம்கர்மாதிரூபவிசேஷகரத்துக்குவிசேஷஸம்ஸ்தாநாமரூபமாயுள்ள கர்மவை அநித்யை । ஆகையால் ஸர்வவிஷயத்திலும் ஸகலஸம்ஸ்தாநஸம்கல்பரூபமான ஸாமாந்ய காரணம் தான் நித்யமாயும் நிஹேதுகமாயுமிருக்கிறது । விசேஷஸம்ஸ்தாநஸம்கல்பரூபமான அநித்யகர்மவையே ஸஹேதுகமென்கிறது । இத்தால் நித்யகர்மவாஸஞ்சகமும்ஸித்தது। உதாஸீநாதிகளுக்கு அவிரோதம் எப்படியென்னில் சொல்லுகிறேன் । ஸர்வஸ்யாபி ஸ்வதந்த்ரனாகையாலே கர்த்ருத்வமென்ன ஸ்வயோஜ்யகர்த்தாவான ஜீவனைக்கொண்டு காரயிதாவாகையாலே ப்ரகத்வமென்ன ஸ்வதந்த்ரன வேதனை உத்ரோதரம் ஸ்வதந்த்ரனாகையாலே ஸநாதேஜஸ்வமென்ன ஸம்ஸாராதிகளில் ஜீவத்துக்குப்போலே ஸர்வகார்யங்களுக்கு ஸாமாந்யஹேதுவாகையாலே உதாஸீநத்வமென்ன ஸர்வப்ரவ்ருத்தியிலும் ஸர்வத்தையும் பார்க்கையாலே ஸாக்ஷித்வமென்ன அவனவன் கர்மத்தை ஸஹகரித்து ஸர்வத்தையும் செய்கிறபடியால் ஸஹகாரித்வமென்ன ஸர்வஸ்வாமியாகையாலும் ஸர்வரக்ஷணஸமர்த்தமாகையாலும் ஹரித்வமென்ன ஹரிர்தேவதை: என்கிறபடியே ஹரித்வமென்ன இதுகளெல்லாம் காதாவிஸகங்களன்னியில் ஸர்வகார்யத்திலும் ஸம்மதங்களாகையாலே விரோதங்களில்லை ॥

ஸந்தாயம் ஸம்ப்ரவக்ஷ: । ஜீவனுடைய ஸ்வரூபவ்யாப்தியா
னது ஸம்ஸாரஸேவையன்னியில் உண்டாகிறது । ஆகையால்
ப்ரயத்நவ்யாப்தியில் ஜீவனுக்கு நிரபேக்ஷகர்த்ருத்வமுண்டு
அப்படியில்லாவிட்டால் கர்த்தாவே போக்தாவாகையால் ஜீவவிஷய
த்தில் நிக்ரஹம் உதிக்கவிரகில்லை । ஸம்ஸாரனுக்கே கர்த்ருபோ
க்த்ருத்வம் ப்ரஸங்கிக்குமென்னுசொல்லுகிறார்கள் । இந்த பக்ஷமும்
தங்கள் பக்ஷத்திலும் துல்யம் । ப்ரயத்ந வ்யாப்தியில் நிரபேக்ஷ
கர்த்ருத்வமிருந்தாலும் ஜீவனுடைய த்விதீயாதி வ்யாப்தியில் ஸம்ஸா
ரநு ஸஹகாரியென்னு அவர்கள்சொல்லுகையாலே அது ஸம்ப்ர
தாயத்தில் ப்ரவ்ருத்தனான பாஷ்ய காரர்களான பெரி
யோர்கள் நிஷேதிக்கக்காணுகின்றோம் । அப்படி அன்னியில் ஸம்
ஸாரநு அந்த விஷயவ்யாப்தியை ஸஹகரிக்கப்பண்ணுகையாலே அந்
தபக்ஷத்திலும் நிக்ரஹம் வருகையாலும் நியந்த்ருத்வஸாமர்த்யத்துக்கு
ஸங்கோசம் வருகையாலும் ப்ரயத்ந வ்யாப்தியில் ஸம்ஸாரநு உபே
க்ஷிக்கிறானென்கிற பக்ஷம் பரியாது ॥

கிஞ்ச ஸ்வரூபத்தில் ப்ரயத்ந வ்யாப்தியானது ஸம்ஸாரநிரபே
க்ஷையென்னு சொல்லுகிறாய் । அப்படிப்பட்டஜீவனுடைய விஷய
வ்யாப்தியானது ஜ்ஞானநேத்ராகாரமேவ ஸஹஸ்ரதவாளான
ஜீவஸஹகாரக்ருதையன்னு । கிஞ்ச ஸம்ப்ரதாயஸித்தமான அவ
ரவர்களுடைய பாவகர்த்ருநிர்வாஹணையென்னு சொல்லவேணும் ।
இத்தால் ஸம்ஸாரமநுதியாகையால் ஜீவவ்யாப்தியில் ப்ரயத்நம்
இல்லையென்னுய்த்து । வ்யாப்திகர்த்ராயீனையாகில் அதில் ஸம்ஸார
னுக்கு ப்ரஸக்தி எப்படியென்னில் கர்த்ரு ஸம்ஸாரஸங்கல்பமே
மாகையால் தத்ஸங்கல்பாயீனை வ்யாப்தி என்னு சொல்லுகையால்
ப்ரயத்ந வ்யாப்தி ஸம்ஸாராயீனையன்னென்கிற பக்ஷிகளாலும்
ஸம்ஸாராயீநத்வம் ஸ்வீக்ருதமானதால் ஸர்வ வ்யாப்தியும் ஸம்ஸா
ராயீனையென்னுஸ்தாபிதமாய்த்து । இப்படியாகில் ஸ்ரீபாஷ்யா
திக்ரந்தங்களில் ததபேக்ஷ தத்காரணத்வாதிகள்
ப்ரயத்நக்ஷணத்தில் உபேக்ஷிக்கிறானென்னும் த்விதீயக்ஷணத்தில்

அநுமதி செய்கிறானென்னும் நிர்தேஶம் எப்படி கூடுமென்னில் ப்ரயத்நமென்னு சொன்னது ஸ்ருஷ்டிகாலாபிப்ராயம் । கர்ம போல் வைஷம்யஹேதுவன்றிக்கே ஜலம்போல் ஸாமாந்யகாரணமென்ன அபிப்ராயத்தால் உபேக்ஷ்ய என்னு சொன்னதேதவிர அந்தகாலத்தில் ஸர்வேஶ்வரன் ப்ரேரகனன்றென்னபடியன்று । இப்படியாகில் ஸர்வேஶ்வரனுக்கு கர்த்ருத்வகாரயித்ருத்வோபேக்ஷகத்வாதிகள் ஸர்வதா இருக்கை விருத்தமன்றோவென்னில் கீழ்சொன்னபடி கர்த்ருத்வாதிஸர்வலக்ஷணமும் ஸம்பந்நமாகையாலே லோகவ்யவஹாரத்தில் ப்ரவ்ருத்திவ்யாப்திவீக்ஷணாதிகளுக்கு விரோதமில்லாதாப்போலே இங்கும் விரோதமில்லை । ஆகையால் ஜீவனுடைய கர்மத்தை அபேக்ஷித்து ஸ்ருஷ்ட்யாதிகளைச்செய்கிறபடியால் ஸர்வேஶ்வரனுக்கு வைஷம்யநைர்க்ருண்யங்கிடையாதென்னு கருத்து॥

ஸூ. அம்ஶோ நாநாவ்யபதேஶாத் அந்யதா சாபி தாஶகிதவாதித்வம் அதீயத ஏகே ।௪௨॥

இப்படி ஜீவனுக்கு கர்த்ருத்வம் பராயத்தமாகில் அப்போது ராஜப்ருத்யந்யாயத்தாலே ஜீவனுக்கு பரமாத்மாம்ஶத்வம் ஔபசாரிகமாகலாமென்கிற ஶங்கையை பரிஹரிக்கிறாரென்னு ஸூத்ரம்॥

இந்த ஜீவன் பரமாத்மாவில்காட்டில் அத்யந்தபிந்நனோ உத அஜ்ஞனான பரமாத்மாவா । அதவா உபாதிஸம்பந்நனான பரமாத்மாவா உத பரமாத்மாவினுடைய அம்ஶமோ என்னு ஸம்ஶயம் । அத்யந்தபிந்நனென்னு வைஶேஷிகபக்ஷம் । அதில் பேதவ்யபதேஶம் ப்ரேரிதாரம் மத்வா இத்யாதிபேதஶ்ருதி । இந்த பக்ஷத்தில் அபேதஶ்ருதிகளுக்கு ஶரவதிரேவ ஸர்வமேக: என்கிற வாக்யத்துக்குப்போலே ஔபசாரிகநிர்வாஹம் கண்டுகொள்வது । அதவா அஜ்ஞமான ப்ரஹ்மமே ஜீவனாகிறது என்னு ஶங்கரனுடைய பக்ஷம் । இதில் அபேத தத்த்வமஸி அயமாத்மா ப்ரஹ்ம இத்யாதியான அபேதஶ்ருதி । இந்தபக்ஷத்தில் பேதஶ்ருதிக்கு அஜ்ஞாநக்ருதமான பேதம் விஷயம் । உபாதிஸம்பந்நமான ப்ரஹ்மமே ஜீவபாவத்தை அடைகிறது என்னு யாதவப்ரகா

பக்ஷம் । இந்த பக்ஷத்திலும் அபேதச்ருதி ஐகார்த்யமே ஸித்தாந்த: । இந்த மூன்று பக்ஷத்தையும் நிரஸிக்கிறார் ॥

அம்சாதிகரணம்

அம்ச: ஜீவன் । பரமாத்மாவுக்கு சரீரமாயிருந்துகொண்டு விசேஷணதயா அம்சபூதனாயிருக்கிறான் । அத: நாநாவ்யபதேசாத் அந்யதாசாபி வ்யபதேசாத் ॥

ப்ருதகாத்மாநமித்யாதியான நாநாவ்யபதேசத்தாலேயும் தத்த்வமஸீத்யாதியான அந்யதாவ்யபதேசத்தாலேயும் அம்சவ்யபதேசத்தாலேயுமென்னபடி । இப்படி அபேதச்ருதிக்கும் பேதச்ருதிக்கும் ஐகார்த்யமும் ஸித்திக்கைக்காக விசிஷ்டமான ப்ரஹ்மைகமான அம்சவாக்யத்திலே பரமாத்மவிசேஷணதயா ஜீவனு அம்சபூதனு என்று கொள்ளவேணும் । விசேஷணபூதனான ஜீவனுக்கும் விசேஷ்யமான ப்ரஹ்மத்துக்கும் ஸ்வரூபஸ்வபாவபேதங்களைச் சொல்லுகிறதுகள் பேதச்ருதிகள் । தத்த்வமஸி அயமாத்மா இத்யாதியான அபேதச்ருதியானது ஜீவசரீரகனான பரமாத்மா ஏகனென்று சொல்லுகிறது । இந்த இரண்டு ச்ருதிகளும் ஐகார்த்யங்கள் । அஜ்ஞ ப்ரஹ்மம் ஜீவனென்கிற பக்ஷத்திலும் உபாத்யவச்சிந்ந ப்ரஹ்மம் ஜீவனென்கிற பக்ஷத்திலும் பரமாத்மாவுக்கு ஸர்வஜ்ஞத்வ நிரவத்யத்வாதிகளை சொல்லுகிற ச்ருதிகள் விரோதிக்கும் । தாசகிதவாதித்வமதீயத ஏகே । சில சாகிகள் ப்ரஹ்மதாசா: ப்ரஹ்மதாசா: ப்ரஹ்மமே கிதவா: இத்யாதிவாக்யங்களாலே ப்ரஹ்மம் ஸர்வஜீவாத்மகமாயிருக்கையாலே மீவடர்கள் கிதவர்கள் தாஸர்கள் இன்னமும் ஸர்வஜீவஸமூஹமும் ப்ரஹ்மாத்மகமாகவேயிருக்கிறது என்று ஸத்யாதாரமாக ஓதுகிறார்கள் । ஆகையாலே ப்ரஹ்மத்துக்குச் சரீரதயா அம்சபூதன் ஜீவனென்று ஸித்தாந்தம் ॥

மந்த்ரவர்ணாச்ச ॥ ௪௩ ॥

பாதோஸ்ய விச்வா பூதாநி என்கிற மந்த்ரவர்ணத்தாலேயும் ஜீவர்கள் ப்ரஹ்மத்துக்குச் சரீரதயா அம்சபூதர்கள் । பாதசப்தம் அம்சவாசி । இவ்வர்த்தத்தில் ஸ்ம்ருதிவசநமும் ப்ரமாணமென்கிறார் ॥

ஸூ. அபி ச ஸ்மர்யதே ॥ ௪௪ ॥

மமைவாம்ஶோ ஜீவலோகே என்று அம்ஶஶப்தத்தாலும் சொல்லப்படுகிறான் ॥

அசேதநவ்ருத்தினுடைய அம்ஶமாகில் ஜீவன் ப்ரஹ்மத்தினுடைய அம்ஶமாகையாலே ஜீவதோஷங்கள் ப்ரஹ்மத்துக்கு வரத்தெரியுமென்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. ப்ரகாஶாதிவத்து நைவம் பர: ॥ ௪௫ ॥

தத்ஸ்வரூபம் ஸம்ஸாரவ்ருத்திகம் । அம்ஶத்வமேகதேஶம் அம்ஶாம்ஶ்யாதிமன்று । ப்ரகாஶஜாதிகுணவிஶிஷ்டங்களான தீ வரவாதிகளுக்கு ப்ரகாஶஜாதி முதலானவைகள் அம்ஶங்களானுப்போலே விஶிஷ்டமான ப்ரஹ்மத்துக்கு ஜீவர்கள் விஶேஷணதயா அம்ஶபூதர்கள் । நைவம்பர: । அயா ந விஶேஷ்யபூதபரமாத்மா விஶேஷணபூதனான ஜீவன்போலன்று । ஜீவனு கிலேஶிக்குமாப்போலே । பரமாத்மாவோவென்றால் நிரவத்யன் ஸர்வஜ்ஞனென்னபடி ॥

ஸூ. ஸ்மரந்தி ச ॥ ௪௬ ॥

அம்ஶத்வமஸ்தி தஸ்யாத்ர ஜ்ஞாதாஸ்வாமிஸ்வாமினீ யதா । பரஸ்ய ப்ரஹ்மண: ஶக்தி: யதேதமகிலஞ்ஜகத் ॥ தத்வம்ஸம்பேதம் வேஸ்தநா"என்று பராஶராதிகள் விசித்ரூபமான ஜகத்துக்கு பரமாத்மாம்ஶத்வத்தையும் ஶரீரத்வத்தையும் ஸ்மரிக்கிறார்கள் ॥

ஸூ. அநுஜ்ஞாபரிஹாரௌ தேஹஸம்பந்தாத்

ஜ்யோதிராதிவத் ॥ ௪௭ ॥

ஸர்வஜீவர்களும் ப்ரஹ்மாம்ஶத்வேந ஸமர்களாயிருந்தாலும் சிலஜீவர்களுக்கு அத்யயநாதிகளிலே அநுஜ்ஞையும் சில ஶூத்ராதிஜீவர்களுக்கு வேதாத்யயநாதிகளில் பரிஹாரமும் தேஹஸம்பந்தாத் அஶுத்தமான ப்ராஹ்மண ஶூத்ராதிஶரீரஸம்பந்தத்தாலே கூடும் । ஜ்யோதிராதிவத் । அக்நித்வேந ஸாம்யமாயிருந்தாலும் ஶ்ரோத்ரியாகாரான் ஶ்ருதஹ்ய மாஹப்போல வும் ஶ்மஶாநாக்நி த்யாஜ்யமானுப்போலவும் இங்குங்கூடும் ॥

ஸூ. அஸந்ததேஶ்சாவ்யதிகர: ॥௪௮॥

ஸந்ததியாவது அவிச்சேதம்; அஸந்ததியாவது விச்சேதம் பிந்நமென்னபடி । அஸந்ததே: ஜீவர்கள் ப்ரதிஶரீரம் பிந்நர்களாகையாலே அவ்யதிகரஶ்ச ஸுகது:கபோகங்களுக்கு அஸாங்கர்யம் ஸம்பவிக்கும் । பக்ஷாந்தரங்களில் ப்ரஹ்மத்துக்கே அஜ்ஞாநதோஷாதிஸம்பந்தம் அங்கீகரிக்கையாலே போகவ்யவஸ்தை ஸித்தியாதென்னு கருத்து

ஸூ. ஆபாஸ ஏவ ச ॥௪௯॥

அஜ்ஞப்ரஹ்மஜீவவாதத்திலே ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞாநகல்பனைக்கும் ஸ்வரூபதிரோதாநகல்பனைக்கும் ஹேதுக்களாக சொன்ன அநாதித்வ திரோதாநத்வ வ்யாப்ய திரோதாநத்வாதிகள் ஹேத்வாபாஸங்கள் । சகாரத்தாலே நிரவத்யத்வாதி ஶ்ருதிவிரோதம் விவக்ஷிதம் ॥

பாரமார்த்திகோபாதிஸம்பந்தியான ப்ரஹ்மமே ஜீவனென்கிற வாதத்திலே அநாத்யத்ருஷ்டப்ரவாஹத்தாலே அநாதியான உபாதிப்ரவாஹமானது ப்ரஹ்மத்தை ஸம்பந்திக்கிறது । தத்ப்ரயுக்ததோஷங்கள் அநுபஹிதமான ப்ரஹ்மத்திலே ப்ரஸரியாதென்கிற ஶங்கைக்கு உத்தரமருளிச்செய்கிறார்

ஸூ. அத்ருஷ்டாநியமாத் ॥௫௰॥

அத்ருஷ்டங்களாலேயும் தத்ப்ரயுக்தோபாதிகளாலேயும் அவச்சேத்யமான ப்ரஹ்மத்துக்கு பேதநாதிநியமம் கூடாமையாலே ஔபாதிகதோஷங்கள் ப்ரஹ்மத்துக்கே ப்ரஸஜிக்குமென்னபடி.

ஸூ. அபிஸந்த்யாதிஷ்வபி சைவம் ॥௫௧॥

அத்ருஷ்டங்களுக்கு ஹேதுவாக அபிஸந்த்யாதிகளை அங்கீகரித்தாலும் அவை இப்படி உபாதிப்ரஹ்மவ்யதிரிக்தவஸ்த்வந்தரமில்லாமையாலே ப்ரஹ்மமே உபாதிஸம்ஸ்ருஷ்டமென்கையாலே உக்ததோஷங்களப்படியே இருக்கும் ॥

ஸூ. ப்ரதேஶபேதாதிதி சேந்நாந்தர்பாவாத் ॥௫௨॥

ப்ரஹ்மவிச்சேத்யமானாலும் உபஹிதப்ரதேஶமும் அநுபஹிதப்ரதேஶமும் இரண்டுமிருக்கிறது । ஆகையாலே போகவ்யவஸ்தை கூடும் இதி சேத் அது கூடாது । குத: அந்தர்பாவாத் ।

விஷ்ணுவான பரப்ரஹ்மம் பஜியாது। அணுக்களான உபாதிகளே பஜிக்கிறது। அப்போது ஸர்வப்ரஹ்மப்ரதேஶமும் உபாதிஸம்பந்தத்திலே அணுக்களாகையாலே உக்ததோஷம் தததவஸ்தம்। ஆகையால் இதரங்கள் அஸமஞ்ஜஸங்கள்। எம்பெருமானார் ஸித்தாந்தத்தில் ஸர்வமும் ஸமஞ்ஜஸமென்னபடி ॥

இந்த பாதத்திலே உக்தமான அதிகரணஸங்கதார்த்தங்களை ஸங்க்ரஹித்துக்காட்டுகிறார் தேஶிகேந்த்ரர் ॥

உத்பத்திர்வ்யோமாதிகேஷ்வபி ந ஶ்ருதிவிஹதா: ப்ராக்ருத
தத்வேஷ்வஶிஷ்டாஜ் ஜீவஸ்யோபாதிஜாதௌ ப்ரஜநநவிலயௌ
ஸ்வஜ்ஞாத்ருதாஸ்ய। கர்த்ருத்வம் பாரதந்த்ர்யம் ஹரணதந
நயதோ விஶ்வரூபாம்ஶதாபேதாந்நியாயாந்யாயாநுபாயாந்யப
நயநவிஷயஸ்வாதஸாத்யாநி ஸந்தி ॥

நவியதஶ்ருதே: என்கிற அதிகரணத்தில் வ்யோமாதிகளுக்கு உத்பத்தியும் உக்தமென்னபடி। தேஜோऽதஸ்ததாஹ்யாஹ என்கிற அதிகரணத்தில் க்ரமமாக ஸ்ருஷ்டியா பூதாதிகார்யத்திலேயும் தத்தத்தத்ஶரீரவிஶிஷ்டனான விஷ்ணுவினிடத்தில் நின்றுமே உத்பத்தியும் நாத்மாஶ்ருதே: என்கிற அதிகரணத்திலே நித்யனான ஜீவனுக்கு ப்ரஜநநவிலயங்கள் தேஹஸம்யோகவியோகநிபந்தநங்களென்னும் ஜ்ஞோऽத ஏவ என்கிற அதிகரணத்தில் அஸ்ய இந்தஜீவனுக்கு விஜ்ஞாநத்வமும், கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்வாதென்கிற அதிகரணத்தில் ஜீவனுக்கு கர்த்ருத்வமும், பராத்து தச்ச்ருதே: எங்கிற அதிகரணத்திலே ஜீவனுக்கு பரமாத்மபாரதந்த்ர்யமும், அம்ஶோ நாநாவ்யபதேஶாத் அதிகரணத்தில் ப்ரகாஶாதிகுணங்களும் தேவாதிதேஹங்களும் கடாதிகளுக்கும் ஜீவனுக்கும் அம்ஶமாயிருக்கிற ந்யாயத்தாலே இந்தப்ரஹ்மத்துக்கு விஶிஷ்டப்ரஹ்மத்து அம்ஶமாயிருக்கிற அர்த்தமும் ஆக இந்த ஏழு அர்த்தங்களும் ஶ்ருதிகளுக்கு பரஸ்பரவிரோதத்தை பரிஹரிக்கிற இந்த வியத்பாதத்திலே ஸாதிக்கப்பட்டதுகளென்னபடி ॥

இதி ஶ்ரீபாஷ்யார்த்தமணிப்ரவாளதீபிகாயாம்
த்விதீயாத்யாயே த்ருதீய: பாத: ॥

ஶ்ரீ: ॥

ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

ஶ்ரீமதே ரங்கநாதார்யமஹாதேஶிகாய நம: ॥

ஶ்ரீபாஷ்யார்த்தமணிப்ரவாளதீபிகாயாம்

த்விதீயாத்யாயே சதுர்த்த: பாத: ॥

க்ருத்ஸ்நஜகத்துக்கும் ப்ரஹ்மகார்யத்வத்தை ஸாதிக்கைக்காக சில ஶ்ருதியில் அநாதித்வப்ரதீதியாலே இந்த்ரியங்களுக்கு நித்யத்வத்தை ஸம்பாவிக்கிற பூர்வபக்ஷியை ப்ரத்யவஸ்தாநமாக ஜீவோபகரணமான இந்த்ரியங்களுக்கு கார்யத்வத்தை ஸாதிக்கிறாரென்று பாதஸங்கதி ॥

கிம் ஜீவன்போலே இந்த்ரியங்களு முண்டாகவில்லையா உத வியதாதிகள்போலே உண்டாகிறதுகளாவென்று ஸம்ஶய: । உண்டாகவில்லையென்று பூர்வபக்ஷ: । குத: அஸதேவேதமக்ர ஆஸீத் தததாஹு: கிம் ததாஸீதிதி ருஷயோ வாவதே அக்ரே ஆஸீத் ததாஹு: கே தே ருஷய இதி ப்ராணாவாவ ருஷய இதி ப்ரளயகாலத்திலே ப்ராணஶப்தவாச்யங்களான இந்த்ரியங்களுக்கு அவஸ்திதிசொல்லுகையாலென்னபடி । இந்த பூர்வபக்ஷத்தை உபந்யஸிக்கிறார்

பூர்வ. ததா ப்ராணா: ॥ க ॥

யதா ஜீவனானவன் நஜாயதே ம்ரியதே என்கிற ஶ்ருதியாலே உண்டாகவில்லையென்று சொல்லப்படுகிறானோ அப்படியே ப்ராணா: இந்த்ரியங்களும் ருஷய: என்கிற ஶ்ருதிகளாலே உண்டாகவில்லையென்று சொல்லப்படுகிறதுகள் என்கிற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

* ஸி. கௌண்யஸம்பவாத்தத்ப்ராக்ஶ்ருதேஶ்ச ॥ உ ॥

சகாரம் துகாரமாய்க்கொண்டு பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறது । இந்த்ரியங்களும் வியதாதிகளைப்போலே உத்பந்நங்கள்.

---

* ப்ராணோத்பத்த்யதிகரணம் ॥

த: । தத்ப்ராக்ச்ருதேச்ச । தஸ்ய அந்த ப்ராணங்களுக்கே ப்ராக்ச்ருதேச் ப்ரளயகாலத்தில் அவஸ்தாநம் ச்ருதிக்கையாலே என்னபடி. கதம், ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் இத்யாதி ச்ருதிகளிலே ஸ்ரீமந்நாராயணனொருவன்தானே ப்ரளயகாலத்திலிருக்கிறானென்னன்றோ ப்ரஸித்தம். ப்ராணசப்தமும் ப்ராணஸம்விசந்தி ச்ருதியாலே ப்ராணாத்வபரம் । ஸர்வஸாக்ஷாத்காரரூபமான ஜ்ஞாநத்வமும் ப்ராணங்களுக்கேகூடும். இப்படியாகில், ப்ராணா வாவ ருஷய: என்கிற பஹுவசந ச்ருதியானது கௌணீ அஸம்பவாதேவ த: அஸம்பவாத் இந்த்ரியங்களுக்கு ப்ரளயகாலத்தில் அவஸ்தாநம் ஸம்பவியாமையாலென்னபடி ॥

ஸூ. தத்பூர்வகத்வாத் வாச: ॥ ௩ ॥

வாச: ப்ராணத்வ்யதிரிக்தமான ஸர்வநாமதேயத்துக்கென்னபடி । தத்பூர்வகத்வாத் தத்த்வஸ்ருஷ்டிபூர்வகத்வமிருக்கையாலென்னபடி । தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத என்கிற ச்ருதி தத்த்வஸ்ருஷ்டிக்களையும் தந்நாமங்களையும் ப்ரஹ்மமே உண்டாக்கிறதென்னு சொல்லுகையால் இந்த்ரியாதிஸ்ருஷ்டிக்கும் முன்னே இருக்கிற ப்ராணசப்தவாச்யன் ப்ரஹ்மாவென்னு நிஸ்சிதம் ॥ ௩ ॥

ஸூ. ஸப்தகதேர்விசேஷிதத்வாச்ச ॥ ௪ ॥

இந்த்ரியங்களுடைய ஸங்க்யையை ப்ரதிபாதிக்கிறாரென்னு ஸங்கதி ॥

இந்த்ரியங்கள் யேழா உத பதினொன்றா என்னு ஸம்சயம். ஸப்தைவ என்னு பூர்வபக்ஷம். குத: கதே: ஸப்த ப்ராணா: ப்ரபவந்தீத்யாதிஷு ஸப்தேந்த்ரியங்களுக்கே ஜீவனோடே கதிசொல்லுகையாலே । விசேஷிதத்வாச்ச । யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ । புத்திஸ்ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிமென்னு யோகதசையில் ஏழு விஜ்ஞாநங்களும்

ஸ்திரங்களாயிருந்தால் யோகம் ஸித்திக்குமென்னு விஶேஷித்து ஜ்ஞாநமென்று ஜ்ஞாநஸாதநங்களான இந்த்ரியங்களை விஶேஷிக்கையாலேயும் ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷுர்ஜிஹ்வா க்ராணம் மநஸ்ஸு புத்தியென்னு ஸப்தேந்த்ரியங்கள். இதற்குமேல்கிடையாது என்கிற பக்ஷத்தை நிரஸிக்கிறார் ।

ஸூ. ஹஸ்தாதயஸ்து ஸ்திதேऽதோ நைவம் ॥௫॥

நைவம் । இந்த்ரியங்கள் ஏழுதானென்கிற பக்ஷம் கூடாது யென்னபடி. கிந்து ஶ்ரோத்ராதிகளான ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்து। வாக் பாத பாணி பாயூபஸ்தங்களான கர்மேந்த்ரியங்கள் ஐந்து மநஸ்ஸு ஒன்று । ஆக ஏகாதஶேந்த்ரியங்கள் அதில் ஶ்ரோத்ராதிகளான ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்தும் ஜீவனோடேகூட ஶரீராந்தரஸஞ்சாரத்திலும் கூடப்போகிறது । ஹஸ்தாதயஸ்து வாக் பாத பாணி பாயூபஸ்தங்களான கர்மேந்த்ரியங்களோவென்னுல் ஸ்திதே ஶரீரே ஸ்திதவதீத்யர்த்த: । அந்தஶரீரத்தோடே கூட உத்பந்நங்களாயும் ஶரீரம் நஶிக்கும்போது நஷ்டங்களாயிருந்தாலும் ஸூக்ஷ்ம ஶரீரத்திலிருக்கும்போது கர்மேந்த்ரியங்களும் உபகரிக்கையாலே நைவமித்யர்த்த: । பாஹ்யாஹங்காராதி வ்யபதேஶமும் ப்ரோநாவ்ருத்தி பேத விஶேஷங்களாகையாலே ஏகாதஶேந்த்ரியங்களென்னு ஸித்தம் । இந்தவ்யாக்யாநம் தீபாநுஸாரியென்னு பாவ்யம் ॥

அத்ராயம் பூர்வபக்ஷ: ॥

இப்படியாகில் இந்தஸூத்ரத்துக்கு ஶ்ரீ பாஷ்யத்தில் ஶரீரத்தில் ஜீவஸ்திதஸதி ஹஸ்தாதிகளுக்கு ஜீவோபகாரகத்வமிருக்கையாலும் ஶப்தாநதிகார்யகாரகத்தாலும் இந்த்ரியமாயிருக்கையில் விவாதமில்லை । ஆகையால் இந்த்ரியங்களேழுதானென்னு சொல்லவில்லை । கிந்து ஏகாதஶமென்கிறபக்ஷத்தைத் தவிர ஜீவன் ஶரீரத்தை அடைகிறபோது ஹஸ்தாதீந்த்ரியங்களுண்டாகிறதென்னும் ஶரீரம் நஶிக்கும்போது க்ருத்ஸ்நக்ஷயத்தை அடைகிறதுக

னென்னும் ஜீவனுடைய லோகாந்தர தேஹாந்தர கமனத்திலும் ஜ்ஞா
நேந்த்ரியங்கள் கூடப்போகிறதே தவிர கர்மேந்த்ரியங்கள் கூடப்
போகவில்லையென்னும் ஸூத்ரங்கள் சொல்லவில்லை । ச்ருதப்ர
காசிகையிலும் முன்சொன்ன ஸூத்ரத்துக்கு உதாஹரணோக்தி
ப்ரத்யக்ஷமாக ஜீவனுடைய லோகாந்தர தேஹாந்தர கமனத்தில்
ஸகலேந்த்ரியங்களுக்கும் கமனாகமனத்தைச்சொல்லி அதுக
ள் ஸூக்ஷ்மாகாரங்களாகையாலே ப்ரத்யக்ஷத்தில் தவிர வி
சேஷம் கிடையாதென்னு ஸமர்த்தித்திருக்கிறது । விவரணியிலு
ம், ஸப்த இமே லோகா யேஷு சரந்தி ப்ராணா என்கிற ச்ருதி
யில் சொன்ன ஜீவஸஞ்சரணமும் கர்மேந்த்ரியத்துக்கு உப
லக்ஷணமென்னு அநுக்ருஹீதம் । ஆகையால் அப்படி ஜீவா
நுஸாரியாக வ்யாக்யாநம் பண்ணுகை விரோதமன்றோவென்னில்
இந்தவிஷயத்தில் ஸமாநமான ந்யாயவிஸ்தரம்
எழுதப்படுகிறது । உபயம் யாதவப்ரகாசீயம் கர்மேந்த்ரியா
ணாம் ப்ரதிஸம்ஹாரம் உத்க்ராந்திகாலே ப்ரவேசனே
ந்த்ரியங்கள் விச்ருதி க்ருத்வா ஸஞ்சாரயதே விசேஷதோ
லோகாந்தரே ப்ரயோஜநாபாவாத் ப்ரவேசோ
க்தம் । கர்மேந்த்ரியாணாம் ப்ராணாஸ்ரயத்வேன
நுவர்த்தனே உத்க்ராந்திஹேதுத்வே தத்ப்ருதீ: । என்
னு ஸ்ரீரங்கவ்யாஸோக்தியென்கிற ப்ரயோஜநாந்தரத்தாலும் ஸாமர்த்
த்தை அநுஸரித்து இந்த்ரியங்களுக்கு கமனாகமனத்தை ஸா
திக்கையால் ஜீவோக்திக்கு விரோதமில்லையென்னு கருத்து ॥௨॥

ஸி. ஹஸ்தாதய: ॥

இந்த்ரியபரிமாணத்தை விசாரிக்கிறாரென்னு ஸங்கதி । இந்
த இந்த்ரியங்கள் ஸப்தகங்களா । ஏகாதசபரிமாணங்களா
என்னு ஸம்சயம் । ஸப்தகங்களென்னு பூர்வபக்ஷம் । ஸப்
த வை சீர்ஷண்யா: ப்ராணா: என்னு இந்த்ரியங்கள் ஸப்
தங்களென்னு சொல்லுகையாலென்னபடி । இந்த பக்ஷத்தை நி
ரஸிக்கிறார் ।

அணவஶ்ச ॥

இந்த்ரியங்கள் அணுக்கள் ஸூக்ஷ்மங்கள் குத:, ப்ராணமநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தீதி இந்த்ரியங்களுக்கு உத்க்ராந்திசொல்லுகையாலே ஸூக்ஷ்மத்வம் சொன்னது । அப்ரத்யக்ஷதாநர்ஹதாநவாதஸ்த்த மென்னு இந்த்ரியோபாஸநங்களுடைய ஸௌக்ஷ்ம்யத்தை விவக்ஷிக்கிறது ॥

ஸூ. ஶ்ரேஷ்டஶ்ச ॥ ௭ ॥

இந்த்ரியங்களுக்கு நிர்வாஹகமாகையாலே ஶ்ரேஷ்டமான ப்ராணவாயுவும் உண்டாகிறது । ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந:யென்னு சொல்லுகையாலே । இங்கே ப்ராணனைச்சொன்னது மேலே ப்ராணஸ்வரூபத்தை விசாரிக்கைக்காக ॥ ௫ ॥

ஸூ. ந வாயுக்ரியே ப்ருதகுபதேஶாத் ॥ ௮ ॥

இந்த ஶ்ரேஷ்ட ப்ராணன் கேவலவாயுஸ்வரூபமா । உத அந்த வாயுவினுடைய ஸ்பந்தநக்ரியையா । யதா தேஹாதிதாரணத்துக்கு அநுகுணமான ஒரு அவஸ்தாவிஶேஷத்தோடேகூடின வாயுவா என்னு ஸம்ஶயம் । கேவலமான வாயுவே ப்ராணனென்னு பூர்வபக்ஷம் । ய: ப்ராண: ஸ வாயு: । என்னு சொல்லுகையாலே । யதா உச்ச்வாஸநிஶ்வாஸரூபையான வாயுக்ரியையே ப்ராணநு இந்த இரண்டு பக்ஷத்தையும் நிரஸிக்கிறார் ॥

ந வாயுக்ரியே ॥

வாயுமாத்ரமும் தத்க்ரியையும் ப்ராணனன்னு । குத: ப்ருதகுபதேஶாத், ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச । கம் வாயுரிதியென்னு வாயுவும் ப்ராணனும் ப்ரஹ்மத்திலிருந்து உண்டாகிறதென்னு ப்ருதக்காகச்சொல்லுகையாலென்னபடி । ஆகையால் தேஹதாரணோபயோகிதாரூபமான விஶேஷத்தை உடைய வாயுவே ப்ராணனென்னு ஸித்தம் ॥

இப்படி வாயுவில்க்காட்டிலும் ப்ருதக்காக சொல்லப்பட்ட ப்ராணன் சக்ஷுராதிகள் போலே ஸ்வதந்த்ரனோ என்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. சக்ஷுராதிவத்து தத்ஸஹஶிஷ்ட்யாதிப்₄ய: ॥௧௰॥

து₃ஶப்₃த₃ம் கீழ்சொன்ன ஶங்கையை நிவர்த்திக்கிறது ப்ராணந்தேஜ:ப்ரப்₄ருதிகள்போலே ஸ்வதந்த்ரமன்று। கிந்து சக்ஷுராதீந்த்ரியங்கள்போலே ஜீவனுக்கு உபகரண பூ₄தம் குத: தத்ஸஹஶிஷ்ட்யாதிப்₄ய: ஜீவஸஹ உபகரணங்களான அந்த சக்ஷுராதீந்த்ரியங்களோடேகூட ஶிஷ்டிஶாஸனம்। உபதே₃ஶத்தாலென்னபடி। ப்ராணஸம்வாதத்தில், ஸமேதா ப்ராணா: அஹம்ஶ்ரேயஸேவிவதா₃நா: என்று சக்ஷுராதீந்த்ரியங்களையும் ப்ராணவாயுவையும் கூட்டி ப்ராணஶப்₃த₃த்தாலே உபதே₃ஶிக்கிறதுசக்ஷுராதிகளைப்போலே ப்ராணவாயுவும் உபகரணமென்ப தாத்பர்யம் நால்த்தான் கூடும்। யோயம்மத்₄யம: ப்ராண:। என்று ப்ராணஶப்₃த₃ ப்ரஸித்தங்களான கரணங்களுக்குள்ளே ப்ராணவாயு மத்₄யமனென்றுசொன்னது ஸஹஶிஷ்ட்யாதி ப்₄ய: என்கிற ஆதி₃ஶப்₃த₃த்துக்கர்த்த₂ம் ॥

ஸூ. அகரணத்வாச்ச நதோ₃ஷஸ்ததா₂ஹித₃ர்ஶயதி ॥௧௧॥

அகரணத்வதோ₃ஷோ ந ஜீவனுக்கு உபகரிக்கையாகிறகாரணமில்லாமையாலே ப்ராணனுக்கு உபகரணத்வம் கூடாதென்கிறதோ₃ஷமில்லை। ததா₂ஹித₃ர்ஶயதி। யஸ்மிந்நுத்க்ராந்தே இத₃ம் ஶரீரம் பாபிஷ்ட₂தரமிவ த்₃ருஶ்யேத ஸவ: ஶ்ரேஷ்ட₂: என்கிற ஶ்ருதிதானே ப்ராணவாயுவுக்கு தே₃ஹேந்த்₃ரியாத்₃யவஸ்தி₂தி காரணரூபமான உபகாரத்தை காண்பிவிக்கிறது ஆகையாலே தோ₃ஷமில்லை என்னபடி ॥

ஸூ. பஞ்சவ்ருத்திர்மநோவத்₃வ்யபதி₃ஶ்யதே ॥௧௨॥

ஒன்றான ப்ராணவாயுதானே ப்ராணாபாநாதி₃வ்ருத்திபே₄த₃ ரூபமாக பஞ்சப்ரகாரமாக வ்யபதே₃ஶிக்கப்படுகிறான் மநோவத் எப்படியானால் ஒருமனஸ்ஸுதானே காமாதி₃வ்ருத்திபே₄த₃த்தாலே காம: ஸங்கல்போ விசிகித்ஸா ஶ்ரத்₃தா₄ஶ்ரத்₃தா₄ த்₄ருதிரத்₄ருதி: ஹ்ரீ: தீ₄ர்பீ₄: இத்யேதத்ஸர்வம் மந ஏவ என்று வ்யபதே₃ஶிக்,

கப்படுகிறதோ அப்படிப்போலே ஒரு ப்ராணந்தானே ப்ராண: அபாந: வ்யாந: உதாந: ஸமாந: இத்யேதத் ஸர்வம் ப்ராண ஏவ என்று வ்யபதேசிக்கப்படுகிறது ॥௪॥

இந்த ப்ராணனு விஹாரமா அன்று என்று ஸம்ஶயம் । ஸப்த மதன் என்று பூர்வபக்ஷம், ஸப்த வை ஶீர்ஷண்யா: ப்ராணா: என்று ஶ்ருதிகள் சொல்லுகையாலே । இத்தை நிரஸிக்கிறார் ॥

ஸூ. அணுஶ்ச ॥ ௧௨ ॥

தமுத்க்ராமந்தம் ப்ராணோऽநூத்க்ராமதீதி உத்க்ராந்தி சொல்லுகையாலே இந்த்ரியங்கள் போலே ப்ராணவாயுவும் ஸூக்ஷ்மபரிமாணனு த்ரிபி: ஶ்ரோத்ராதிகை: ஸஹிதனென்னது ப்ராணனை ஸாதிக்கிறது ॥௫॥

ஸூ. ஜ்யோதிராத்யதிஷ்டாநந்து ததாமநநாத் ப்ராணவதா ஶப்தாத் ॥ ௫ ॥

பாராத்ர்யந்தே: என்கிற அதிகரணத்தில் சொன்ன அர்த்தத்தையே இந்த அதிகரணத்தில் உபபாதிக்கிறதென்று ஸங்கதி ।

ப்ராணவதா ப்ராணமயதாவா ந ஜீவனோடேகூட ஜ்யோதிராத்யதிஷ்டாநம் அக்ந்யாதிதேவதைகளுக்கு வாகாதீந்த்ரியங்களுடைய அதிஷ்டாநமானது ததாமநநாத் । [illegible] ஸர்வகாரணம் ஆஹிதவ்யந்தநம் [illegible] ஸங்கல்பமென்னபடி அந்த பரமாத்மாவினுடைய ஸங்கல்பத்தாலேயே ஆகிறதென்று கருத்து ।

தத: । ஶப்தாத் । யோऽக்நௌ திஷ்டந்நக்நேரந்தரோ யம் அக்நிர்ந வேதேத்யாதி ஶப்தத்தாலென்னபடி ।

ஸூ. தஸ்ய ச நித்யத்வாத் ॥௧௪॥

தஸ்ய ஸர்வஸ்ய வஸ்துக்களுடைய பராதீநத்வத்துக்கு நித்யத்வாத் ஸர்வாவஸ்தையிலும் பராதீநமாகையாலும்

மென்னபடி । ததா ச ப்ரமாணஸம்வாதத்தாலேதானே அக்ந்யாதி தேவதைகளுக்கு இந்த்ரியாதிஷ்டாத்ருத்வம் ஔபாதிகமென்னு ஸூசிதம் । தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் । ததநுப்ரவிஶ்ய என்னு ஸ்ருஷ்ட்யநந்தரமாய்க்கொண்டு அநுப்ரவேஶம் ஶ்ருதமாகையாலென்னு கருத்து ॥௬॥

ஸூ. த இந்த்ரியாணி தத்வ்யபதேஶாதந்யத்ர ஶ்ரேஷ்டாத் ॥௧௫॥

ஸர்வே ப்ராணா: என்னு வாகாதிகளையும் ப்ராணவாயுவையும் ப்ராணஶப்தத்தாலே சொல்லுகையாலே முக்ய ப்ராணனும் இந்த்ரியமென்கிற பக்ஷத்தை நிரஸிக்கிறார் ।

ஶ்ரேஷ்டாதந்யத்ர ஶ்ரேஷ்டப்ராணவ்யதிரிக்தங்களான ப்ராணங்கள் எதுகளோ த இந்த்ரியாணி அதுகள்தான் இந்த்ரியங்கள் தத்வ்யபதேஶாத் । ஶ்ரேஷ்டப்ராணவ்யதிரிக்தங்களிலேயே இந்த்ரியஶப்தத்தை நிர்தேஶிக்கையாலே இந்த்ரியாணி தேஶேஷு என்னு முக்ய ப்ராணனை விட்டு வாகாதிகள் ப்ரயுக்தங்களில் இந்த்ரியஶப்தம் நிர்திஷ்டமாகையால் முக்ய ப்ராணனுக்கு இந்த்ரியத்வம் கிடையாதென்னு கருத்து ।

ஸூ. பேதஶ்ருதேர்வைலக்ஷண்யாச்ச ॥௧௬॥

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மனஸ்ஸர்வேந்த்ரியாணி ச என்னு ப்ராணனையும் இந்த்ரியங்களையும் வேறாகச்சொல்லுகையாலும் । வைலக்ஷண்யாச்ச । இந்த்ரியோபரமே ப்ராணவ்யாபாரத்தைக் காண்கையாலே இந்த்ரியங்களுக்கும் ப்ராணனுக்கும் ப்ரவ்ருத்தி வைலக்ஷண்யத்தாலுமென்னபடி । இத்தாலும் ஶ்ரேஷ்டப்ராணவ்யதிரிக்தங்களான வாகாதிகளே இந்த்ரியங்களென்னு ஸித்தம் ।

ஸூ. ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்திஸ்து த்ரிவ்ருத்குர்வத உபதேஶாத் ॥௧௭॥

ந வியதஶ்ருதே: என்னு த்விதீயபாதம் தொடங்கி இதுவரையில் பதினாறு அதிகரணங்களாலே வியதிந்த்ரியாதிகளுடைய ஸமஷ்டி ஸ்ருஷ்டியை நிரூபித்து இந்த அதிகரணத்திலே தேவமனுஷ்யாதி வ்யஷ்டி ஸ்ருஷ்டியை நிரூபிக்கிறாரென்னு ஸங்கதி ।

வ்யஷ்டிஸ்ருஷ்டியை கேவலசதுர்முகன் பண்ணுகிறானா, சதுர்முகஶரீரகனான பரமாத்மா பண்ணுகிறானென்று ஸம்ஶயம். சதுர்முகன் பண்ணுகிறானென்று பூர்வபக்ஷம். அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணியென்று ஜீவனை ஆரம்பமாகக்கொண்டு நாமரூபவ்யாகரணம் சொல்லுகையாலே சதுர்முகரூபாபன்னனான ஜீவனே நாமரூபவ்யாகரணரூபமான வ்யஷ்டிஸ்ருஷ்டிக்கு ஸாக்ஷாத் கர்த்தா இந்த ஶங்கையை பரிஹரிக்கிறார்।

ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்திஸ்து ॥

து ஶப்த: பக்ஷவ்யாவ்ருத்த்யர்த்த:। ஸம்ஜ்ஞா தேவாதி நாம, மூர்த்தி: தேவாதிரூபம் க்லுப்தி: ஸ்ருஷ்டி: ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்தி: நாமரூபவ்யாகரணமானது த்ரிவ்ருத்கரணம்பண்ணுகிற பரமாத்மாவுடைய வ்யாபாரம் சதுர்முகஶரீரகனான பரமாத்மாவே வ்யஷ்டிஸ்ருஷ்டி பண்ணுகிறானென்னபடி। குத: த்ரிவ்ருத்குர்வத உபதேஶாத் நாமரூபே வ்யாகரவாணி தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமேகைகாம் கரவாணி யென்று த்ரிவ்ருத்கரணம் பண்ணுகிறவனுக்கே நாமரூபவ்யாகரணத்தை உபதேஶிக்கையாலே த்ரிவ்ருத்க்ருதங்களான தேஜோபன்னங்களாலுத்பன்னமான அண்டத்திலுள்ள சதுர்முகனு த்ரிவ்ருத்கரணத்துக்கு கர்த்தாவாகமாட்டான். த்ரிவ்ருத்கரணமும் வ்யஷ்டிஸ்ருஷ்டியும் பரமாத்மகர்த்ருகமென்றாலதான் வ்யாகரவாணியென்கிற உத்தமபுருஷனும் ஸ்வரஸமாகும் ஜீவேநாத்மநாயென்கிற ஸாமாநாதிகரண்யமும் ஸர்வம் ஜீவேநாத்மநா ஜீவஶரீரகேண மயாயென்று அர்த்த:।

நநு ஜலமிஶ்ரிதம் த்ரேயாவியயதே, இதராதிநா சதுர்முகஸ்ருஷ்டங்களான ஜலாதிவஸ்துக்களிலே த்ரிவ்ருத்கரணப்ரகாரமுபதேஶிக்கப்படுகிறதன்றோ। ஆகையாலே சதுர்முகனுக்கும் த்ரிவ்ருத்கரணம் பண்ணுகை ஶக்யம் என்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார்।

ஸூ. மாம்ஸாதிபௌமம் யதாஶப்தமிதரயோஶ்ச ॥௧௮॥

மாம்ஸமும் மநஸ்ஸும் பௌமம் பார்திவஸம்பந்தி மூத்ரமுமன்னு லோஹிதமுமன்னு யதாஶப்தம் | ஆபஃ பீதாஃ தேஜோऽஶிதம் என்னு ஶ்ருதிசொன்ன ப்ரகாரம் | இதரயோஶ்ச | அந்நமஶிதமென்னு ப்ரயோகப்ராய வ்யுத்பத்திகளான ஆபஃ பீதாஃ தேஜோऽஶிதம்மென்கிற வாக்யங்களில் இரண்டிலும் மூத்ரப்ராணங்களுக்கு ஆப்யத்வமும் அஸ்திமஜ்ஜைகளுக்கு தைஜஸத்வமும் உபதேஶிக்கப்படுகிறது. அயமத்ர வாக்யார்த்தஃ | தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமேகைகாம் கரவாணி என்னு ஸமஷ்டிவ்யஷ்டிரூபமான த்ரிவ்ருத்கரணம் அந்நமஶிதம் த்ரேதா விதீயத இத்யாதியாலே உபதேஶிக்கப்படவில்லை | கிந்து ஸம்யக்வ்ருத்தியான ஶ்வேதகேதுவுக்கு ஸம்ப்ரஹணத்துக்காக ப்ராஶநத்தாலே ஸ்வீகரிக்கப்பட்ட அந்நஜலாதிகளிலே த்ரேதாவ்யாபாரம் சொல்லப்படுகிறது | அதில் ப்ரதமம் அந்நமஶிதம் த்ரேதா விதீயதே | தஸ்ய யஃ ஸ்தவிஷ்டோ தாதுஃ தத்புரீஷம் பவதி யோ மத்யமஃ தந்மாம்ஸம் | யோऽணிஷ்டஃ தந்மநஃ என்னு மாம்ஸமும் மநஸ்ஸும் புரீஷம்போல் பௌமமென்னு உபதேஶிக்கப்படுகிறது குதஃ | அந்நமஶிதம் த்ரேதா விதீயதே என்னு உபக்ரமத்தாலும் அந்நமயம் ஹி ஸோம்ய மநஃ என்னு வாக்யஶேஷத்தாலுமென்னபடி | தேஜோபந்நங்களுக்கு த்ரிவ்ருத்கரணப்ரகாரமிந்த வாக்யத்தில் சொல்லப்படுகிறதென்றால் மாம்ஸத்துக்கும் மநஸ்ஸுக்கும் பௌமமான புரீஷத்தைக்காட்டில் அணீயஸ்ஸாகையாலே ஆப்யத்வமும் தைஜஸத்வமும் ப்ரஸங்கிக்கும், அப்படியே ஆபஃ பீதாஃ தேஜோऽஶிதமென்கிற வாக்யங்களிரண்டிலும் ப்ரோக்தம் மூத்ரம் ப்ராணநு இந்த மூணுக்கும் ஆப்யத்வமும் தேஜோऽஶிதத்தில் அஸ்தி மஜ்ஜை வாக்கு இந்த மூணுக்கும் தைஜஸத்வமும் சொல்லப்படுகிறது | குதஃ | பீதாஃ என்கிற உபக்ரமத்தாலும் ஆபோமயஃ ப்ராணஃ என்கிற வாக்யஶேஷத்தாலும் அப்படியே தேஜோऽஶிதமென்கிற உபக்ரமத்தாலும்

தோஜோயோவாஸிதி வாக்யஶேஷத்தாலுமென்னபடி । இப்படிய ன்னியில் த்ரவ்யகாரணத்தை உபதேஶிக்கிறதென்னில் ஸத்த்வம் ஸுவிஶேஷமாகையாலே ஸாத்விகமாக பரிணமிக்கும் ப்ராணனும் ரஜோ ப்ரசுரமாகையாலே தைஜஸமாக பரிணமிக்கும் அப்படியே தே ஜோப்ரதமென்கிற மூன்றும்வயத்திலும் ஸத்த்வத்துக்கு ஸாத்விக மும் தேஜஸ்ஸுக்கு தைஜஸமும் ப்ரஸரிக்கும் । உபக்ரமவாக்ய ஶேஷங்களுக்கு விரோதம்வரும் । ஆகையால்முன்பே த்ரவ்ய க்ருதமான குணாதிகளுக்கு ஜாதாஸ்தியாலே தேஹயாவஸ்திதாம் உபதேஶிக்கப்படுகிறது । நநு ப்ராணேவ த்ரவ்யக்ருதமாகில் கேவலகுணாதிஶப்தங்களாலே எப்படிச் சொல்லப்படுகிறதென்னில் தத்ராஹ ॥

ஸி. தேவஶேஷ்யாத்ர தமாதஸமாத: ॥ ௧௯॥

தச்சப்த: ஶங்காவ்யாவ்ருத்த்யர்த்த: । தேவஶேஷ்யம் விஶே ஷஹாவ: । வ்ருத்திவீஜாதிகள் பஞ்சபூதங்கள் த்ரவ்யக்ருதங்க ளாயிருந்தாலும் வ்ருத்தியில் வ்ருத்திஸாமக்ரீகளும் ஜலதேஜ ஸ்ஸுக்களுடைய ஸாமங்கள் வாதாம்ஶங்களாகையாலும் அப்படி யே ஜலத்திலும் தேஜஸ்ஸிலேயும் ஸ்வஸாமங்கள் விஶேஷமாயி ருக்கையாலும்। தமாத:। குணமென்னும் கர்மமென்னும் தேஜஸ்ஸு என்னும் சொல்லப்படுகிறது । தமாதஸென்னு விரக்தியானது க ஸ்யாயவஸாவஸ்தியைச்சொல்லுகிறது । இந்தவிஷயத்தில்பாஜிவேநா த்ரோதி ஶ்ருதமியவ்வி நவஸஜீவேக்யாஹ ப்ராணேவே கொஸுராத்ரவஸந்திராக்ஷி ஸ்யாயிஹோஹாஸியாநாக । தேதே ஶஸ்மிஸிஷு ஸ்வகாரணகஸ்யாநவ்யவேஶேஷவி கர்த்தா ஜீவே தக்ஷகர்த்தாயாதிஹ நஹி வபதேகஸாஸ்த்ராதி: கர்த்ருஹே தாஸ' இத்யாவாதேர்யமந்த்ராஹ ॥

இந்த வாதத்தில் சொன்ன கயிகாரணாவஸ்தத்தில்சொன்ன கர்மங்களை ஸம்க்ரஹித்துக்காட்டுகிறார் தேஶிகர் ॥


ஸக்ஷாணாம்ஜநஸம்வ்யாவஸ்திதி ஸிஹவப்ராணவாயோஸ்ஸ ரங்கம் தஸ்யஸாக்ஷ்யம்தேவதாதே: தத்வஸஹவிஷயாயிஷதிகள

ஸாரதந்த்ர்யம் ! ப்ராணஸ்யாநிந்த்ரியத்வம் பஹுவிதவிஷயவ்ருத்
ஷ்டிநாமாதிவாத்ப்ராக் ஸம்ஸ்காரஸ்ரஷ்டும் ஸ்தநாதிவ்யவஸ்தாஸவிதாத்ரு
விசிர ப்ராணபாதே ॥

ததா ப்ராணா: என்கிற அதிகரணத்தில் சக்ஷுஸ்களுடைய ஜந்மமும் ஸப்தகத்யதிகரணத்தில் சக்ஷுஸ்களுக்கு ஏகாதசஸங்க்யையும் அணவ: என்கிற அதிகரணத்தில் சக்ஷுஸ்களுடைய பரிமாணமும் நவாயுக்ரியே என்கிற அதிகரணத்திலே ப்ராணவாயுஸ்வரூபமும் அணுஶ்ச என்கிற அதிகரணத்தில் ப்ராணனுடைய ஸூக்ஷ்மமும் ஜ்யோதிராத்யதிஷ்டாநந்து என்கிற அதிகரணத்தில் அக்ந்யாதிதேவதைகளுடைய ப்ராணாத்யதிஷ்டாநத்திலே ஈஶ்வரஸ்வாதந்த்ர்யமும் த இந்த்ரியாணி தத்வ்யபதேஶாதென்கிற அதிகரணத்தில் ப்ராணனுக்கு அநிந்த்ரியத்வமும் ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்த்யதிகரணத்தில் ஸநாமிகரூபாஸ்வதமான பஹுரூபங்களைக் குறித்துச் ஸ்ருஷ்டிகர்த்தாவான பரமேஶ்வரனிடத்தில் நின்றும் பஹுவிதவிசித்ரஸ்ருஷ்டிநாமரூபவ்யாக்ருதியும் இந்த ப்ராணபாதத்திலே சொல்லப்பட்டது ॥ ॥௪॥

இதி ஸ்ரீ வேதாந்த்யாசார்யப்ரணீதாயாம் ஸாரதீபிகாயாம்
த்விதீயாத்யாயே சதுர்த்த: பாத: ॥

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ: ப்ரீயதாம் ॥



ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமதே வேங்கடவரதாய மஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீபாஷ்யார்த்தமணிப்ரவாளதீபிகாயாம்

த்ருதீயாத்யாயே ப்ரதம: பாத: ॥

இப்படி ப்ரதமத்விகத்தில் ஸூத்ரக்ருத்துக்களுடைய ஸமர்த்தனங்களாலே அவிசார்யமான நிகிலஜகதேககாரணத்வத்தோடே விஶிஷ்டனாய் அகிலஹேயப்ரத்யநீகனான ஶ்ரிய:பதியான பரப்ரஹ்மமான விஷயத்தை விசாரித்து உத்தரத்விகத்தாலே வேதாந்தவேத்யமான பரப்ரஹ்மப்ராப்த்யுபாய விஷய ஸகல விசாரங்களையும் தத்ஸம்பந்தமான பரப்ரஹ்மப்ராப்திரூபபலஜநிதஸங்கல்பங்களையும் விசாரிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. த்ருதீயாத்யாயத்தில் த்ருதீயபாதத்திலே விசாரிக்கப்படுகிற உபாஸநாரூபமான பக்திக்கு அதிகாரஸித்த்யர்த்தமாக வைராக்யஜநகமான ஸம்ஸாரதோஷத்தை வைராக்யபாதமென்று பேர்பெற்ற ப்ரதமபாதத்திலே நிரூபிக்கிறாரென்று ஸங்கதி ॥

இந்த த்ருதீயாத்யாயத்தில் வைராக்யோபயோகியான ப்ரதமபாதத்தாலே ஸம்ஸாரிஜீவர்களுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரத்தையும் உத்தரபாதங்களாலே ஸம்பந்தமான ப்ரஹ்மவித்யையையும் ஸூத்ரகாரர் காண்பிக்கிறார். அதில் முதல் வைராக்யபாதத்தில் வைராக்யாதிகளில் வைராக்யோத்பத்திப்ரகாரத்தை விசாரிக்கிறாரென்று ஸங்கதி: ॥

ஸத்த்வாத்யதிகரணத்தில் ஸஞ்ஜாதீயத்வ ஸித்தியர்த்தம் ஶக்தி ஸித்தியிருக்கையாலே இந்த அதிகரணத்தில் அத்தை ஸம்பாதித்து ஶக்தித்ரவ்யாதிவாரம் ஸ்வ ஸங்கமாய்த்தென்னு அதிகரணஸங்கதி ॥

ஸி. தேஜஸ்த்வ ஶக்த்ய ப்ரஸாதிஸம்ப்ரவிஷ்டக: ப்ரஸ்நிரஸ்வணாஹ்யா: ॥க॥

அத ஶக்திர்விசார்யதே । நநு ஶக்தியானது ஸாவயவா அன்று, ஸாவயவமில்லையென்றால் ஸாமாந்யத்துக்கு ப்ரயோஜநமில்லாத்தாலே அநாரம்பகத்வம் வரும் । அதற்காக ஶக்திக்கு ஸாவயவம் சொன்னால் ஸமவாயிகளுக்குப்போலே நஶ்வரத்வம் ப்ரஸங்கிக்கும் । ஆகையால் ஶக்திக்கு நித்யத்வம் சொல்லவொண்ணாது । இந்த விஷயத்தில் கதியென்னவென்னில் ॥

உச்யதே । இங்கு உபாதிவிஶிஷ்டஸ்வரூபாநுஸாரேண ஶக்தியானது முந்தில்லாமலிருந்தபோதிலும் உபாதாநகாரணமாலே ஸாதிக்கப்படுவதனால் ஶக்த்யந்தரமாக ஸாமாந்யாரம்பவிரோதமில்லை । இப்படியாகில் ஶக்த்யநித்யத்வ ஸம்பத்துக்கு என்னபரிஹாரமென்னில் ஸாவாதாரா ஸ்வாதீயான ஸித்தாந்தபக்ஷத்தில் ஸம்ஸாரதஶையிலுள்ள ஜ்ஞாநஸங்கோசஸம்பே விஶிஷ்டஸ்வரூபாநுஸாரேண ஶக்தியாகையாலே தாகிதகத்தில் ஜீவனுக்கு ஸத்த்வாவஸ்தையிருந்தாலும் உத்பத்தியில்லாதாப்போலே இங்கு ஸங்கோசஸம்பாதனையான ஶக்திக்கு உத்பத்தியில்லாத்தாலே நித்யத்வம் ஸித்தமாய்த்து । கிஞ்ச ஜ்ஞாநத்துக்கு ஸ்வாபாவிகமான விகாஸமானது ஸம்ஸாரதஶையில் கர்மோபாதியாலே ஸங்குசிதமாயிருக்கையாலே அந்த ஸங்கோசமானது பகவதநுக்ரஹத்தால் நிவ்ருத்தமாகும்போது ஸ்வாபாவிகமான ஜ்ஞாநவிகாஸமே விஶிஷ்டமாகிறது । இத்தையிட்டு நவ ஶக்தராவதிகளென்னுசொல்லப்பட்ட நித்யமும் ஸவாநஸ்யாயகமென்று ஶக்திஸ்வாபாவிகமான ஜ்ஞாநவ்ருத்தியைச்சொல்லுகிறஶ்ருதியாலே

நேரே சொல்லப்பட்டது । ஆகையால் ஸாயநாத்யாயாரம்பத்தில் விரோதமில்லை ॥

அதஶ்சாயநேऽபி தக்ஷிணே ॥

ஸாக்ஷாத்கர்த்தவ்யவ்ரஹ்மவிஷயஸாக்ஷாத்காரநாம்யக்ஷணர்த்தி: ஸாக்ஷாத்பதஸ்ய ப்ரஹ்ம ப்ராப்திஸாதநத்வாத் । தேவயாநகதி: ப்ரஹ்மப்ராப்திரேவ ஸாக்ஷாத் ஜ்ஞாநஸாதநபூர்வகப்ரஹ்மவித்யாத்யாயீ ॥

இந்த ஜ்ஞாநியானவன் இந்த ஸ்தூலதேஹத்தைவிட்டு தக்ஷிணாயநத்திலே தேஹத்யாகம் பண்ணினால் ஆதிவாஹிகர்களோடே கூடப்போகிறானா போகவில்லையா என்று ஸம்ஶயம் ஆதிவாஹிகர்களோடே கூடப்போகவில்லையென்று பூர்வபக்ஷம் । கர்த: போனவிடங்களிலே ஆதிவாஹிகர்கள் ஸாந்நித்யங்களாயிருக்கையாலே இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார் ।

தக்ஷிணாயநத்திலே ॥

பூர்வாதிகரணத்திலே ஸம்ஜ்ஞாதிருக்ஷரித்யாத் என்கிற ஸூத்ரத்திலே இருக்கிற அர்ச்சிராதிமார்க்கத்துக்கு அயோக்யமான தேஹத்தை தக்ஷிணாயநத்திலே என்கிற பதத்திலிருக்கிற தத்வத்தாலே பராமர்ஶிக்கிறது । தக்ஷிணம் ஸ்தூலதேஹவ்யதிரிக்தமான தேஹாதிதேஹம் அதினுடைய ப்ரவ்ருத்தியிலே ஸம்வந்திகள் பூர்வதேஹத்தில் நின்றும் நடைநடத்த ஆதிவாஹிகர்களோடே ஸம்வந்திகளான ஜீவன் । ரம்ஹதி । தேவலோகத்துக்குப்போகிறான் கர்த: । ப்ரஹ்மலோகவர்ணா ஸ்யாத் । ஸந்நாஹியிலேயிலே இருக்கிற ப்ரஹ்ம ப்ரவநங்களாலே அப்படித் தோன்னப்படுகிற தென்னபடி । ஸந்நாஹியென்று யாவது ஶாஸ்த்ரத்தில் ஶுக்லகதஹரணைய: ஸாஞாநா ஸர்வஸித்தியே என்று தொடங்கி ஓதப்படுகிறது । இதற்கயோக்யம் உபாஸகருக்கு ப்ரஹ்மப் ஸந்நிதியிலே ப்ரவ்ருத்

ன ஶ்வேதகேது என்கிற ருஷியானவர் ப்ரவாஹணரென்கிற பா
ஞ்சாலராஜாவினுடைய ஸபையை அடைந்தார் அந்த ஶ்வேத
கேதுவைக்குறித்து அந்த ராஜாவானவர் அஞ்சு ப்ரஶ்நங்களை
ப் பண்ணினார் । அதில் ஒரு ப்ரஶ்நம் வேத்த யதா பஞ்சம்யாமாஹு
தாவாப: புருஷவசஸோ பவந்தீதி । இதுக்கு அர்த்தமா
வது। ஆப: ஶ்ரத்தாஶப்தத்தாலே ப்ருதிவ்யாதிகளோடே கூடின
அப்புக்களானதுகள் க்ரமமாக பரிணமிக்கப்பட்ட ஸோமராஜ பர்
ஜந்ய ப்ருதிவீ புருஷ யோஷித்துக்களான நாலு அக்நிகளிலே ஜீவ
னோடேகூட ப்ரவிஷ்டங்களாய்க்கொண்டு ஐந்தாம் அஞ்சாவது
ஆஹுதியான யோஷித்தினுடைய யோநிப்ரவேஶத்திலே
புருஷவசஸ்களாக புருஷனென்கிற ஶப்தத்துக்கர்த்த
மாக ஆகிறதுகளென்று இந்த ப்ரஶ்நவாக்யத்துக்கர்த்தம் ।
இந்த அர்த்தத்தை அறியாமல் ஶ்வேதகேதுவானவர் தன்னுடைய
பிதாவிடத்தில் வந்துகேட்டார் । அந்தப்பிதாவும் இந்த அர்த்தத்
தை அறியாமல் இந்த ப்ரவாஹணரென்கிற ராஜாவை ஆஶ்ரயித்து
அந்த ப்ரஶ்நத்துக்கு அர்த்தத்தைச்சொல்லவேணுமென்று ப்ரா
ர்த்தித்தார் । அந்தப்பஞ்சாக்நிவித்யாநிஷ்டனான ராஜாவும் அந்த உத்தா
லகருக்கு பஞ்சாக்நிவித்யையை உபதேஶித்து, இதி து பஞ்
சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி என்று ப்ரதிவ
சநம் அருளிச்செய்தார் । ஆகையால் இப்படி ப்ரஶ்நப்ரதிவசநங்
களாலே பூதஸூக்ஷ்மங்களோடேகூடவே ஜீவன் தேஹயோகத்
துக்கு போகிறானென்று ஸித்தம் ॥

௩௩ ஆப: புருஷவசஸ: என்கிறவிடத்திலே அப்ஶப்
த்தாலே ப்ருதிவ்யாதியான பூதாந்தரங்களுக்கும் க்ரஹணமெ
ப்படிக்கூடுமென்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. த்ர்யாத்மகத்வாத்து பூயஸ்த்வாத் ॥ ௨ ॥

தாத்பர்யம் ஶங்காநிவ்ருத்த்யர்த்தம் । த்ர்யாத்மகத்வாத் த்ரிவ்ருத்
கரணத்தாலே அப்புக்கள் ப்ருதிவீதேஜோரூபமாயிருக்கை
யாலே அந்த மூனு பூதங்களிலே அப்புக்களே பூயஸ்ஸாயிரு

க்கையாலே ஸ்வபாவத்தாலே ஸம்ஸ்ருஷ்டத்வம் சொல்லப்படுகிறது । த்ரிவ்ருத்கரணமாவது ப்ருதிவ்யப்தேஜஸ்ஸுக்களை ஒவ்வொன்றையும் இரண்டாகப்பிரித்து அதில் ஸ்வஸ்வாம்ஶங்களை வைத்து அதிரிக்தமான அர்த்தாம்ஶங்களை இரண்டு இரண்டு பங்காகப் பிரித்து ப்ருதிவியினுடைய பாகாம்ஶம் ஜலத்திலும் இன்னமொரு பாகாம்ஶம் தேஜஸ்ஸிலும் அப்பினுடைய அர்த்தாம்ஶத்தில் ஒருபாகாம்ஶம் ப்ருதிவியிலும் மற்றொரு பாகாம்ஶம் தேஜஸ்ஸிலும் இப்படியே தேஜஸ்ஸினுடைய அர்த்தாம்ஶத்தில் ஒரு பாகாம்ஶம் ப்ருதிவியிலும் மற்றொருபாகாம்ஶம் ஜலத்திலும் சேர்த்து ஸம்ஶ்ரணம் பண்ணுகைதான் த்ரிவ்ருத்கரணம் இது பஞ்சீகரணத்துக்கும் உபலக்ஷணமென்று கருத்து ॥

ஸூ. ப்ராணகதேஶ்ச ॥ ௩ ॥

தமுத்க்ராமந்தம் ப்ராணோऽநூத்க்ராமதி ப்ராணமநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி என்று ப்ராணஶப்தவாச்யங்களான இந்த்ரியங்களுக்கு ஜீவனோடுகூட கமநம் சொல்லுகையாலே அந்த இந்த்ரியங்களுக்கு ஆஶ்ரயமான ஸூக்ஷ்மதேஹமும் ஜீவஸாயாத்ரிகமாய்க்கொண்டு கச்சதீதி கம்யதே । தமுத்க்ராமந்தமித்யாதிஶ்ருதிக்கு ஸ்தூலதேஹத்தை விட்டுப்போகிற அந்த ஜீவனை ப்ராணம் அநூத்க்ராமதி என்றயம் । ப்ராணவாயு கூடவேபோகிறது । ப்ராணமநூத்க்ராமந்தம் ஜீவனை அநுஸரிக்கிற ப்ராணனை ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி ஸகலமான சக்ஷுராதீந்த்ரியங்களும் அநுஸரித்துப்போகிறதாகவென்று அர்த்தம் ॥

ஸூ. ஸ்ம்ருதேஶ்ச ॥ ௪ ॥

மந:ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி என்கிற ஸ்ரீமத்கீதாவசநத்தாலும் இந்த அர்த்தம் ஸ்மரிக்கப்படுகிறது ॥

ஸூ. அக்ந்யாதிகதிஶ்ருதேரிதி சேந்ந பாக்தத்வாத் ॥ ௫ ॥

யத்ராஸ்ய புருஷஸ்ய ம்ருதஸ்யாக்நிம் வாகப்யேதி வாதம் ப்ராண: சக்ஷுராதித்யம் என்று ஶ்ரவணப்ரதேஶத்திலே வாகாதீந்த்ரிய

ங்களுக்கு அக்ந்யாதிமத்ப்ராப்தேஃ அக்நிர்வாக்பூத்வா முகம் ப்ராவிசதித்யாதி ஸ்ருதி களான அபிஷ்டாநதேவதைகளிடங்களிலே அந்வயம்சொல்லுகை யாலே இந்த்ரியங்களுக்கு ஜீவாபேக்ஷையான அதிஷ்டாநத்தைச்சொன்ன ப்ரா திக்கும் ஸ்ம்ருதிக்கும் அவ்யாப்யமும் கொள்ளவேணுமிதிசேது । அப்படி அவ்யாப்யமும் சொல்லவொண்ணாது । காரதஃ ஸாக்ஷாத் தேஷ்யஃ தேவதாஸ்ஸ பஞ்சேந்த்ரியாணாம் என்று அந்வயத்தை அடை யாமலிருக்கிற தேவதைகளோடேகூட ஸம்பந்தத்தாலே அக்நிவாயவ்யாதிப்ரவேசநத்துக்கும் ஸாக்ஷாத் அவ்யா யமாக அதாவது அஸ்ய ப்ராணஸ்ய ப்ருதிவ்யாதி ப்ரகாசத்வேந இந்த ஜீவனுடைய போகோபகரணவ்யாபாரங்கள் அக்ந்யாதி தேவதைகளிலே ஆயிக்கிறதுகள் என்று அவ்யாப்யமும் கொள்ள வேணும் । வாசாதிஸ்வருபங்களுக்கு ஊர்த்வகாளில் தேவதை களுக்கும் ஸம்பந்திக்கும் । ஆகையாலே இந்த்ரியங்க ளுக்கு ஜீவனோடே ஸம்பந்தப்ராப்தியை அவ்யாப்யமாகநிர்வ ஹிக்கவேணுமென்று கருத்து ॥

ஸப்தகதேர்விசேஷிதத்வாச்ச [illegible] ॥௫॥

ஸப்த ப்ராணாஃ ப்ரபவந்தி இத்யாதிகளுக்குள்ளே ஸப்தமான ப்ராணேஷு அந்யத்வத்தில் அஸ்ய ப்ராணஸ்ய ப்ராணர்களுக்கு ஸ்வா த்மோத்பத்தி ஸ்ரவணமில்லாமையாலே ஸப்தாஹ்வஸம்ஸ்பர்சங்க ளான ப்ராணங்கள் போகுறதென்னவொண்ணாது । தஸ்மிந் தஸ்மிந் தேவாஃ ப்ராணாஃ ஜாயந்தே என்று ப்ரதேசமன்றே ஸ்ரோ த்ரமாக சொல்லப்படுகிறது । தேவாஃ ப்ராணாஃ தஸ்மிந் தஸ்மிந் அந்த ப்ராணமாகிற அக்நியில் ஸப்தஸப்த ஸம்ஸ்தாபநா ஸப்த ஸம்ஸ்காரங்களை ஜீவனை ஜாயந்தி பக்ஷிவத்தி என்று ஸ்ருதியும் । ஆகையால் ஸுத்ரம் எப்படிசொல்லக்கூடும் இதிசே து ததாவதி । அந்த ப்ராணங்களே ஸப்தாஸ்ரயத்தாலே சொல் லப்படுகிறதுகள். உபபத்தேஃ ப்ரவேசநத்துக்கு ப்ரஸ்தோதா டே உபபத்தியிருக்கையாலே, சேதஃபரா வஸ்தூதாதோஷதா வஹவம் ப்ரயோஷபரிஷா ஸவதி என்று ப்ராணங்களுக்கு ப்ர

[illegible] எப்படியென்னு [illegible] பண்ணிநால் அதற்க்கு [illegible] சொல்லுகிற, [illegible] ஜீவாத்மாக்களுக்கு [illegible] களைச்சொல்லுகை உபபந்நமாயிருக்கிறது । [illegible] என்னு [illegible] ப்ரஸ்துத்தாலே [illegible] க்கப்பட்டது ॥

[illegible] ॥௬॥

[illegible] என்கிற வாக்யங்களில் [illegible] களிலே [illegible] க்களுக்கே [illegible] மாகையாலே ஜீவனுக்கு [illegible] மல்லாமையாலே [illegible] ஜீவன் [illegible] என்னு சொல்லவொண்ணாது । [illegible] இந்த [illegible] யில் [illegible] வாக்யங்களாலே [illegible] த்திலிருந்து [illegible] க்கிற ஜீவர்கள் [illegible] த்திலேபோய் [illegible] னைப்போலே [illegible] மான [illegible] த்தை [illegible] க்கிறார்கள் என்னு சொல்லுகையாலே [illegible] என்னு [illegible] வாக்யத்திலே சொல்லப்பட்ட [illegible] யாலே [illegible] த்தாலே [illegible] ஜீவனே சொல்லப்படுகிறனென்னு தோன்றுகிறது ॥

[illegible] மேல்வாக்யங்களிலும், [illegible] என்னு [illegible] த்தாலே [illegible] த்தை அடைந்தவனுக்கு [illegible] சொல்லுகையாலே [illegible] ஜீவனுக்கு [illegible] கூடாமையாலே [illegible] வாக்யத்திலே ஜீவன் சொல்லப்படவில்லை என்கிற [illegible] க்கிறார் ॥

[illegible] ॥௭॥

[illegible]

என்று இஷ்டாதிகாரிகளான ஜீவர்களுக்கு தேவஸந்நிதிவர்த்தி மானது ஸாத்யா ஏகாவ்யாயம் | அநாத்மவிதஸ், ஸ்வர்க்காதிகளை உத்தேசித்து யஜ்ஞாதிகளைப்பண்ணுகிற ஜீவர்கள் ஸாக்ஷாத்வித்துக் களல்லாமையாலே இந்த்ராதிதேவர்களுக்கு சொல்லித்து செய்வார் களென்கிற வஸிஷ்டபத்தாலே தேவா ஹக்ஷந்தி என்னுசொல்லித் து | ததா ஹி தர்ஶயதி | அநாத்மவித்துக்களான கேவலகர்மிகள் இந்த்ராதிதேவர்களை ப்ராபித்து அந்த இந்த்ராதிகளுக்கு உப காரிகளாக ஸவிப்பாரென்று ப்ரதர்ஶிப்பிக்கிறது ஶ்ருதி | யதா பஶுரேவம் ஸ தேவாநாமென்று இதுக்கர்த்தம் | ஸ: இந் த்ராதிகளை பஜிக்கிற அந்தபரமாத்ம யதா பஶு: ஏவம் மானது கர்ஷகர்களுக்கு எப்படி உழைக்கிறதோ ஸவம் தேவாநாம் அப்படியே தேவர்களுக்குபிரயசப்படுபிருக்கிறானென்னபடி. ஆகை யாலே ஸ்ருதிஸ்ம்ருதிகளோடே ஸம்பரிஷ்கருக்கொண்டு ஜீவநு ஸ்வர்க்கத்துக்கு போகுறானென்று ஸித்தமாய்த்து | இந்த பஞ்சாக்நிவித்யையிலே ப்ரக்ருதிவிலக்ஷணனான பரிஶுத்தாத் ஸ்வரூபத்தை ப்ரதானமாக உபாஸிக்கவேணுமென்று விவ க்ஷிதம் | இந்தவித்யைக்கு ஹேதும் ஸ்வாத்மவிஷயகபரிஶுத்தத்வ மாக பரிசுத்தணுபநுஸந்தானம் | உபகோஸலவித்யாநிஷ்டனுக்கு ஸ்வாதிஶயப்ராப்தியானது அவாந்தரபலமானப்போலே இந்த பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கு ஸ்வாத்மாநுபவம் அவாந்தரபலமென் னுதிருவுள்ளம் ||

இந்த பஞ்சாக்நிவித்யையில் பஞ்சாக்நிகள் எதுகள் ஹோ த்ரவஸ்துக்கள் எதுகள் ஹோதாக்கள் யார்களென்றால் இந்த விஷயத்தில் ஸர்வஜ்ஞ ப்ரத்யக்ஷமாக ஸூர்யோதய ஶோ பிதத்யாக்யதே |

த்ரீணி: பஞ்சாக்நிவித்யா ப்ரஸ்துத ஸர்வேஷா யோஷித்ப்ரேதவதேதாநு பஞ்சாக்நீநு க்ரமேண பரிகரஸஹி தாம்ஸ்தேஷு பஞ்சாக்நிவித்யா | ஶ்ரத்தாஞ்ச ஸ்ருதிஸ்ம்ருதிஷு க ஹோதாரம் ஸோமவ்ருஷ்ட்யன்நரேதோ ரூபம் ஹவ்யம் ஸ ஜீவம் தத்பர்யாயேண ஜாஹ்நவீதி பாவயதி ||

இதில் ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷு: ஜிஹ்வா நாஸிகா
என்று அஞ்சு இந்த்³ரியங்கள் ஸாத்த்விகாஹங்காரஸஹிதமென்று இந்த்³ரியங்களு
க்கு ஜ்ஞாநகாரணஸாஹித்யம் சொல்லப்படுகிறது । இந்த இந்த்³ரியங்களில்
க்³ராஹ்யவஸ்துக்கள் ஶப்³த³ ஸ்பர்ஶ ரூப ரஸ க³ந்த⁴ங்கள்
இந்த அஞ்சுகள் இங்கு முதல்சொல்லிய ஶ்ரோத்ராதி³ஜ்ஞாநேந்த்³ரிய
க்³ராஹ்யமானது ஶ்ரோத்ரேந்த்³ரியமான இந்த்³ரியில் க்³ராஹ்யமாய்க்கொ
ண்டு ஶப்³த³மென்று ஆகாஶகுணமாய் பரிணமித்து ஶ்ரோத்
ரேந்த்³ரியத்தில் க்³ராஹ்யமாகிறது । அந்த ஶப்³த³மானது ஸ்பர்ஶமாக
பரிணமித்து த்வகி³ந்த்³ரியத்தில் க்³ராஹ்யமாகிறது । ஸ்பர்ஶமா
னது ரூபமாய் பரிணமித்து சக்ஷுரிந்த்³ரியத்தில் க்³ராஹ்ய
மாகிறது ரூபமானது ரஸமாய் பரிணமித்து ஜிஹ்
வேந்த்³ரியத்தில் க்³ராஹ்யமாகிறது । இப்படி க்ரமமாக ரஸக³ந்த⁴ங்க
ளாக பரிணதமான ஜீவஸஹிதமான தத்த்வங்களை ஸாதா
க்களான ஸம்ஸாரிகளாத்மாக்கள் போ⁴க³ம் பண்ணுகிறதுகள்
என்று தாத்பர்யம் ।

வி. க்ருதாக்ருதே ப்ரஸங்கா³ப்⁴யாம் த்³ருஷ்டஶ்ருதிப்ரமாணம்
யதிஷ்டதே வசோ ॥ அ ॥

இப்படி ப்ரக்ருதிகாரணத்தில் பாவித்த ஸம்ஸாரப்ரவ்ருத்தி
த்தை ஸாதித்து இந்த காரணத்திலே கர்மஸம்ஸாரப்ரவ்ருத்த
தை ஸாதிக்கிறாரென்று ஸங்க³தி ॥

ப்ரக்ருதிஸம்ப³ந்த⁴த்தாலே ஸம்ஸாரத்துக்குப்போன ஜீவாதிகா
ரியான ஜீவன் ப்ராப்தவைராக்³யத்துக்கு வருகிற ஸமயத்
தில் ஸம்ஸாரத்திலே ப்ராப்யமாய் ஸம்பந்நமான கர்மத்தோடேகூட
வருகிறானோ இல்லையா என்று ஸம்ஶயம் । இல்லையென்று ப்ரதி
பக்ஷம் । ஏதத், யாவத்ஸம்பாதமுஷித்வா, ப்ராப்யாந்தம் கர்மண
இத்யாதிஶ்ருதிகளாலே க்ருதகர்மங்களும் அநுப⁴விக்கப்படுமென்
னு சொல்லுகையாலென்னபடி । இந்த பக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

க்ருதாத்யயே அநுஶயவாந் ॥

க்ருதாத்யயே க்ருதஸ்ய அத்யயே ஸ்வக்ருதகர்மத்தினு
டைய நாஶமானது போ⁴க³த்தால் வந்தவளவிலே அநு

ஶேஷவாநு யாவத்ஸம்பாதமுஷித்வா ஶ்ருதி அநுஶயஜதி ப்ராப்தே
யால் அநுஶயஶப்தம் ஸாகாங்க்ஷ கர்மத்தைச்சொல்லுகிறது ।
அந்த ஸாவஶேஷ கர்மஸஹிதனாய்க்கொண்டு ஸம்ஸ்ருதியில்ஜநிக்கிறான்
அதஃ த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் ஶ்ருதிஸ்ம்ருதிகளாலென்னபடி ।
ஶ்ருதியாவது, தத்ய இஹ ரமணீயசரணாஃ அப்யாஶோ ஹ யத்தே
ரமணீயாம் யோநிமாபத்யேரந் ப்ராஹ்மணயோநிம் க்ஷத்ரியயோநிம் ।
இந்த ஶ்ருதிக்கு அர்த்தம் । தத், ய, இஹ, ரமணீயசரணாஃ, அ
ப்யாஶஃ, ஹ, யத், தே, என்று பதச்சேதம் । ய ரமணீயசரணாஃ
புண்யகர்மத்தை அநுஷ்டித்தவர் யாவரோ, தே அவர்கள் யத்
ப்ரஸித்தம் ; ஸ்வர்காதிஸாதநம் யத் தத் அந்த ஸ்வர்காதிஸாதநத்தை
அப்யாஶஃ அப்யாஸகாரஃ அந்த ஸ்வர்காதிஸாதநத்தை அநுஷ்டி
த்துவருகிறவர்களாய்க்கொண்டு ஹ என்று ப்ரஸித்தம் । ஸம்ஸ்
ஸ்ருதிக்கு வரும்போது ரமணீயாம்யோநிம் ப்ராஹ்மணாதியான
வர்ணயோநியை ப்ராப்நுவந்தி அடைகிறார்களென்று அர்த்தம் ।
ஸ்ம்ருதியாவது, ததஃ பரிவ்ருத்தௌ கர்மபலஶேஷேண ஜாதிம்
ரூபம் வர்ணம் வித்தம் வ்ருத்தம் ஶ்ருதம் அநுஷ்டிதம் ஆயுஷ்யம் ; அர்த்தம் :
ததஃ பரிவ்ருத்தௌ அந்தஸ்வர்கத்தில்நின்றும் திரும்பிவரும்போது
ஸ்வர்காநுபவஶேஷமான கர்மபலத்தினுடைய ஶேஷத்தோடே
கூட நல்லஜாதி நல்லரூபம் ஐஶ்வர்யாதிகளை அடைவார்களென்று
அர்த்தம் । யதா இதம் யதேதம் ஸ்வர்கத்துக்கு எந்த மார்க்கத்தா
லே போகிறானோ, அந்த மார்க்க ப்ரகாரமாயும் அநேவஞ்ச அந்த
ப்ரகாரம் தவிர வேறு ப்ரகாரத்தாலும் வருகிறான் । ஸம்ஸ்தா
நத்தில்நின்றும் ஆகாஶத்தை அடைகையாலே யதேதம் வாயு
தூமாதிகளை அடைகையாலே அநேவஞ்ச அவரோஹதீ
த்யர்த்தஃ । அநுஶயஶப்தம் ஜந்மஹரணத்தையும் சேஷஶப்தம் லேஶ
நாஶத்தையும் சொல்லுவதனாலே அர்த்தப்ரஹத்தால் வைர
ஶக்தியில்லையென்று கருத்து ॥

யதேதம் ராத்ரிஞ் வக்ஷா ப்ரக்ருதகர்மாஷிதம் ஊக்ஷணாவ்ருத்தி
மாஸாநு ஶப்தாப்யாம் விதாநாம் மநுஷ்யதர்சநே த்ருஷ்டவ்ருத்தி
கம் । த்ருஷ்டவ்ருத்தாத் ரமணீயாம் யோநிமாபத்யேரந்நிதி

த்ருஷ்டோவா ஸ்ம்ருத்யநுபாலிதோ சஸ்ம்ருதியே ஜநநம் யாதநா ப்ரவர்த்தே ॥

ஸூ. சரணாதிதி சேந்நோபலக்ஷணார்த்தேதி

கார்ஷ்ணாஜினி: ॥ ௯ ॥

சரணாத் ரமணீயசரணா: ரமணீயாம் யோநிமாபத்யேரந் என்கிற ஶ்ருதியிலே ரமணீயமாய் ஸ்ம்ருதிவிஹிதமான ஸதாசாரத்தாலே ப்ராஹ்மணாதியோனியை அடைவர்களென்னு சொல்லுகையாலே ஶாஸ்த்ரீயகர்மத்தாலே ஸதஸத்யோநிப்ராப்தி இல்லை। இதி சேந்ந ஆசாரஶ்ருதியானது கர்மோபலக்ஷணார்த்தமென்னு கார்ஷ்ணாஜினிருஷியுடைய மதம்। ஸதாசாரத்தை அங்கமாகவுடைய யஜ்ஞாதிவர்ணகர்மங்களாலே ஸத்யோநிப்ராப்தியென்னு கருத்து ॥

இந்த அர்த்தத்தை மேல்ஸூத்ரத்திலே சொல்லுகிறார்।

ஸூ. ஆநர்த்தக்யமிதி சேந்ந ததபேக்ஷத்வாத் ॥௧௦॥

ஸ்ம்ருதிவிஹிதமான ஆசாரம் ஸாதநமன்றாகில் அதற்கு ஆநர்த்தக்யம் ப்ரஸங்கிக்குமிதி சேந்ந। ததபேக்ஷத்வாத்। அந்த ஆசாரத்தை அங்கமாக அபேக்ஷித்துக்கொண்டே வர்ணகர்மம் ஸாதனத்தை ஸாதிக்கும்। ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்ய மநர்ஹஸ்ஸர்வகர்மஸு யென்னன்றோ ஸ்ம்ருதி சொல்லுகிறதுயென்னு கார்ஷ்ணாஜினிமதம் ॥

ஸூ. ஸுக்ருததுஷ்க்ருதே ஏவேதி து பாதரி: ॥௧௧॥

து ஶப்த: கார்ஷ்ணாஜினிமதநிவ்ருத்த்யர்த்த:। ரமணீயசரணா:, கபூயசரணா: யென்கிற ஶ்ருதியிலே ரமணீயசரண கபூயசரண ஶப்தங்களாலே புண்யம் கர்மாசரதி பாபகர்மாசரதி யென்கிற ப்ரயோகப்ரஸித்தியாலே ஸுக்ருததுஷ்க்ருதரூபங்களான கர்மங்களே ப்ரதிபாதிக்கப்படுகிறது; அவை தவிர ஸதாசாரமும் துராசாரமும் சொல்லப்படவில்லை। இதி பாதரி:, யென்னு பாதரிமதம்। இந்த மதமே ஸூத்ரகாரத்துக்கும் திருவுள்ளம்। கர்மங்களாசாரத்தை அபேக்ஷிக்கு

மென்று ப்ரதிபக்ஷ ஸூத்ரத்திலே காஷ்ணாஜினி சொன்ன அர்த்தமும் ஸூத்ரகாரருக்குத் திருவுள்ளம் ।

கேவலேஷ்டாபூர்த்தகாரிகள் சந்த்ரனை அடைந்து கர்மசேஷத்துடன் நிவர்த்திக்கிறார்களென்று முன்சொல்லப்பட்டது । இந்த அதிகரணத்தில் விஹிதாகரணப்ரதிஷித்தாசரணமான அநிஷ்டாதிகாரிகளும் சந்த்ரனை அடைகிறார்களா । இல்லையா வென்று ஸம்சயமுண்டாக ஸம்சயம் அநிஷ்டாதிகாரிகளும் யமயாதனையை அனுபவித்து சந்த்ரனை அடைந்து பூர்ணமாகவே ப்ரதிசந்தி ஸம்சயம் சந்த்ரம் ஸர்வே கச்சந்தி இதி பூர்வபக்ஷம் । கௌஷீதகிகள் "யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி" யென்கிற ஶ்ருதியிலே இந்த லோகத்தில் நின்றும் தேஹத்தை விட்டுப்போகிற ப்ராணிகளெல்லாரும் சந்த்ரனை அடைகிறார்களென்று சொல்லுகையாலேயென்னபடி । இந்த பூர்வபக்ஷத்தை ஐந்து ஸூத்ரங்களாலே உபந்யஸிக்கிறார் ।

ஸூ. அநிஷ்டாதிகாரிணாமபி ச ஶ்ருதம் ॥௧௨॥

ப்ராணத்தைவிட்டு அநிஷ்டங்களையும் பண்ணுகிற பாபிகளுக்கு சந்த்ரகமனமுண்டென்று கௌஷீதகிகளுடைய ஶ்ருதியிலே ஶ்ருதம் ।

ஸூ. ஸம்யமநே த்வநுபூயேதரேஷாமாரோஹாவரோஹௌ தத்கதிதர்ஶநாத் ॥௧௩॥

து ஶப்தம் ப்ராணப்ரஸாதிகளுக்கும் பாபிகளுக்கும் ஒரு விசேஷத்தை த்யோதிப்பிக்கிறது ।

அதாவது இதரேஷாம் ஸம்யமநே அநுபூய ஆரோஹாவரோஹௌ பவத: பாபிகளுக்கும் யமனுடைய ஶாஸநத்தாலே பாபபலத்தை அனுபவித்து அநந்தரம் சந்த்ரனை அடைந்து அவனிடத்தில் நின்றும் அவரோஹமுண்டாகிறது । குத: தத்கதிதர்ஶநாத் । பாபிகளுக்கு யமஸதநத்தில் கதிசொல்லுகையாலே வைவஸ்வதம் ஸங்கமநம் ஜநாநாம் யமம் ராஜாநம் என்கிற ஶ்ருதியில் ப்ராணிகளுக்கு யமகமநம் ஶ்ருதமென்னபடி ।

ஸூ. ஸ்யாத்தேவ ॥ ௧௪ ॥

... என்று ... ஸ்ருதிகளும் ஸ்மரிக்கிறார்கள் ।

ஸூ. அபிஸப்த ॥ ௧௫ ॥

ரௌரவாதிகளான ஸப்த நரகங்களும் பாபிகளுக்கு ... என்னும் ரிஷிகள் ஸ்மரிக்கிறார்கள் ।

ஸூ. தத்ராபி தத்வ்யாபாராதவிரோத: ॥ ௧௬ ॥

தத்ராபி அந்த யேழு நரகங்களிலேயும் தத்வ்யாபாரா ... யமனுடைய ஆஜ்ஞையாலேதானே ... அவிரோத: ... என்று முன்சொன்ன ... க்கு விரோதமில்லை । ஆகையால் பாபிகளுக்கு ... ங்களை ... ஸம்ஹாராரோஹணாவரோஹணங்கள் ... ங்கள் ।

இந்த ஸூத்ரத்தை நிரஸிக்கிறார் ।

ஸூ. வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத் ॥ ௧௭ ॥

து ஶப்த: ஸூத்ர ... ॥

பாபிகளுக்கு ... யேப்படி இல்லையோ அப்படியே ... ஸம்ஹாராவரோஹணமு மில்லை வித்யாகர்மணோ: அந்த ... யும் ... யும் ... மிருக்கையாலென்னபடி । அதெங்கனேயென்னில் । ... இப்படி ... மாயிருக்கையாலென்னபடி । ...
... ங்களை யெடுத்து ... ளாக ... யும் ... யும் ... கையாலென்னபடி । ... அந்த ... த்

ஸைத பரமபுருஷாத்மகமாக உபாஸிக்கிற பஞ்சாக்நிவித்யாநிஷ்டர்கள் எவர்களோ, யே சேமே(அ)ரண்யே ச்ரத்தா தப இத்யுபாஸதே வநத்தில்போய் ஸந்யஸித்து ச்ரத்தாபூர்வகமாக ப்ரஹ்மயோகஹேதவ: என்கிறபடியே தபச்சப்தவாச்யனான பரமபுருஷனை ஜீவசரீரகனாக உபாஸிக்கிற ஸத்வித்யாதஹரவித்யாநிஷ்டரான உபாஸகர் எவர்களோ அந்த உபயவிதர்களான ஸாதகர்களும் அர்ச்சிஷமபிஸம்பவந்தி அர்ச்சிராதியாலே பரமபதத்தில்சென்று பரமபுருஷனை அநுபவிப்பார்கள் । அத ய இமே க்ராமே க்ராமத்திலிருந்து இஷ்டம் யாகாதி பூர்த்தம் கூபதடாகாதி தத்தம் தாநம் இஷ்டாதிகாரிகள் தூமாதிமார்க்கத்தாலே ஸ்வர்க்கத்தை ப்ராபித்து புநராவர்த்தந்தே என்று ச்ருத்யர்த்தம் ॥

நநு பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி என்கிற ச்ருதியிலே யோஷித்ப்ரவேசத்திலே தேஹாரம்பம் சொல்லுகையாலே அந்த பஞ்சமாஹுதியும் ஸம்ஸ்ருஷ்டியை முன்னிட்டிருக்குமென்று சொல்லுகையாலே பாபிகளுக்கும் தேஹாரம்பத்தின்பொருட்டு சந்த்ரகமநமவச்யம் ஸித்திக்குமென்கிற சங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. ந த்ருதீயே ததோபலப்தே: ॥கஅ॥

ந த்ருதீயே । வித்யாநிஷ்டகர்மநிஷ்டவ்யதிரிக்தரான பாபிகள் த்ருதீயஸ்தாநம் । த்ருதீயஸ்தாநமென்றுசொல்லப்பட்ட பாபிகளுக்கு தேஹாரம்பார்த்தமாக பஞ்சமாஹுத்யபேக்ஷையில்லை. குத: । ததோபலப்தே: । அப்படி ச்ருதியிலே தோன்றுகையாலே என்றபடி । பஞ்சாக்நிவித்யையில் பாஞ்சாலராஜாவானவர், வேத்த யதிதோऽதி ப்ரஜா: ப்ரயந்தி இத்யாதிவாக்யத்தால் அஞ்சு ப்ரகாரமாய் ப்ரச்நம் பண்ணினார் । அந்த ப்ரச்நமென்னவென்னில் இந்த லோகத்தில்நின்றும் பரலோகத்துக்குப்போகிற ப்ரகாரத்தை அறிவீரோ । அவிடத்தில்நின்றும் இந்த லோகத்துக்கு வருகிற ப்ரகாரம் தெரியுமா । தேவயாநத்துக்கும் பித்ருயாநத்துக்கும் வைலக்ஷண்யத்தை அறிவீரோ, ஸ்வர்க்கலோகம் ஸம்பூர்த்தி-

மாகாமைக்கு ஹேதுவை அறியீரா, பஞ்சமாஹுதியில் அப்புக்கள் புருஷனாக பரிணமிக்கும் விஷயம் தெரியுமா என்னு ப்ரஶ்நம் அஞ்சு ப்ரகாரம் । இந்த ப்ரஶ்நங்களுக்கு அந்த பாஞ்சாலராஜாவே உத்தரம் சொன்னார் । அதில், வேத்த யதா அஸௌ லோகோ ந ஸம்பூர்யத இதி என்னு ஸ்வர்கலோகத்தை ப்ராபியாதவர் எவர்களெங்கிற ப்ரஶ்நத்தினுடைய ப்ரதிவசநரூபமான அதைதயோ: பதோ: ந கதரேண ச தாநீமாநி க்ஷுத்ராணி அஸக்ருதாவர்த்தீநி பூதாநி பவந்தி ஜாயஸ்வ ம்ரியஸ்வ இதி ஏதத் த்ருதீயம் ஸ்தாநம் தேநாஸௌ லோகோ ந ஸம்பூர்யத இதியெங்கிற வாக்யத்திலே த்ருதீயஸ்தாநஶப்தவாச்யரான பாபிகள் தேவயாநபித்ருயாநமார்க்கங்களிலே போகாமல் நரகங்களை அநுபவித்து அஸக்ருஜ்ஜநநமரணங்களை அடைகிறார்கள் பஹுஜநங்கள் । அதனாலே ஸ்வர்கலோகம் பூர்ணமாகவில்லை என்னுசொல்லுகையாலே பாபிகளுடைய தேஹப்ராப்திக்கு பஞ்சமாஹுத்யபேக்ஷையில்லையென்னு தோணுகிறது ॥

ஸூ. ஸ்மர்யதே஽பி ச லோகே ॥௧௯॥

இந்த அர்த்தம் லோகத்திலும் த்ரௌபதீத்ருஷ்டத்யும்நாதிகளான புண்யகீர்த்திகளுக்கு பஞ்சமாஹுதிரூபமான யோஷித்ப்ராப்தி ஸம்பந்தமின்றிக்கே அக்நியில்நின்னும் உத்பத்தியானது மஹாபாரதத்தில் ஸ்மரிக்கப்படுகிறது ॥

ஸூ. தர்ஶநாச்ச ॥௨௦॥

தேஷாம் கல்வேஷாம் பூதாநாம் த்ரீண்யேவ பீஜாநி பவந்தி ஆண்டஜம், ஜீவஜம், உத்பிஜ்ஜம் என்கிற ஶ்ருதியில் மஶகாதிகளான ஸ்வேதஜத்துக்கும் தருகுல்மாதிகளான உத்பிஜ்ஜத்துக்கும் தேஹாரம்பாயமாக பஞ்சமாஹுத்யபேக்ஷை இல்லையென்னு சொல்லப்படுகிறது । ஆண்டஜம், ஜீவஜமுத்பிஜ்ஜமென்கிற ஶ்ருதியிலே பேன்முதலான ஸ்வேதஜஜந்துக்களுக்கும் பரிக்ரஹமெப்படியென்கிற ஶங்கையை பரிஹரிக்கிறார் ॥

ஸூ. த்ருதீயஶப்தாவரோதஸ்ஸம்ஶோகஜஸ்ய ॥௨௧॥

உத்பிஜ்ஜமென்னு சொன்ன த்ருதீயஶப்தத்தாலே ஸம்ஶோகஜத்துக்கு ஸ்வேதஜமான ஜந்துவுக்கு அவரோத: ஸங்க்ரஹணம் விவக்ஷிதம் । அத: பாபிகளுக்கு சந்த்ராரோஹாவரோஹங்கள் இல்லையாதென்னு விவக்ஷிதம் ॥ ௩ ॥

ஸூ. தத்ஸ்வாபாவ்யாபத்திருபபத்தே: ॥௨௨॥

யதோக்தமார்க்கத்தாலே சந்த்ரனை ப்ராபித்த புண்யக்ருத்துக்கு அவரோஹப்ரகாரமோதப்படுகிறது । எங்ஙனேயென்னில், யதேதமாகாஶமாகாஶாத்வாயும் வாயுர்பூத்வா தூமோ பவதி தூமோ பூத்வா அப்ரம் பவதி அப்ரம் பூத்வா மேகோ பவதி மேகோ பூத்வா ப்ரவர்ஷதி என்கிற ஶ்ருதியிலே சொல்லுகிற ஆகாஶாதிபாவமானது தேவமநுஷ்யாதிபாவம்போலே ஆகாஶாதிஶரீரதயா ஜநநரூபமோ । உத ஆகாஶாதிஸாத்ருஶ்யாபத்திரூபமோ என்னு ஸம்ஶயம் । ஆகாஶாதிஶரீரகத்வரூபமென்னு பூர்வபக்ஷம் । தேவா: ஶ்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதே: ஸோமோ ராஜா ஸம்பவதி என்னுசொன்ன ஸோமபாவம்போலவே ஆகாஶபாவம்சொல்லப்படுகிறது । ஸோமபாவமாவது ஸஜாதீயதேஹவத்வம் அப்படியே । ஆகாஶாதிஶரீரத்வம் ப்ராப்தமிதி இந்த பக்ஷத்தை நிரஸிக்கிறார் ॥

தத்ஸ்வாபாவ்யாபத்திருபபத்தே: ॥

அவரோஹணம் பண்ணுகிறஜீவனுக்கு ஆகாஶவாய்வாதிபாவம் தத்ஸ்வாபாவ்யாபத்தி: ஆகாஶாதிஸாத்ருஶ்யாபத்திரேவ நது தச்சரீரகத்வம் குத: உபபத்தே: ஸுகது:கானுபவத்தினுடைய அபாவத்துக்கு உபபத்தியிருக்கையாலே ஸோமாதிபாவத்திலுண்டான ஸுகது:கானுபவம் ஆகாஶாதிபாவத்திலில்லாத்தால் ஆகாஶாதி ஸாத்ருஶ்யாபத்திதானென்று கருத்து ॥ ௪ ॥

நாதிசிரேணவிஶேஷாத் ॥

